சிலை எழுபது

...ம் 68-ம் பாடலிற்காண்க

வன்னிகுலமித்திரன்

...ப்பிரமணிய நாயகர்

பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

உ

கடவுள் துணை.

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர்

வன்னிகுல க்ஷத்திரியர்கள் பேரில் பாடிய

சிலை எழுபது

மூலமும் -- உரையும்.

தஞ்சை ஜில்லா நன்னிலம் தாலுக்கா பேழைக்குடி

வித்துவான், ம. துரைசாமி நாயகர் அவர்கள்

எழுதிய

தெளிபொருள் விளக்கவுரை.

"வன்னிகுல மித்திரன்" ஆசிரியர்

ஆ. சுப்பிரமணிய நாயகர் அவர்கள்

எழுதிய

வன்னி மன்னர் சரித்திரமும் அடங்கியது.

சென்னை - சூளை,

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தாரால்

வெளியிடப்பெற்றது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1947 [விலை ரூபாய் 2.

உரிமை யுரை

சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க
ஸ்தாபகரும், அதனை வளர்க்க அரும்பாடு
பட்டுப் பொன்னும் உழைப்பும் பொருந்த
நல்கி வன்னிய உலகெலாம் வாழ்த்
தப் பெற்றவருமாகிய கலி
கால வன்னிகுல கர்ணவ
தார ஸ்ரீமான்,

வன்னி குலோத்தாரணர்

கா. கோபால நாயகர் அவர்கள்

தனக்குக் கைகூடிய காலத்திலேயே சிலை எழுபதிற்கு உரை எழுதித் தந்தால் அச்சிட்டுத் தருகிறேனென்று வற்புறுத்தி வந்ததாய் அறிகிறேம். அப்புண்ணியசீலர் மறைந்த பிறகு இந்நூல் வெளிவருவதால்அவரது திருநாமம் ஒவ்வொரு வன்னிகுல நண்பர்களின் உள்ளத்திலும் நின்று நிலைக்க இந்நூல் அவருக்கு உரிமையாக்கப் பெற்றது.

S. B PRESS, CHOOLAI. MADRAS, P.I.C. Ms. 18, 4-9-47 C. 750

வன்னிகுலோத்தாரணர்

ஸ்ரீமான். கா. கோபால நாயகர் அவர்கள்

உ

முருகன் துணை.

முகவுரை

திருவோங்கும் சென்னைமா நகரில் இராயபுரத்தில் வாழ்ந்திருந்த வன்னிகுல வித்துவான் திருவாளர் குண்ணம் முனுசாமிப் பிள்ளை அவர்களால் "ஜாதி சங்கிரக சாரம்" என்னும் நூல் எழுதப்பெற்றது. அக்காலத்தில் மிக்க செல்வாக்குடன் சென்னையம்பதியிலிருந்த,

பொய்யிலி ஞானப் புகழுடம்பாக் கொளும்
செய்யவள் வாழ்நாட்டுச் சிவபாத பூபனும்,
வையகம் புரக்கும் மகாராணி தந்தசீர்
மெய்யினிற் றரித்த வீராசாமி வேளும்,
அரசர்தங் குலத்தோ ரணிவரு மிழைத்த
வரமெலாம் வடிவாய் வருமாண்டி யப்பனும்,
இந்திரனுன விருநிதி படைத்த
செந்திரு வாழ்சேர் செங்கல்வ ராயனும்,
வேங்கடா சலன்றருள் விருப்புட னேற்றும்
வேங்கடா சலனுடன் மேற்சொன்ன ஐவரும்,

கூடி ஆலோசித்து இற்றைக்கு 75 வருடங்களுக்கு முன் அந்நூலை வெளிப்படுத்தினர். அப்புத்தகம் அக்காலத்திருந்த ஜாதீய எழுச்சிக்குத் தக்க ஆதாரமாக இருந்தது.

அந்நூலைப் பார்வையிட்ட வன்னிகுலோத்தாரணர். கா. கோபால நாயகர் அவர்கள் நம்மவரின் முற்கால தற்கால நிலைமையை உணர்ந்து முன்னேற்றத்திற்கென பல பேருடைய ஆதரவையும் பெற்று 59 வருடத்திற்கு முன் சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்கத்தை ஸ்தாபித்தனர். அச்சங்கம் ஏற்பட்ட பின்பு அவர் உதவியால் மகா சங்க உள்ளூர் காரியதரிசியாக இருந்த திருவாளர் ஐயாக்கண்ணு நாயகர் B. A. அவர்களால் ஆங்கிலத்தில் வன்னிகுல விளக்கமும், மகா சங்க பிரதேச காரியதரிசியாக இருந்த திருவாளர் கா. அண்ணுசாமி நாயக

கௌரவ ஸ்தானங்களை அடைந்தனர். அதன் பலனாக நாளதும் பலர் பல தேர்தல்களில் வெற்றிபெற்று வருகிறார்கள்.

வன்னிகுல மாணவர் விடுதி:—1913-ம் ஆு வன்னிகுல மித்திரன் பத்திரிகையுடன் சென்னையில் சிறு முயற்சியாக ஓர் மாணவர் விடுதியை நிறுவினேன். அதில் கோயம்புத்தூர், சேலம், தென்னாற்காடு, வடார்காடு செங்கல்பட்டு, சென்னை முதலிய இடங்களிலிருந்து சிலர், வந்து தங்கி வாசித்தனர். அவ் விடுதி 1926 ஆு வரையில் நடைபெற்றது. அதில் தங்கிப் படித்தவர்களில் இரண்டு பேர் வெட்டர்னரி சர்ஜன்களாகவும், இரண்டு பேர் வக்கீல்களாகவும், ஒருவர் டாக்டராகவும், மற்றொருவர் ரெவின்யூ இலாக்காவில் அமர்ந்தும், சிலர் பட்டம் பெற்று நல்ல நிலைமையில் இருப்பதையும் காண அதுவே எனது குல ஊழியத்தின் பலனாக எண்ணிக் களிபேருவகை எய்துகின்றேன்.

அக்காலத்தில் ஹாஸ்டல் சங்கத் தலைவர்களாக இருந்த திருவாளர் P. C. சுப்பிரமணியம் பிள்ளை B.A. B.L., உபதலைவர்கள் T. S. நடராஜம் பிள்ளை B.A. B L., G. நடராஜ நாயகர் B.A., V. நடேச நாயகர் B.A., முதலிய மெம்பர்கள் பலரும் உடனிருந்து ஒத்துழைத்ததன் பலனாகச் சென்னையில் ஹாஸ்டல் நடைபெறுவதைப் பத்திரிகை வாயிலாக அறிந்த நஞ்சையிடையார் திருவாளர் S. கந்தசாமி கண்டர் அவர்கள் பெரும் பொருட்செலவில் நாமக்கல்லில் வன்னிய சங்க ஹாஸ்டலைக் கட்டி முடித்தார். வடஆற்காடு ஜில்லா வேலூரிலும் ஓர் மாணவர் விடுதி தோன்றி நடைபெற்றது.

சென்னையில் ஹாஸ்டல் நடந்த காலத்தில் பிரதி வருடமும் பட்டம் பெற்ற வன்னிகுல மாணவர்களை ஒருங்கு சேர்த்து உபசரிப்புச் செய்வது வழக்கம். தற்போதுள்ள உயர்தரக் கல்வியாளர்கள் பலர் அவ்வுப

சரிப்பு விருந்தில் கலந்து கொண்டவர்களே யாகும். அவ்விதக் கூட்டம் பலவற்றிற்கும் சென்னையில் கார்பொரேஷன் தலைவராக இருந்த திவான் பகதூர். V. திருமலைப் பிள்ளை அவர்கள் விஜயஞ் செய்து அக்ராசனம் வகித்து அச் சங்கத்திற்கு ஆதரவளித்து ஆனந்தங் கொள்வார்.

இவ்வாறு பல துறைகளிலும் ஊழியம் புகுந்து வந்த வன்னிகுல மித்திரன் 1930 ௵ இறுதியில் நின்று விட்டது. அக்காலத்தில் ஏற்பட்ட ஜில்லா தாலுக்கா சங்கங்கள் பலவற்றிலும் முக்கியமானது வடஆற்காடு ஜில்லா சங்கமேயாகும். வன்னிகுல மித்திரன் பிரசாரத்தில் பெரும் பகுதியை வடஆற்காடு, தென் ஆற்காடு ஜில்லாக்களிலேயே செலவழித்துள்ளான். சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்கம், மாகாண சங்கத்திலும், பல வருடங்கள் பிரதேச காரியதரிசியாக இருந்து உழைத்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

வன்னிகுல மித்திரன் நின்றுவிட்ட பிறகு எனது வாழ்நாளை வீழ்நாளாக்காது சங்கநோக்கத்தை எங்கும் பரப்ப எண்ணங்கொண்டு சீர்திருத்தத்திற்குச் சிறந்த நூலாகிய வன்னிகுல க்ஷத்திரிய சங்க உபதேசம், வன்னியர் புராணம் வன்னிகுலாதிக்கம் முதலிய நூற்களைப் பல குலாபிமானச் செல்வர்களின் உதவியால் அச்சிட்டுக் கொண்டு 1930 ௵ முதல் 1946-ம் வருடம் வரையில் தமிழ்நாடு முழுவதுஞ் சென்று குலச்சிறப்பு, கல்வி, ஒழுக்கம், ஒற்றுமை, விவசாயம், கைத்தொழில், அரசியல் ஆகிய துறைகளில் நம்மனோர் முன்னேற்றமடைய அனவரதமும் என்னாலானவரை பிரசாரம் செய்துள்ளேன். இதுவே என் வாழ்நாளில் 44-ஆண்டுகளாக நான் குலத்திற்குச் செய்த திருத்தொண்டாகும். அதனால் ஏற்பட்டிருக்கும் பலன் வன்னிகுலமித்திரனை 17 வருடங்களாக ஆதரித்து வந்த சந்தாதாரர்களையும், மித்திரனை ஆதி முதல் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்த தென்னைப் பிரிக்கா குலமணிகளையும் சேர்ந்ததாகும்.

இவ்விதமாகக் குலத்தொண்டில் ஈடுபட்டு உழைத்து வருங்காலத்து 1915-ம் ஸ்ரீ சிலை எழுபது என்னும் இந்நூலை முதற்பதிப்பு வெளியிட்டேன். இந்நூல் கம்பர் வாக்காகிய குலாதிக்கம் வாய்ந்த நூலாக இருப்பதாலும், இதற்கு வன்னிய அன்னிய வித்வான்களாகிய தமிழ் நாட்டிற் பெரும் புகழ் படைத்த பலர் சாற்றுக் கவி அளித்திருப்பதாலும் இந்நூலை மற்றோர் பதிப்பு என் வாழ் நாளிலேயே அச்சிட்டு வெளியிட வேண்டுமென்ற எனது எண்ணத்தைச் சென்னைமா நகரிலும் வெளியூர்களிலுமுள்ள முக்கிய குலாபிமானச் செல்வர்களுக்குத் தெரிவித்ததில் அவர்கள் மனமுவந்து மிக்க சந்தோஷத்துடன் அளித்த உதவியைக் கொண்டு வெளியிட்டுள்ளேன்.

அவ்வித உதவி செய்தவர்களின் பெயர்களையெல்லாம் அடுத்த பக்கத்தில் அச்சிட்டிருக்கிறேன். அவர்களனைவருக்கும் எனது மனப்பூர்வமான வந்தனத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிற்காணும் பிழைகளைப் பொறுத்தருளுமாறு பெரியோர்களை வேண்டிக்கொண்டு இந்நூல் என்றும் நின்று நிலவ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வன்னிகுல மித்திரன்
பெரம்பூர் பாரக்ஸ்,
சென்னை. 16-10-47

(கையொப்பம்)

இந்நூல் வெளியிடுவதற்கு உதவி புரிந்த குலாபிமானச் செல்வர்கள்.

திருவாளர். சென்னை. அவர்கள்.

,, ராவ்சாகேப் T. S நடராஜம் பிள்ளை B A., B.L. (சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்கத் தலைவர்.) ,,

,, இராயபுரம் கன்ருக்டர் மு. இராஜு நாயகர் (சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க மாஜி சிரேஷ்ட உபதலைவர்.) ,,

,, வண்ணாரப்பேட்டை C. பார்த்தசாரதி நாயகர் (சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர்.) ,,

,, வண்ணாரப்பேட்டை ராவ்சாகேப் டாக்டர் P. சீனிவாச நாயகர். ,,

,, வண்ணாரப்பேட்டை K. A. நல்லமுத்து நாயகர் (புஷ்ப வியாபாரம்.) ,,

,, பெத்துநாய்க்கன்பேட்டை C. G. B. உலகநாத நாயகர் (உரிமையாளர் பேவின் பவுண்டரி.) ,,

,, கிடங்குத்தெருவு V. கோபால்சாமி நாயகர் (உரிமையாளர், மாடல் பிரஸ் & மகா சங்க உபதலைவர்.) ,,

,, M. R. சம்பந்த நாயகர் (உரிமையாளர் R. தாஸன் ஸ்டுடியோ.) ,,

,, கிடங்குத்தெருவு R. இராமாநுஜ நாயகர் (உரிமையாளர் இராமாநுஜம் அச்சுக்கூடம்.) ,,

திருவாளர். சென்னை. அவர்கள்.

,, கொத்தவால்சாவடி பொ. பூபால நாயகர் ,,
(பாக்குமண்டி.)

,, முத்தியால்பேட்டை C. ஞானசுந்தர நாயகர் ,,
(வடபழனி ஆண்டவர் தேவஸ்தான தர்மகர்த்தர்.)

,, முத்தியால்பேட்டை A. வீரபத்திர நாயகர் ,,
,, ,, A. பார்த்தசாரதி நாயகர் J. P. ,,
(கவுரவ மாஜிஸ்ட்ரேட் & மகாசங்க ஜீவ
தசை மெம்பர்.)

,, பவழக்காரத்தெருவு V. R. கண்ணன் நாயகர் ,,
,, V. R. சீனிவாச நாயகர் ,,
(உரிமையாளர் ஸ்ரீ இராமகோட்டி பிரஸ்.)

,, சிந்தாதிரிப்பேட்டை
டாக்டர் பார்த்தசாரதி நாயகர் ,,
,, ,, W. K. சுந்தரேச நாயகர் ,,
(உரிமையாளர் ஸ்டான்டர்ட் எலக்டிரிக் ஒர்க்ஸ்.)

,, சிந்தாதிரிப்பேட்டை அட்வகேட்,
N. வேணுகோபால நாயகர் B.A., B L. ,,

,, சூளை R. சரவண நாயகர் ,,
(உரிமையாளர் சரஸ்வதி பவுண்டரி.)

,, ,, G. T. மாணிக்க நாயகர் ,,
(உரிமையாளர் திரிலோகா ஸ்டீல் டிரங் ஒர்க்ஸ்.)

,, ,, P. இராமசாமி நாயகர் & பிரதர்ஸ் ,,
(உரிமையாளர் ஸ்ரீ லட்சுமி எஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்.)

,, மவுன்ட்ரோட் ராவ்பகதூர், M. S. நாகப்ப
நாயகர் & சன்ஸ் (சிற்பத் தொழிற்சாலை.) ,,

திருவாளர். சென்னை. அவர்கள்.

,, திருவல்லிக்கேணி K. விநாயகம் M.A., L.T. ,,
F. R. A. S. (Lond) J. P.
(கவுரவ மாஜிஸ்ட்ரேட் & மகாசங்க
பொக்கிஷதாரர்.)

,, திருவல்லிக்கேணி T. முருகேச நாயகர் ,,
(இன்ஜினீரிங் கன்ட்ராக்டர்.)

,, மயிலாப்பூர் டாக்டர் N. லட்சுமிபதி நாயகர் ,,

,, ,, ச. தருமலிங்க நாயகர், (கோபால நாயகர்
வன்னிய சங்க கல்விச்சாலை மானேஜர்.)

,, வன்னிய தேனாம்பேட்டை K. திருவேங்கட
நாயகர் (காட்டுப்பாக்கம், பா. செ. லக்ஷ்மண
நாயகர், சின்னம்மாள் வன்னிய சங்க கல்விச்சாலை
மானேஜர்.) ,,

,, நுங்கம்பாக்கம் N. ஜம்புலிங்க நாயகர் S.I.I.A. ,,

,, புரசைவாக்கம் கோதண்டபாணி பிள்ளை B.A , ,,
(டிபுடி கலக்டர்.)

,, ,, அட்வகேட் S. P. இராஜாபாதர்
நாயகர் B.A., B.L. (மகாசங்க உள்ளூர்காரியதரிசி.),,

,, ,, S. M. நாராயணசாமி பிள்ளை G.M.V.C. ,,
(ரிடையர்ட் வெட்டர்னரி சர்ஜன்.)

,, பெரம்பூர் K. M. விநாயக நாயகர் ,,
(ரெட்ஹில்ஸ் ஸ்ரீ விநாயகர் பஸ் சர்வீஸ்.)

,, பெரம்பூர் C. கோவிந்தராசு நாயகர் ,,
(உபாத்தியாயர் கார்பொரேஷன் ஸ்கூல்.)

,, கீழ்ப்பாக்கம் R. ரங்கசாமி நாயகர் (உரிமையாளர்
புத்தக வியாபாரம் B. R. ரத்தின நாயகர் & சன்ஸ்.)

வெளியூர். அவர்கள்.

திருவாளர். செங்கோட்டை மிராசுதார் ஆறுமுக நாயகர்
" செங்கோட்டை, ஸ்ரீமதி. S. மீனாட்சியம்மாள். ,,
,, பெங்களூர் M. கிருஷ்ணசாமி நாயகர் ,,
(தலைவர் பெங்களூர் சம்புகுல க்ஷத்திரிய சங்கம் & உரிமையாளர் ஸ்ரீ கிருஷ்ணா இன்ஜினீரிங் ஒர்க்ஸ்.)
,, ஈரோடு சத்தியமங்கலம் M. இராஜகோபால கண்டர் (உரிமையாளர் ரைஸ் மில்.) ,,
,, சிதம்பரம், கன்ட்ருக்டர் ஆ. சுப்பிரமணிய படையாட்சியார். ,,
,, சேலம் A. சுப்பிரமணிய நாயகர் M. L. A. ,,
,, ஜோலார்ப்பேட்டை இ. முனுசாமி கண்டர் ,,
,, ,, கோதண்டம்பட்டி V. பொன்னுசாமி கண்டர் M L. A. ,,
,, டர்பன் N. தருமலிங்க பத்தர் ,,
,, சோழங்கநல்லூர் S. K. கோவிந்தராஜுலு நாயகர் M. L. A. ,,
,, ஆலந்தூர் பு. கோவிந்தசாமி நாயகர் ,,
(ஆப்காரி கன்ட்ருக்டர்.)
,, ஆலந்தூர் S. நடேச நாயகர் (P.W.D. கன்ட்ருக்டர்.),,
,, மௌலிவாக்கம் மிராஸ்தார் M. சம்பந்த மூர்த்தி நாயகர் ,,
,, ,, ,, S. இராமலிங்க நாயகர் ,,
,, ,, ,, P. சிவப்பிரகாச நாயகர் ,,
,, காட்டுப்பாக்கம் ,, P. உலகநாத நாயகர் ,,
,, ,, ,, P. கோவிந்தராஜுலு நாயகர் ,,
,, பூந்தமல்லி டிராயிங் மாஸ்டர் M. V. இராஜகோபாலவர்மா ,,
பெரம்பூர் கொடுங்கையூர் வன்னிகுல க்ஷத்ரிய சங்கத்தார்.
வியாசர்பாடி வன்னிகுல க்ஷத்திரிய சங்கத்தார்.

1915-ல் வெளியிட்ட முதற்பதிப்புக்கு அளித்த

சாத்துக்கவிகள்.

கும்பகோணத்தில் விளங்காநின்ற

ஜகத்குரு: ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள்

ஸ்ரீமடத்தின் ஸன்னிதான சபையின்

ஜ்யோதிஸ் தந்திர ஸூக்ஷ்ம தர்சிகளான

பிரம்மஸ்ரீ சுந்தரேசுவர சிரௌதிகள் குமாரரும்

பண்ருட்டி ஸப் ரிஜிஸ்தாரருமாகிய

T. S. விசுவநாத சிரௌதிகள் பி. எ.,

அவர்கள் இயற்றிய விருத்தம்.

அலைகடற் புவியை யாண்ட அங்கிமன் னவரை யேற்றி
கலைவள மிகுந்த கம்பன் கழறிய காமர் நூலாஞ்
சிலையெழு பதினை யேற்ற தெளிவுரை யொன்று சேர்த்தி
நலமிகு சுப்ர மண்ய நாயக னச்சிட் டானே.

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா

வெள்ளாளப்பட்டி, பண்டித பரம்பரை

பிரம்மஸ்ரீ, சாமய்யர் அவர்கள் குமாரர்,

S. கிருஷ்ணசாமி அய்யரவர்கள்,

இயற்றிய விருத்தம்.

பொன்னறம் பொதியு மேனிப் பூவையாட் சுமந்த பேற்றை
யின்னறை யிளகுங் கையா லேந்தியிப் படியை யோச்சும்
மன்னறங் கொண்ட கோசேர் வன்னியர் புகழை மேனாள்
நன்னெறி யாக வன்றே நவின்றனன் கம்ப நாடன்.

வேறு.

காவிருக்குங் கனகமணி யிருநிதிய மமுதமிகுங்
கடவு ணாட்டின்
கோவிருக்கும் பதியியலுங் கோவிந்தன் முதலாயோர்
கொள்ளும் பெற்றி
மாவிருக்கும் மண்ணுலகாள் வன்னியரின் மாட்சியுமிழ்
வசத்த தென்றே
நாவிருக்கு நாக்கம்ப நாடனருஞ் சிலையுலகி
னாட்டி னானே.

நாட்டியசெம் பொற்சிலையா மெழுபதென வரைந்துகம்ப
நாடன் சொன்ன
பாட்டியலின் பொருளனைத்தும் பாவகர்க்கும் பாரோர்க்
பார்த்துத் தீந்தேன் [கும்
ஊட்டிநிலை நிறுத்தவெனப் பதத்தியலை யனுசரித்தின்
னுரையை யோங்கித்
தீட்டியளித் தானுலகில் துரைசாமி வர்மனெனுஞ்
செவ்வி யோனே.

பொன்மணக்கும் மாலுடைய பூமணக்கும் பதிமணக்கும்
புத்தே ளாய
மன்மணக்கும் மகிமணக்கும் மன்பதைக ளேமணக்கும்
வன்னி யோர்கை
விண்மணக்குங் குலமணக்கும் மேன்மேலும் விதிமணக்கும்
விளக்க மாகச்
சொன்மணக்கும் பனுவல்களின் சுவைமணக்கு மோருரை
சொல்லுங் காலே. [யைச்

வேறு.

இக்குவல யத்துளுயர் வுற்றிடுசெம் பொற்சிலையி
லட்சணசு விர்த்தி யுரையாய்ந்
தெக்குல முதித்தவரு மொப்பிடு மகுத்துவ
மிதற்குள தெனக் கருதியே
பக்குவ மிகுத்தவர னக்கினி குலத்திலகன்
பட்சமிகு சுப்ரமணியன்

மிக்கபொரு ளீச்செல விடுத்திதனை யச்சுதவி
மெய்ப்புகழ் படைத்தன னரோ.

வேறு.

முற்காலத் தங்கிகுல முறைமை விளக்கிய கம்பர்
முதன்மை யென்கோ
பிற்காலத் ததனைமொழி பெயர்த்தவரைப் பெரிதென்கோ
பின்பு பேணும்
நற்காலம் வாய்த்திகத்தி னுட்டியசுப் பிரமண்ய
நாயகப் பேர்
தற்காலம் பெரிதென்கோ தாரணியில் நாமுரைக்குந்
தகைமை யென்னே.

மதுராந்தகந் தாலூகா மலைவையாவூர்,
கோயில் துமாண்டூர் இளையவல்லி,

பிரம்மஸ்ரீ வரதாச்சாரியாரவர்கள்

அபிப்பிராயம்

சிலை யெழுபது என்னும் பிரபந்தம் வரப்பெற்றேன், ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியினது திவ்ய சரிதையைச் செந்தமிழ்க் கவியிற் புனைந்த கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார், அலைகடற் புவியை யாண்ட அக்கினிகுலத்தரசர்களின் குலவுற்பவம் குலமாட்சிமை அரசின் சிறப்பு முதலியவைகளை எழுபத்தொன்று செய்யுட்களால் சொன்னயம் பொருணயம் விளங்கக் கூறியிருக்கின்றார்.

இலக்கண இலக்கிய சங்க நூற்கள் யாவையும் ஒருங்கே கற்றுணர்ந்த பேழைக்குடி ம-ா-ா-ஸ்ரீ, துரைசாமி நாயகரவர்கள் நூலாசிரியரின் கருத்தைத் தழுவி ஆங்காங்கு ராமாயண முதலிய நூற்களின் மேற்கோள்களுடன் உரையெழுதிஇருப்பது பெரிதும் புகழ்தற்பாலதே.

“வன்னிகுல மித்திரன்” பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ. ஆ. சுப்பிரமணிய நாயகரவர்கள், கம்பர் வரலாறென முத

வில் எழுதிச் சேர்த்திருக்கும் விஷயத்தில், கம்பர் எனப் பெயர்வந்ததற்குக் காரணங்களும், அவரியற்றிய நூற்களும், அவரது காலத்தினை நிலை நாட்டியதும் தற்கால சரித்திர ஆராய்ச்சி செய்வோர் அனைவரும் கொண்டாடத் தக்கதே. பழமையும், பெருமையும் வாய்ந்த இந்நூல் வெளிவந்ததற்கு அத்யந்த சந்தோஷப்படுகிறேன். குலாபிமான மேலீட்டால் தம்மரபோரனைவரும் இப்பிரபந்தத்திற் கூறும் அருமை பெருமையினை யுணர்ந்து கடைத்தேறுவார்களென இதனை வெளிப்படுத்திய நாயகரவர்கட்கு எம்பெருமான் கிருபை பாலிப்பாராக.

காஞ்சிபுரம், மஹா வித்வான்,

ஸ்ரீமான். இராமசாமி நாயுடு அவர்கள்

இயற்றிய

அறுசீராசிரிய விருத்தம்.

சீரேறு கவிச்சக்ர வர்த்தியெனத்
திகழ்பெயராற் சிறந்த கம்பன்
போரேறு வன்னியர்தம் புகழ்புவியி
லெஞ்ஞான்றும் பொலிந்து தோன்றப்
பாரேறு தமிழறிஞர் யாவருமேத்
தெடுப்பமுன்னாள் பகர்ந்த வின்சொற்
பேரேறு சிலையெழுப தெனுநூலொன்
றெழில்மிக்குப் பிறங்குமன்றே.

அன்னதனுக் குரையில்குறை யகத்துனிப்பே
மைக்குடிவா ழருந்தமிழ்க் கோன்
பன்னரிய துரைசாமி நாயகப்பேர்ப்
பருணிதன்ஏற் பலவும் வாய்ப்பச்
சொன்னயம்பற் பலவுமிக்குத் தோன்றவுரை
யொன்றளித்துத் துகளில் சீர்த்திக்
கொன்னுறுசுப் பிரமணியக் குரிசிலச்சிட்
டுபகரித்தான் குவல யர்க்கே.

சித்தாந்தம் பத்திராசிரியர் அஷ்டாவதானம் பூவை,

சிவஸ்ரீ, கலியாணசுந்தர யதீந்திரர்

அவர்களியற்றிய - விருத்தம்.

கவிச்சக்ர வர்த்தியெனுங் கம்பன்முன்
 னாளதனிற் கழறி வைத்த
கவினிறையுஞ் சிலையெழுப தெனுநூலுக்
 கோருரையைக் கனிவ தாகப்
புவிமகிழ்பே ழைக்குடிவாழ் துரைசாமி
 நாயகநற் புலவன் றீட்ட
அவிரச்சி லேற்றியுத வினன்சுப்ர
 மணியனென மறிஞரேறே.

திருவோத்தூர் திருநாவுக்கரசு மடம்

மஹாவித்வான் முத்தமிழ்ரத்னகாம்

சைவஸ்ரீ. ம. தி. பானுகவியவர்கள்

இயற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேவரும் புகழு மாண்புளார் கம்பர்
 சிலையெழு பஃதென வனியர்
மேவரும் புகழை விளக்கின ரதனுண்
 மேவிய பொருண்முறை யனைத்து
மேவரு முணரப் பேழையங் குடிவா
 ழெழிற்றுரை சாமிநா யகப்பேர்க்
காவருங் கரத்தா னுரையிட வதனைக்
 கைத்தலத் தேவரு மேந்த.

அச்சுவா கனத்தி லமைத்துயர் முறையா
 யாக்கின னரசரும் பிறரு
நச்சுவா கதத்தி னேற்றிடும் குணத்தா
 நல்லெழின் மதனினுஞ் சிறந்தோன்

மெச்சுவா கதத்தின் மாறிலாப் புகழான்
மிகுதிறல் வன்னியர் திலகன்
எச்சுவா கதமுந் தருவனி மித்திர
னிலங்கிடப் புரிதரு வள்ளல்.

சூரனை வதைத்த வீரவே லுடைய
சுப்பிர மணியநற் பெயரை
யாரநல் லதிட்டம் பெறுபுக ழாள
னருந்தமிழ்க் கலைமகட் புணர்வாற்
சீரிய பன்னூன் மகாருட னிலங்குஞ்
சிறப்பின னிவன்புக ழென்றுந்
தாரணி யுள்ள நாளள வினுமே
தணிவற விளங்குக மாதோ.

சென்னை ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்ப்
பண்டிதரும், லோகோபகாரி பத்திராதிபரும்
வேதாந்த வித்வசிரோமணியுமாகிய
ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியார்
அவர்கள் இயற்றிய,
அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

திண்மையமை வன்னியர்மேற் றிட்பநட்பஞ்
செறிந்தழகு செவ்வே தோன்ற
வண்மையெலாம் பெறுகம்பர் வகுத்தசிலை
யெழுபதிற்கு வளப்ப மாகத்
தண்மைநிறைந் திடும்பேழைக் குடிவாழுந்
துரைசாமி தக்கோ ரேற்க
ஒண்மையாப் பன்னூலாய்ந் துரையெழிதி
யுலாவச்சீ ருற்றுன் மாதோ.

சென்னை துரைத்தன மாதர்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ. கா. நமச்சிவாய முதலியார்

அவர்கள் பாடிய வெண்பா.

கலைமகளைக் கண்கண்ட கம்ப னளித்த
சிலையெழுப துக்குரையைச் செய்தான்—கலைதேர்
உரைசாமி யென்ன உலகோ ருரைப்பத்
துரைசாமி யாம்புலவன் சூழ்ந்து.

சென்னை - ம-ா-ா-ஸ்ரீ,

M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, பி. எ. எல். டி.,

அவர்கள்

அபிப்பிராயம்.

சிலை எழுபது என்ற அருமையான நூலும் உரையும் பார்த்தேன். உரை பழைய வுரைகளைப் போன்று நன்னடையில் ஆழ்ந்த கருத்துக்களைத் தெள்ளிதில் விளக்குகின்றது. முகவுரையில் கம்பருடைய காலநிர்ணயம் கூடியவரை சரியாகச் செய்யப்பட்டிருக்கிறது. வன்னியர் குல மகிமையை விளக்குவதுடன் பொதுநீதியும் பற்பல விடங்களில் போதிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். உரையில் எடுத்துக் காட்டியுள்ள மேற்கோள்கள் அருமையுள்ளன; பாராட்டத்தக்கன. இதைப்பதிப்பித்த நாயகரவர்களின் அரிய உழைப்பை எவரும் நன்குமதிப்பரென்பதில் ஐயமில்லை.

சென்னை பச்சையப்பன் கலாசாலைத்

தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,

கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பேரார் கம்ப நாடரெனும்
பெரிய ரளித்த நற்றமிழின்

ஏரார் பொருளேய் சிலேயெழுப
 தென்னு நூலி னுட்பொருளேப்
பாரோ ருணர்ந்து மனங்களிக்கப்
 பரிவார் வன்னி குலமன்னர்
சீரார் பெருமை யுலகறியச்
 சிறந்த வுரைதான் வகுத்தனனுல்.

ஏழைக் குடியாங் கிலேயென்ன
 வேந்து செங்கோல் வன்னியர்தம்
ஆழிக் கிணையாங் குலமதனி
 லழகார் மணியி னினிதுதித்தோன்
பேழைக் குடியான் கலேநலந்தேர்
 பிறங்கு மறிஞன் றுரைசாமி
வாழி வளஞ்சா ரிவ்வுரையை
 வாய்ந்து பலவோர் களிப்பாரே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவான்
செங்கல்பட்டு ம-௱-௱-ஸ்ரீ,
அரங்கசாமி நாயகரவர்கள் இயற்றிய
விருத்தம்.

முக்குலமன் னரில்முதன்மை பெற்றிடுவன்
 னியர்புகழ்ச்சி முழுது மன்ன
இக்குமொழிக் கம்பன்செய் சிலேயெழுப
 தெனுநூலுக் கிசைவ தாகத்
தக்கவுரை யியற்றினன்பே ழைக்குடிநந்
 துரைசாமித் தமிழ்நா வல்லோன்
மிக்கவச்சி லதைப்பதித்துச் சுப்ரமண்யக்
 குரிசிலிசை மேவி னனல்.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்னிய கிரந்தகர்த்தாவும், இராமநிலய விவேகானந்த அச்சுக்கூடத்தலைவருமாகிய ஸ்ரீமாந்

T. பக்தவத்சலம் பிள்ளை பி. ஏ, M. B. P. I.

அவர்கள் இயற்றிய விருத்தம்.

சிலையெழுப தெனுநூற்குச் சீருரையொன் றியற்றினனால்
மலையெழுநல் விளக்கென்ன மாதுரைசா மிப்பெரியோன்
கலையெழுநுண் பொருளிதனைக் காசினியோர் தாமறிய
விலையெழுதற் புத்தகமாய் வித்தகசுப் பிரமணியன்.

வீறுபுகழ் நிலத்தோங்க வீணரெல்லாம் பெயர்நிலவ
மாறுபடு மறக்கொள்கை யூறுபட வண்டமிழி
னேறுபடு நன்னிலைமை யிசைந்தொளிர வச்சியற்றி
ஆறுபடு மேலொழுக்க மறைவித்தா னற்புதனே.

தணிகைமணி, ராவ்பஹதூர் - ம-ா-ா-ஸ்ரீ

வ. சு செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.,

அவர்களால் இயற்றப்பட்ட

சந்த விருத்தம்.

கலைவல கவிமுத லுரைமுழு வதுநாடிச்
சொலவல பெரியவர் துதிபெறு துரைசாமி
சிலையெழு பதினுரை யெழுதிய திறமீதே
இலையிரு ளெனஎழு பரிதியி னியனேரும்.

கோமளேசுவரன்பேட்டை ம-ா-ா-ஸ்ரீ, வித்வான்

ம. இராஜகோபால பிள்ளை அவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வரம்பிசைக்கேந் தியதெய்வ மாண்புலமை
வளர்கம்பர் மகிழ்வி னோங்கிச்
சிரம்பிசைக்கேந் தியதேவிற் செறுநர்வலி
தெறுங்கனலித் திருக்கு லத்தார்

நிரம்பிசைக்கேந் திடவுதவு நெடியசிலை
யெழுபதிற்கு நெறிவ ழாது
பரம்பிசைக்கேள் வியர்வியக்கப் பருவுரையொன்
றியற்றினனாற் பாரீர் பாரீர்.

உரைசாரு மொழுங்கின றுமிஃதளித்த வுத்தமன்பே
ருரைப்பக் கேளீர்
வரைசாருந் தீபிகையில் வளம்படைத்த மதியாளன்
மருவும் பேழைத்
துரைசாமி யெனுநாமன் றெல்லுலகி லச்சிட்டுத்
துலங்க வைத்தோன்
பரைசாரும் பாகத்தாற் குகப்புறுசுப் பிரமணிய
பாவல் லோனே.

ஓமலூர்தாலுக்கா தோரமங்கலம் கர்ணம் ம-ள-ள-ஸ்ரீ

வித்வான் அ. வரதநஞ்சைய பிள்ளை

அவர்கள் இயற்றிய விருத்தம்.

புவிக்கணியா யான்றபொருள் பயக்குநல்லோர்
கவியென்று புகன்று காட்டும்
கவிச்சக்ர வர்த்தியாங் கம்பனநு
தமிழ்மணக்குங் கனிவா யானே
செவிக்கினிமை பெறவமைத்த தெள்ளமுதாம்
சிலையெழுப தென்னு மிந்நூல்
உவக்கமுன முயர்கருணா கரச்சோழ
னவையினிடை யுரைத்த தாமால்.
பாட்டொன்றுக் காயிரம்பொன் பரிசுபெற்று
வன்னியராம் பாராள் மன்னர்
தோட்டுன்று நெடுஞ்சிலையின் பெருவீரம்
புகலுமிந் நூல் சுசனர்க் கெல்லாங்
காட்டொன்று நல்வழியில் மீட்கவெண
வுரைதீட்டிக் கடமை செய்தான்
பாட்டளிசேர் பொழிற்பேழைக் குடித்துரைசா
மிப்பெயர்கொள் பாவலோனே.

அன்னதனைத் தன்னதச்சு விமானமிசை
யேற்றியுல கனைத்து மேற்றும்
வன்னிகுல மித்திரன்பத் ராதிபனுஞ்
சுப்ரமண்ய வள்ளல் செய்த
மன்னுமுப காரமிதற் கென்னேனைகம்
மாறென்று வானை நோக்கி
யுன்னுவதல் லாற்பிறிதென் னன்னவர் தம்
வழிசிறப்புற் றோங்க வென்றே.

விஷ்ணுபாத சேகரரென்னும் ம-ா-ா-ஸ்ரீ,

வித்வான் ஜா. பசுபதி நாயகரவர்கள்

இயற்றிய நேரிசை வெண்பா.

வாழையிளந் தாருடிய மந்திகள்பாய்ந் தாங்கயலேய்
தாழையிள நீர்குடித்துத் தண்டலைசேர்—பேழைநகர்
நங்கள் துரை சாமிமால் நற்செயலொன் றோதுகிறேன்
இங்கெவருங் கேட்டுணர யான்.

இம்பர் தனிப்புரந்த ஏற்றமிகும் வன்னியர்க்கோர்
கம்ப ரெனும்பெரியர் கண்டளித்த—செம்பொற்
சிலையெழுப தாநூற்குத் தெள்ளுரைசெய் தீந்தான்
இலங்கரென் றோத இவன்.

அத்தகைய நூலதனை யச்சிட்டான் வன்னிகுல
மித்திரனை யெங்கெங்கும் மேவிவர—வைத்துளனும்
நற்சுப் பிரமணிய நாயகன்றான் வாழுகின்ற
இற்குயப் பேட்டை யெனல்.

ஸதாவதானம், யாழ்ப்பாணம்,
ஸ்ரீமான், நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள்
மாணாக்கர் ம-ா-ா-ஸ்ரீ,

புரசை, மு. பாலசுந்தர நாயகர் அவர்கள்

இயற்றிய விருத்தம்.

முத்தீயின் வழிவந்த முக்குலத்தா ராயவன்னி
முதல்வர் சீர்த்தி

பத்தேழு பாவினத்தாற் சிலையெழுப தெனுநூலைப்
பரிவி னாலே
பித்தேறிப் பிதற்றுநர்நா வடங்கியிடப் பெரும்புலமைக்
கம்பன் மென்மேல்
சத்தூர வியற்றினதற் கோருரைதா னிஞ்ஞான்று
சாற்றி னானல்.
அன்னவன்யா ரென்புழீஇ யரியகலை நனிதெரிந்தா
னறிவோர் சாற்றும்
மன்னவர்பே ழைக்குடிவாழ் துரைசாமிப் பெயருடைய
மகிப னின்று
வன்னிகுல மித்திரன்பத் திராதிபனுஞ் சுப்பிரமண்ய
நாய்க னச்சில்
முன்னுறவைத் தேவிடுத்தா னவைகாண வுளமகிழ்ந்தே
முலகுக் காமால்.

சென்னை கலியுகவர்த்தமானி பத்திராதிபர்
ஸ்ரீமத் கந்தசாமி பிள்ளை மாணுக்கரி லோருவரும்,
இலவை. ஜோதிடவைத்திய சித்தாந்தி
ஸ்ரீமத் சங்கரலிங்கம் பிள்ளை குமாரரும்,
தென்காசி ஸ்ரீராமாநுஜம் பிரஸ் மானேஜருமான,
ஸ்ரீமான், E. S. சிவராமலிங்கம் பிள்ளை
அவர்கள் இயற்றிய,
அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

பதியுறைவோர் புறவிழிப்பா லவர்தன்குறை
தீர்க்கமலர்ப் பதியன் றெய்வ
நிதியெனவே முதற்படைத்த நிருபர்வன்னி
குலக்கரும்பின் நிறையைக் கம்பன்
துதியுளசெஞ் சிலையெழுப தெனக்கவிசற்
கரைவட்டாய் தொகுத்தான் யார்க்கு
மதியுளநற் றுரைசாமி வள்ளலுரை
வெனும்பாகாய் வழங்கி னானல்.

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்
காங்கயம் - அஷ்டாவதானம், ம-ா-ா-ஸ்ரீ,

சிட்டா, V. சேஷாசல நாயுடு அவர்கள்

இயற்றிய விருத்தம்.

மணிசேர்மகுட மன்னவர்கள் வணங்குங் கம்பநாடர்மிக
அணிசேர்ஒவ்வோர் கவிக்குமொவ்வோராயிரம்பொன்பரிசுடனே
திணிசேர்நர வாகனமடைந்து திகழுங்கருணாகர வனியன்
பணிசேர் அவையிலரங்கேற்றம் பண்ணும்செம்பொற் சிலை
[கவிக்கு
வாழைக்குடிகள்நறுந்தேறல் மணித்தாலடைந்து தங்கணிற
மாழைக்குடியராஞ்சுரும்பர் மாநதிமுரலுஞ் சோலையடர்
ஏழைக்குடிகளில்லாம லெங்குமணிமா ளிகைசூழும்
பேழைக்குடிவாழ் கலைவல்லான் பிறங்குந்துரைசாமிப்பெய
[ரான்
கலைஞர்மதிக்குமேற்கோள்கள் காட்டிவிரிவா யோருரையைத்
தலைமையெனவே தந்தருளத் தழைவன்னிகுலமித்திரனே
உலகிலீன்றபேரிசையா றுசிதசுப்ர மண்ணியவேள்
நிலவவச்சிற்பிரசுரித்து நேர்ந்தானியாவும் தேர்ந்தானே.

கோயமுத்தூர் வித்வான் ம-ா-ா-ஸ்ரீ
கந்தசாமி முதலியார் அவர்கள் குமாரரும்,
பண்டிதர் - ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் மாணாக்கரும்
டிஸ்ட்ரிக்ட்கோர்ட்டு வக்கீலுமாகிய ஸ்ரீமான்

C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், பி. எ.,

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வன்னிகுல பூபதிகள் மேற்கம்பர் திருவாக்காய்
வையம் போற்று
மன்னுசிலை யெழுபதெனும் மாக்கவியைத் துரைசாமி
மகிபன் செய்யும்

பன்னுதெளி வுரையுடனே யச்சியற்றிக் குலம்வளரும்
பண்பு செய்து
நன்னயவான் சுப்ரமண்ய நாயகவேள் நிலவுபுகழ்
நலம் பெற்றுனே.
போர்வேந்தர் படைச்சிறப்பு முலகமெலா மதனுலே
புகழ்பெற் றோங்கி
ஏர்பெறவே தழைத்துயரு மியல்பெல்லா மொவ்வொன்று
மியம்பு மிந்நூல்
பார்பெறவே யுலகினர்க்கு விளக்கியுப கரித்ததுவும்
பண்பா லிந்த
பேர்பரவு மிருவர்களு மழியாத புகழ் பெற்று
பிறங்கு வாரே.

சென்னை இராயப்பேட்டை,
வெஸ்லிகாலேஜ் தர்க்கபோதகர் ம-ா-ா ஸ்ரீ,
S. சச்சிதாநந்தம்பிள்ளை பி. ஏ. எல். டி,
அவர்களால் கொடுக்கப்பட்ட
அபிப்பிராயம்.

சிலை யெழுபது என்னும் இந்நூல் முற்காலத்துத் தமிழகத்தில் அரசுபுரிந்த அக்கினிகுல மன்னர்களது அரசியலின் உறுப்புகளைப் பெரிதும் புகழ்ந்து கூறுவதாகும். இதனை இயற்றினேர் கம்பநாடார் என்று இதிற் காணக் கிடக்கின்றது. இந்நூலில் முகவுரையில் கம்பரது கால வரையறையைப் பற்றி ம-ா-ா-ஸ்ரீ, ஆ. சுப்பிரமணிய நாயகர் அவர்கள் எழுதியுள்ள விஷயங்கள் நம்மனேர் நன் மதிப்பிற் குரியன. இதற்கு வரையப்பட்டுள்ள உரையும் சாலச் சிறப்புடையதே.

திருச்சி எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்,
"சேந்தமிழ்ச்செல்வம்" பத்திராதிபருமாகிய
ம-௱-௱-ஸ்ரீ, அ. சுந்தரநாதம் பிள்ளை
அவர்கள் இயற்றிய.

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

முந்துநான் மறைகட் கெட்டா முழுமுதல்
வழுதி நாட்டில்
வந்துதா னமர்ந்து சங்கம் வளர்தர
வமைய வாய்ந்த
நந்துறுத் தமிழில் வல்ல நயதிருக்
கம்ப நாடன்
சிந்துற துரைத்தா னெங்குஞ் சிலையெழு
பதாநன் னூலே.

சிலையெழு பதிலே மன்னர் திருக்குலத்
தவரே யாகும்
நிலையுறு வன்னி யர்தம் நிறைபுகழ்
விளங்கு மாலோ
உலைவறு மதனுட் சொற்ற வுயர்பொரு
ளனைத்து மாய்ந்து
கலைவலர் களிக்கச் செய்தான் கருதுரை
யொருவ னம்மா.

அன்னவன் யாரே யென்னி லரசவர்
குலத்தில் வந்த
மன்னிய குணத்து மிக்கான் மகிழ்தமிழ்க்
கலையில் வல்லான்
கொன்னுபர் செல்வப் பேழைக் குடியினில்
வாழுங் கோமான்
நன்னயத் துரைசா மிப்பேர் நாயக
னகு மாதோ.

இத்தனி நூலின் சீரு மெழிலுரை
வளமுங் கண்டு
சித்தமன் களியே பொங்கச் செவ்விய
அச்சி லேற்றி
இத்தரை முழுது நாளு மினிதினி
னுலாவச் செய்தான்
நத்துசுப் பிரமண் யப்பேர் நாயகன்
நலத்தாற் றானே.

திருவெண்ணெய்நல்லூர்,
ஸ்ரீ கம்பர் கலாமிர்த சங்க காரியதரிசி
ஸ்ரீமான், தி. வடிவேலு முதலியா ரவர்கள்
இயற்றிய விருத்தம்.

கலைவளர்க்குங் கவிபுனைந்த கம்பநாட்
டடிகள்புவி காவலோர் தஞ்
சிலைவளைக்கும் பெருமைதனைச் சிலையெழுப
தெனுநூலாற் சிறக்கச் சொற்றா
ரலைவளைக்கும் புவனியுளோ ரறியவுரை
விரித்துரைத்தா னழகாய்த் தெங்கு
குலைபழுக்கும் பேழைகுடி துரைசாமி
நாயகனுங் குணவா னம்மா.

அப்பெரிய காவியத்திற் கருகரா
மனற்குலத்தோ ரவாவின் வண்ண
மெப்புலவ ருங்கண்டு கும்பனுரை
யிதுவோவென் றேத் தெடுப்ப
சுப்பிரம ணியக்குரிசிற் செப்பமுட
னச்சிட்டுத் துலங்க வைத்தா
ரிப்புவியோர் செந்தமிழி னின்பநலந்
துய்ப்பரென விசைவு கொண்டே.

காரைக்கால், சாஸ்திர ஆராய்ச்சி ம-ள-ள-ஸ்ரீ,

V. குருசாமி படையாட்சியாரவர்கள்

இயற்றிய வெண்பா.

கற்றோறிற் கம்பனெனன்போன் காசினியி னுளுகையை
யுற்றோர்க்குச் செஞ்சிலையை யோதினன்—மற்றுந்
துரைசாமி நாவலனுஞ் சொன்ன னுரையுங்
குருசாமி யுள்ளங் கொள.

மதுரைஜில்லா செம்பூர் வித்வான் ம-ள-ள-ஸ்ரீ,

வீ. ஆறுமுகஞ்சேர்வை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வன்னியரின் புகழ்விளங்கப் புலவர்சிகா
மணிகம்பன் மகிழ்மிக் கோங்கி
முன்னுளுற்றி வைத்தசிலை யெழுபதெனும்
பநுவல்தனை முழுது மோர்ந்து
மன்னுதிரு மிகுபேழைக் குடிவாழுந்
துரைசாமி மதியில் வல்லோன்
நன்னலஞ்சா லுரைவகுத்து நாவலின்
புறவளித்தா னதனை நாளும்.
மண்டலத்திற் சிறந்ததமிழ் நாட்டிலுள்ளா
ராய்ந்துபொருள் வளங்க ளெல்லாங்
கொண்டுவகைக் கடல்குளித்தின் புறவன்னி
குலமித்திர னதிப னான
தண்டமிழ்ச்சுப் பிரமணிய நாயகனு
மிசையுடையான் தகுதி யாக
விண்டலத்தோர் வியக்குமச்சிற் பதித்துதவி
மிகுகீர்த்தி மேவி னானல்.

கோயமுத்தூர் லண்டன் மிஷன் ஹைஸ்கூல்
தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ,
C. S. சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள்
இயற்றிய
கொச்சகக் கலிப்பா.

வன்னியபூ பதிகளின்மேல் மகாகவியாங் கம்பர்செய்த
வின்னிசைசேர் சிலையெழுப தெனுநூற்கோ ரினியவுரை
நன்னருறச் செய்தளித்தா னுனிலமெ லாம்புகழும்
மன்னுபேழைக்குடியில் வந்ததுரை சாமியென்போன்.

அந்தவுரை யினையவனி யதனிலுள மக்களெலா
முந்துமன்பொ டினிதோதி யுணர்வடைத லேகருதிச்
சந்தமுற வச்சேற்றித் தாரணியிற் பிரசுரித்தான்
சந்ததம்க்ஷத் திரியகுலஞ் சாரபிமா னந்தரித்தான்;

வன்னிகுல மித்திரனும் மாண்புபெறு பத்திரிகை
சென்னையினி னடாத்திவரு செந்தமிழ்மீ தார்வமுளான்
என்னனைய நண்பர்கள்பா லென்றென்று மாறாது
மன்னியிடும் விசுவாசன் வறியவர்கட் குயர்போசன்;

கங்கைநதி சடைக்கரந்த கண்ணுதலார்க் கெழிற்றூசன்
சங்கைபெறு மறிஞர்கட்குச் சாதுரிய முறுநேசன்
மங்குதலில் புகழ்ச்சுப்ர மணியநா யகனென்னு
மங்கிகுலத் தோன்றலென வனைவருஞ்சொல் தூயவனே.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்துவானும்,
கோயம்புத்தூர் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதருமாகிய
ம-ா-ா-ஸ்ரீ, அ. கந்தசாமிப் பிள்ளை
அவர்கள் இயற்றிய விருத்தம்.

நமது செந்தமிழில் அளவினுற் பெயர்கொள்
நயப்புறு நூல்களி லொன்ருய்
அமைவுறும் சுவைசால் சிலையெழு பஃதென்
றறைந்திடும் அரிய நூல் தன்னை

யெமைமிகர் வாரும் எளிதினி லுணர
வியற்றின னல்லுரை யன்னோன்
கமைமுதற் குணங்கட் கிருப்பிடமாய
கன துரை சாமிநா யகனே.
அத்தகு நூலை யச்சினி லேற்றி
யாவர்க்கும் பெரிதுப கரித்தான்
உத்தமன் சுப்ர மண்யனென் றுரைக்கும்
உயர்குணன் வன்னியர் குலத்து
மித்திர னென்னும் பத்திரா திபனாய்
விளங்குவோன் கோவைமா நகர்வாழ்
வித்தகன் பழனி யப்பபூ பதியாம்
மேதகைக் கேய்ந்த நண்பினனால்.

கோயமுத்தூர் பள்ளபாளையம்

மாணவர் தமிழ்ச்சங்கஸ்தாபகரும் போதகாசிரியருமாகிய

ம-௱-௱-ஸ்ரீ N. வையாபுரி பிள்ளையவர்கள்

இயற்றிய விருத்தம்.

வன்னியபூ பதிகள்குல மிகவிளங்க வளம்பெறுநற்
கவியாற் கம்பன்
பன்னுசிலை யெழுபதினுக் கழகுமிகுந் தெளிவுரையைப்
பாரோர் மெச்சும்
நன்னயஞ்சால் துரைசாமி நாயகனன் பானியற்றி
நல்கி நன்கு
தன்னுறும்பே ழைக்குடிக்கோர் பெரும்புகழ்ந்தந் தான் [காண்பீர்
சால நன்றே.
அன்னதொரு நூலினைநன் றெனவறிஞர் கண்டேத்த
வழகான் மேவுஞ்
சென்னைவேப் பேரிமது கரவிலா சப்பிரசிற்
சேர்த்து நாளும்

வன்னிகுல மித்திரன்பத் திரவதிப னெனும்பெயரை
வழங்கப் பெற்றே
மன்னுறுமா சுப்ரமண்ய நாயகன்றந் தானுலகோர்
மகிழ மாதோ.

கோயமுத்தூர் டவுன் பள்ளபாளயம்
மாணவர் தமிழ்ச்சங்கத்தின் காரியதரிசியாகிய,
ம-ா-ா-ஸ்ரீ, S. சுவாமிநாத முதலியார்
அவர்கள் இயற்றிய,
வெண்பா.

சீர்மணக்கும் பேற்றுனெஞ் செல்வக் கவிக்கம்பன்
நார்மணக்கும் வன்னிகுல நன்குறவே—தார்மணக்கப்
பூட்டுஞ் சிலையெழுப தென்றொருநூற் பொற்பேற
நாட்டின னிவ்வுலகில் நன்கு.
உவந்தளித்த விந்நூலுக் கோருரையை வன்னி
குலந்தழைப்பச் செய்தளிப்பீ ரென்னத்-தவந்தவமென்
றார்க்குந் துரைசாமி யாய்ந்துரையைத் தந்துலகோர்
பார்க்கும் படிபுரிந்தான் பார்.
பரிந்துரைத்த விந்நூலின் பண்புரையைப் பாரில்
விருந்தளிப்பான் வேண்டியே யச்சில்—அருந்தமிழோர்
பார்க்கப் புரிந்ததனுற் பண்புறுமா சுப்ரமண்யன்
பார்க்குள் உயர்ந்தான் பரிந்து.

கோவை அக்நிகுலக்ஷத்ரிய ஜில்லாசங்க காரியதரிசி
ம-ா-ா-ஸ்ரீ, R. பூபதிபழனியப்ப நாயகர்
அவர்கள் இயற்றிய விருத்தம்.

புலவர்புகழ் கலிங்கத்துப் பரணியினுன் ஜயங்கொண்டான்
புகழப் பெற்ற
அலகிலறி ஞன்கருணு சரத்தொண்ட மான்சபையி
லன்று கம்பன்

இலகவுரை சிலெயெழுப தெனு நூலே யரங்கேற்றி
யின்சீர் பெற்ருன்
நிலவுலகி லின்னூலுக் குரைதந்தான் துரைசாமி
நேயன் மாதோ.

வெண்பா.

உத்தம குலோத்துங்க சோழன் சரிதையுடன்
வித்தகமா யச்சில் விரைந்தேற்றி—மெச்சும்
சிலெயெழுப தாகநஞ் சுப்ரமண்யன் தந்தான்
உலகினிலுள் ளோர்களிப்ப வோர்ந்து.

கடவுள் துணை.

கம்பர் வரலாறு

பூமணக்கும் பொழில் மலிந்த தமிழ் நாட்டிலே "சோழவளநாடு சோறுடைத்து" என்றபடி நீர்நில வளங்களாற் சிறந்த சோழமண்டலத்திலே, தஞ்சையை யடுத்த தேரழுந்தூர் எனவழங்கும் திருவழுந்தூரிலே கம்பர் வாழ்ந்திருந்தனர் என்பர். கம்பர்வீட்டில் நாடோறும் புதுமட்பாண்டங்களில் சமையல் செய்வது வழக்கமாகையால் பிரதிதினமும் சமையல்செய்த பாண்டங்களைக் கொல்லையில் ஓர் புறத்தில் எறிந்துவந்ததால் நாளடைவில் அவை யோர் மேடாயின. கம்பருடைய வாழ்க்கைக்கு அறிகுறியாமாறு இம்மேட்டை எவரும் அழிக்காமல் விட்டதனால் நாளதுகாறும் அதுகெடாது "கம்பர்மேடு" எனவழங்கப் பட்டு வருகின்றது.

இவரைக் கம்பநாடு என்னும் ஒரு சிறு நாட்டையாண்டுவந்த சிற்றரசனுடைய புதல்வர் என்றும், ஓச்சன் வீட்டில் வளர்ந்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். தன்மகன் அம்பிகாபதி இராசகுமாரத்தியை இச்சித்ததனால் அரசன் சினந்து அவனைக்கொன்ற காரணம் பற்றிப் பழிக்குப்பழி வாங்கத்தருணம் பார்த்திருந்த இவர் வேட்டையாடும் போது ஒருயானையால் துரத்திவரப்பட்ட அவ்வரச குமாரனைக் "காட்டானைவிட்டாலும் கவியானை விடுமா" என்று ஈட்டியால் குத்திக்கொன்றனர் என்றதொரு கதையைக்கொண்டு இவர் க்ஷத்திரியரல்லராயின் அங்ஙனஞ் செய்யத் துணியாரெனச் சிலர் கருதுகின்றனர்.

"ஈடார் தருஞ்சோழ நாடதிலு றுந்திருவ ழுந்தூரினில்
பீடாரு மோச்சக் குலத்தொருவ னவ்வூர்ப் பெருங்கோயில்வாய்
நாடா னுதிக்குந் தொறுஞ்சென்று சங்கூது நல்வேலையான்
கோடாம லதுசெய்து வருநாளு ளொருநாளிற் கூருயிடை
கம்பத்தி னருகோர் சிசுக்கண்டு பெருகுங் களிப்போடெடுத்

தம்பத்த னேயும்வென்ற விழியுற்ற மனேயாள்கை யதைநல்கினுன்
கொம்பத்த வவண்மார்பி லமுதூறன் முதலாய குணமெய்தலால்
நம்பத்தி கண்டீச னருள்செல்வ மிதுவென்ன நனியெண்ணினர்.
கம்பத்தி னடியிற் கிடந்திட்ட தாற்கம்ப னென்னப்பெயர்
உம்பர்க்கு மெய்தாத பேருன பிள்ளேக் குவந்தோதினர்."

எனக்கூறும் புலவர் புராணத்தால் இவர் திருவழுந்தூர் ஒச்சன்வீட்டில் சிலகாலம் வளர்ந்தவர் என்பது உறுதிப்படுகின்றது.

கம்பத்தினடியிற் கண்டெடுக்கப் பட்டவராதலால் கம்பர் எனப்பெயர் பெற்ருரென்றும், காளிவரம் பெற்றுக் கவிபாடுமுன்னரே அறிவிலாச்சிறியராய்க் கம்பம்போல் இருந்தவராதலின் மற்றச்சிறுவர்கள் இவரைக் கம்பன் என்றழைத்த காரணத்தால் கம்பர் எனப்பட்டார் என்றும்; இவர் ஒச்சன்வீட்டில் வளர்ந்து வருங்கால், திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலியார் இவரைத் தம்மில்லத்திற் கழைத்துவந்து தம்மைந்தரோடு இவரையுங் கூட்டி ஓர்கணக்காயரிடத்தில் அனுப்பிக் கல்வி பயில்விக்க அவ்வுபாத்தியாயரது கம்பங்கொல்லேயைக் காத்திருந்த காரணம்பற்றி கம்பர் எனப்பட்டாரென்றும், அவ்வாறு கம்பங்கொல்லேயைக் காத்துவரும் நாட்களில் ஓர்நாள் நடுப்பகலில் நித்திரைவர அங்கிருந்த காளிகோயிலிற் படுத்துத் தூங்கிவிடவும் ஒரு குதிரைவந்து கொல்லேயை யழிப்பதாகக் கனவுகண்டு திடுக்கிட்டெழுந்து பார்க்க அவ்வாறே அவ்வூர் அதிகாரியாகிய காளிங்கராயனது குதிரை வந்து கொல்லேயை அழித்தலேக்கண்டு அதனே எவ்வளவு ஓட்டியும் ஓடாமல் மேயக்கண்டு தமது உபாத்தியாயருக் கஞ்சி அழுதனர். அங்ஙனம் அழுகின்ற அச்சிறுவர் முன்பாகக் காளிகாதேவி தோன்றி' நல்லிளஞ்சிறுவ! அழாதே நின்னுவைநீட்டு" எனவும் அவ்வாறே தம் நாவைநீட்ட அத்தேவி அவர் நாவில் கலேமகளாரது பீஜாக்ஷரத்தை எழுதிவிட்டு மறைந்துபோயினள். உடனே அம்மைந்தர்

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மேகேள்
காய்த்த தினேப்புனத்திற் காலேவைத்துச்—சாய்த்துக்

கதிரைமா ளத்தின்ற காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ.

என்றொரு வெண்பா பாடவும் குதிரைத்துள்ளி விழுந்து இறந்துவிட இச்செய்தி உபாத்தியாயருக்குத் தெரிந்து காளிங்கராயன் இதனைக்கேட்டால் என்னசெய்வானோ என்று அஞ்சி நடுங்குவதைப் பார்த்து அவர் மகிழும்படி "குதிரைமீளக் கொண்டுவா" என்ற கடைசியடியை மாற்றிப்பாடவும் உடனே அப்பரி யுயிர்த்தெழுந்தது. இதனைக் கேள்வியுற்ற காளிங்கராயன் இவரை வரவழைக்க இவரும் கம்பங்கொல்லையைக் காத்திருந்த கம்பத்துடனே சென்றாராதலின் இவரைக் கண்ட அரசன் "இந்தக் கம்பனா அதுசெய்தவன்" எனக்கேட்டதனால் வந்த பெயரென்றும் பலவாறு கூறுகின்றனர்.

மகா கவிச்சக்ரவர்த்தியாகிய இவர் இராமபக்தியிலும் ஆழ்வார்பக்தியிலும் ஈடுபட்டிருப்பதைக் கண்டு வியந்த ஸ்ரீரங்கத்து வித்வாமிசர்கள் இவரைக் கம்பநாட்டாழ்வார் எனப்புகழ்ந்தனர். இவர் காலத்திருந்த புலவர்கள் புகழேந்திப்புலவர், ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலியவர்கள்.

கம்பர் இயற்றிய நூல்கள சரஸ்வதியந்தாதி, சிலையெழுபது, இராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது முதலியன. இவற்றுள்;

சரஸ்வதியந்தாதி:—காளி அநுக்கிரகம்பெற்ற சிறுபிராயத்திலேயே தமக்குமேன்மை யுண்டாவதற்குக் காரணமாகிய சரஸ்வதி தேவியை முப்பது பாட்டுகளைக் கொண்ட ஓரந்தாதியினாற் பாடித்துதித்தனர். கலைமகளும் இவருக்கு அருள்புரிநது சமயாசமயங்களில் கிருபை பாலித்து வந்ததைக் கம்பர் இராமாயணம்பாடி அரங்கேற்றியது முதலிய சரிதங்களாலறியலாம்.

சிலையெழுபது:—வேந்தர்மதிக்கும் வீரக்கவியாகிய இவர் அக்கினி குலத்தரசர்கள் புகழ்ப்பொருள் விளங்கும் வண்ணம் க்ஷத்ரியர்களுக்குரிய அரசியலைத் தொகுத்துச்

சிலையெழுபது என்னும் இப்பிரபந்தத்தைப்பாடி அக்காலத்தில் காஞ்சியில் அரசுபுரிந்த கருணாகரச் சோழனது சபையிற் கொண்டுபோய் அவனனுமதியால் மூதறிவோர் கேட்டுமகிழும்படி அரங்கேற்றுதல் செய்து, அம்மன்னனால் மகிழ்ந்து கொடுக்கப்பட்ட எழுபத்தொன்பதினாயிரம் பொன், தண்டிகை, ஆபரண முதலிய பூஷணங்களைப் பெற்றதோடு தாமனுபவித்த நிலத்துக்கு அரசிறை கொடுக்கவேண்டியதில் வருஷம் ஆயிரம்பொன் தள்ளிக் கொடுக்கும்படியும் செய்துகொண்டனர். கருணாகரச் சோழன் தொண்டை மண்டலம் ஆண்ட சோழவரசனென்பதும், அவன்முன் இதனைப்பாடிப் பரிசுபெற்ற இந்நூலின் 68-வது கவியில்விரிவாய்க் கண்டுகொள்ளலாம்.

இராமாயணம்:—மேற்கண்ட இருநூற்களையும் இயற்றிய சிலவருடங்களுக்குப் பின்னர் இரண்டாவது குலோத்துங்கச் சோழனனுமதியின் பேரில் இக்கவிச்சக்ரவர்த்தி இராமாயணத்தைப் பாடினாராகையால் இவருடைய கவித்திறமை எல்லாம் ராமாயணத்தில் முற்றும் விளங்கி நிற்கின்றது.

சடகோபரந்தாதி:—இராமாயணத்தை ஸ்ரீரங்கத்திற் கொண்டுபோயரங்கேற்ற யத்தனிக்கையில் ஸ்ரீமந்நாத முனிகள் கம்பநாட்டாழ்வாரை நோக்கி "நீ நஞ்சடகோபனைப் பாடினால்தான் நாம் உமது இராமாயணத்தைத் திருவுளம்பற்றுவோமென", அவ்வாறே நூறு கட்டளைக் கலித்துறையில் சடகோபரந்தாதியைப் பாடி முடித்தார்.

ஏரெழுபது:—கம்பர் பேரும்புகழும் எய்திய பின்னரே தன்னை வளர்த்த திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப முதலியார் செஞ்சோற்றுக் கடனைத் தீர்க்கும் வண்ணம் வேளாளர் பேரில் ஏரெழுபதைப்பாடினார்.

சிலையெழுபதைப் பாடியகாலம்:—ராஜேந்திர பல்லவ ராயன், கோவிராஜகேசரிவர்மன், கோவிராஜ சக்ரவர்த்திகள் என்று சாசனங்களாலும், ஜயதரன், ஜயதுங்கன், குலோத்தமன், அபயன் எனக்கலிங்கத்துப் பரணியாதி

களாலும், அநபாயச் சோழனெனப் பெரிய புராணத்தாலும், வழங்கப்படுபவனாகிய முதலாவது குலோத்துங்க சோழனிடம் கருணாகரத் தொண்டைமானென்பவன் மந்திரியாகவும் சேனைத் தலைவனாகவும் இருந்து கலிங்க தேசத்தின் பேரிற் போருக்குச் சென்று அந்நாட்டைச் செயித்துத் திரும்பியவனென்று ஜெயங்கொண்டான் பாடிய கலிங்கத்துப் பரணியில் நன்கு உணரக் கிடக்கின்றது. முதலாவது குலோத்துங்கன் கி. பி. 1070 முதல், கி. பி. 1118 வரையில், அரசாண்டவனென்று சரித்திர ஆராய்ச்சியில் வல்லோர் பலர் முடிவுகட்டி யிருக்கின்றனர். முதலாவது குலோத்துங்கனுக்குப் பிறகு சில காலம் கருணாகரன் காஞ்சியில் அரசு புரியும் சமயத்தே கம்பர் இந்நூலை அவனது சமுகத்தே அரங்கேற்றினாரென்பது உறுதிப்படுகிறதால் சுமார் 800-வருடங்களுக்கு முன்னென்று ஏற்படுகிறது.

இனி இராமாயணத்தை எக்காலத்தில் இயற்றினாரென ஆராயப் புகுவோமானால், நாம் மேலே கூறிய முதலாவது குலோத்துங்க சோழனது குமாரனாகிய விக்கிரமச் சோழன் கி. பி. 1118 முதல், கி. பி. 1128 வரையில் அரசியற்றியவ னென்றும், அவனது சமுகத்திலேயே ஒட்டக்கூத்தர் சமஸ்தான வித்வானயிருந்து அவன் பேரில் விக்கிரமச் சோழனுலாபாடி னாரென்றும் புலப்படுகின்றது; நிற்க,

ஷை விக்கிரமச் சோழனது குமாரனே இரண்டாவது குலோத்துங்கச் சோழனெனப் பெயர் பெற்று கி. பி. 1128 முதல், கி. பி. 1158 வரையில் அரசியற்றியவன். அச்சோழனுக்கே ஒட்டக்கூத்தர் உபாத்தியாயராக விருந்து கல்விபயிற்றி வந்ததனால்,

"பாடும்புலவர்புக ழொட்டக் கூத்தன்பதாம்புயத்தை, சூடுங் குலோத்துங்க சோழனென்றே யென்னைச் சொல்லுவரே"

என்றும அம்மன்னனே கூறியிருத்தலாலும், கம்பரையுங், கூத்தரையுங் கொண்டு இராமாயணத்தைப் பாடும்படி செய்தவன் இரண்டாவது குலோத்துங்கச் சோழனே என்பதும் வெள்ளிடைமலை போல் விளங்குகின்றது.

இத்தகைய் ஆதாரங்களை நாம் உற்று நோக்குவோமாகில் கி. பி. 1090 க்குமேல் கி. பி. 1170 வரையில் சுமார் 80-வருட காலம் கம்பர் ஜீவித்திருந்தவரென்பதும், தமது வாழ்நாளின் முற்பகுதியில் சிலையெழுபதைப் பாடினாரென்பதும் மறுக்கமுடியாத விஷயமாகும். ஒருபுலவன் கேட்போர் களிக்கத் தெள்ளிய நடையிலும் கடின பதங்களை அமைத்தும் பாடவல்லவன் என்பதைக் கருதுவோர் இது கம்பர்பாடிய நூலென்பதில் ஐயங்கொள்ளார். இவரது சரிதையை ஆராயப்புகுவோர் சிலர் முதலாவது குலோத்துங்கன், இரண்டாவது குலோத்துங்கன் என்பவர்களது காலவரையும் இவர்கள் மெய்க்கீர்த்தியையும் அறியாது மயங்குவர். முதலாவது குலோத்துங்கச் சோழன், ஏகசக்ராதிபதியா யரசியற்றியவன்; கலிங்கத்துப் பரணிகொண்டவன்; சேக்கிழார் பெருமானுக்கு உத்தமச் சோழப் பல்லவன் என்ற உயர்பட்ட மளித்து அவருக்கு வேண்டிய உதவி புரிந்து பெரிய புராணத்தைப் பாடும்படி செய்தவன்.

இவன் மகா சிவபக்தனென்று உமாபதி சிவாசாரியார் கோயிற் புராணத்தில் புகழ்ந்துரைத்துள்ளார். இம்மன்னனது காலத்தில் கம்பர் இராமாயணம் பாடினாரென்று கொள்வது முரண்படும். இவனது காலத்திற்குப் பிறகே கம்பர் இரண்டாவது குலோத்துங்கன் காலத்து இராமாயணத்தைப் பாடிமுடித்தார்.

சிலையெழுப தென்னும் இப்பிரபந்தத்தின் கருத்து:— சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களாகிய வன்னியர்கள் முதலில் தெய்வத்தை வணங்கிக் குரவர்களைப் புகழ்ந்து, வேதசாஸ்திரவிதி வழுவா வகையாகச் சுபதினத்தில் வில்லை யெடுத்துப் பயின்று பகையை அழித்து ஜயமடைந்து. நால்வகைச் சேனைகளோடும் அரண்களையுடையவர்களாகி, துவசத்தை நாட்டி, அரசாட்சி மண்டபத்துள் சிங்காசனத்தின் மேலமர்ந்து, முடி சூடி, மகர கேயூர கிரீடந்தரித்து, சந்திரவட்டக்குழை நிழல் செய்யும்படி செங்கோல் நடையினால் ஆக்கினா சக்கிரத்தைச்

செலுத்தி, தொழினெறி பிறழாது முத்திரை மோதிர மணிந்து, துஷ்ட நிக்கிரகஞ் செய்து, காவல் புரிந்து யாவரும் தொழுதல் முதலியவை செய்யச் செல்வாக்கினல் புகழையடைந்து, குற்றங் கடிந்து, பெருந் தன்மையோடும் இதய வண்மையுடையவராகி, தேவர்களும் பிராமணர்களும் இலக்குமியும் மன்னவர்களும் பெண்களும் வித்வான்களும் பகைவர்களும் முறையே வியக்கவும், வாழ்த்தவும், வசிக்கவும், திறையளக்கவும், நடிக்கவும், துதிக்கவும், வணங்கவும், ஏற்றதாய் இராஜ சமுகத்தோடும் பெரும்பதி இருந்து; அரசர்கள் புடைசூழ நெறி தவறாது, சாந்த முதலிய குணங்களோடு நிறைந்து, ஈதல் வள்ளற்றன்மை யுயர்ந்து, அடுத்தவர்களுக்குத் தாழ்வைத் தராது, உமையருளோடும் அகண்ட ஐசுவரியத்தையும் தசாங்கத்தையும் உடையவர்களாகி, தமது குல ஒழுக்கப்படி மனுமுறை வழுவாது அரசு புரிந்து வருகின்ற இவர்களது வில்லைத் தேவரும், மூவரும், அகத்தியனும், அனந்தனும் கூறல் வேண்டுமே யொழிய எம்போல்பவராற் புகழுந் தகமையதோ சொல்வீர்களாகவென" கருணாகரத் தொண்டை வன்னியன் கேட்டுப் பரிசு கொடுக்கக் கம்பர் பெற்றுக் கொண்டு துதித்தது என்பதை 68-ம் பக்கத்திற் காண்க.

இந்நூல் உரையெழுதுவதற்காக முயற்சியெடுத்துக் கொண்ட குலாபிமான கனவான்களாகிய இராஜ வன்னிய ராஜஸ்ரீ, பூந்தோட்டம் வன்னிகுலசேகர வி. குருசாமி நாயர், காரைக்கால், வ. இராமலிங்க படையாட்சியார், நாகப்பட்டினம், அரங்க இராமசாமி நாயகர், காரைக்கால் சாஸ்திர ஆராய்ச்சி வி. குருசாமி படையாட்சியார் முதலியவர்களுக்கும், சிரமம் பாராது உரை யெழுதி முடித்த பேழைக்குடி, ம. துரைசாமி நாயகர் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

வன்னிகுல மித்திரன்,
பெரம்பூர் பாரக்ஸ்
மதராஸ். 1915.

ஆ. சுப்பிரமணிய நாயகர்.

கடவுள் துணை.

சிலையெழுபது.

சிலையெழுப தென்பது: சிலையை எழுபது செய்யுளால் கூறுவது என இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் இந்நூற்குக் காரணக்குறி யாயிற்று. சிலையென்னும் பலபொருளொரு சொல் இங்கே வில்லை யுணர்த்தி நின்றது. உணர்த்தவே முடி, கொடி, குடை முதலிய மற்றைய வங்கங்களையும் பெறுமென்ப தென்னை? "ஒரு மொழி யொழிதன் னினங் கொளற் குரித்தே" என்றதனாலறிக. * இதனாற் புலப் படுவதி யாதெனின், அதற்குரிய வருணத்தை விளக்கும்; அது க்ஷத்திரிய வருணமென்க. அவ் வருணத்திற் கிஃ துரித் தென்ப தென்னை? தொல்காப்பியம் பொருளதிகாரம் மரபியல் "படையுங் கொடியுங் குடையு முரசும் - நடை நவில் புரவியுங் களிறுந் தேருந் - தாரு முடியு நேர் வன பிறவுந் - தெரிவு கொள் செங்கோ லரசர்க் குரிய" என்னும் எக-வது சூத்திரத்தானும். "வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந் - தாரு மாரமுந் தேரும் வாளு - மன் பெறு மரபினே ரேனோர்க்கு முரிய" என்னும் அங-வது, சூத்திரத்தானும், "(அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை" என்னும் அச-வது சூத்திரத்தானு) மறிக. (வில்லி யென்ப

* உதாரணம். சோற்றையுண்டா னெனவே, கறி முதலிய வற்றையும்; பாக்கைத்தின்றா னெனவே, வெற்றிலை சுண்ணம்பு முதலியவற்றையுங் காட்டு மாறுபோல, வில்லைக் கூறவே மற் றைய முடி, கொடி, குடை முதலிய அங்கங்களையுங் காட்டிய தென்க.

தனால், வேடர் விற்பெற லிலேயோ வெனின்? பெறினும் அதனால் விஜயத்தைப் பெற்று, மற்றையவங் கங்களோடும் உலகத்தைக் காத்த லவர்கட் கில்லையென மறுக்க.) "முடி முதலிய சிறந்த உறுப்புகளிருக்க வில்லைக் கூறுவதென் னையோ வெனின்? (நன்று கூறினாய்) க்ஷத்திரியர்களது பிறப்பிடம் பிரமாவின்றோள்; அந்த க்ஷத்திரியர்களது தோள் சம்பந்தமாகிய கையினிடமிருந்து அத்தோட்கும் அவர்கட்கும் விஜயத்தையுங் கீர்த்தியையுங் கொடுக்க அதனால் மற்றையவங்கங்களையும் அடைகிறபடியால் * வில்லையே கூறலாயிற்று. எழுபதென்பது எண்களின் றொகுதி; செய்யுட்டொகையை யுணர்த்தியது. இந்நூல் செய்ததெதன் பொருட்டெனில்: பரிசுபெறற்பொருட்டென்க. இப்படி நூல்செய்வதற்கு விதியாதெனின்? முற்கூறிய தொல்காப்பியம், பொருளதிகாரம் புறத்திணை யியல் "கொடுப்போ ரேத்திக் கொடாஅர்ப் பழித்தலு - மடுத்தூர்ந்தேத்திய வியன்மொழி வாழ்த்துஞ் சேய்வரல் வருத்தம்வீட வாயில் காவலர்க் குரைத்த கடைநிலையானுங் கண்படை கண்ணிய கண்படை நிலையுங் கபிலை கண்ணிய வேள்வி நிலையும் வேலி னோக்கிய விளக்குநிலையும் வாயுறை வாழ்த்துஞ் செவியறிவுறூஉம்-ஆவயின் வரூஉம் புறநிலை

---

* படைக்கலம் பயிறலில் விற்றொழில் சிறந்தது. அப்படி அரசர்களுக்குரிய தொழில்களி னொன்றாகிய படைக்கலம் பயிறலில் விற்றொழிலே சிறந்த தென்பதை மகாபாரதம் சாந்தி பருவம் வீட்டு மனைக்கண்ட சருக்கம் "சுரு மாமகம் பயிலுதல் சிலை மறை தொடர்தல், விருதி னோடொரு படைகளு மளிக்குதன் மேவார்ப், பொருத ழித்தனல் உயிர்களைப் பொதுமையிற் புரத்தய் இருநி திக்குழா மீதன் மன்னவர்குல வியல்பே "என்னும் கூ-வது கவியில் சிலைமறை தொடர்தல் என்றதனாலும் ஸ்மிருதியாதிகளாலுமறிக.

வாழ்த்துங் கைக்கிளை வகையோ டுளப்படத் தொகைஇத்-தொக்க நான்கு முளவென மொழிப" என்னும் ௩டு-வது சூத்திரத்தில்இது "அடுத்தூர்ந் தேத்திய வியன்மொழி வாழ்த்து." அதாவது தலைவன் எதிர்சென்று அவன் செய்தியையும், அவன் குலத்தோர் செய்தியை ஏற்றி, முன்னிலை படர்க்கை யென்னும் இரண்டிடத்தினுள் ஒன்றானாற் புகழும் இயன்மொழி வாழ்த்து; அவற்றில் இது படர்க்கையிற் புகழ்ந்த வியன் மொழிவாழ்த் தென வறிக. சிலை யெழுபதென்பதற்குப் பரிசுபெறுவா னொரு வன் அப்பரிசு பெறு வண்ணம் ஈவான் முற்சென்று அவனையும், அவன் குலத்தோரையும், அவன் குலத்துக்குரிய வில் முதலிய அங்கங்களை எழுபது செய்யுளாலேற்றிப் படர்க்கையிற் புகழ்ந்த இயன்மொழி வாழ்த்தாகிய நூலெனப் பொருள் கூறுக. *

பாடினோனைப் பாயிரம். உ-வது கவியினும், நூல் கஎ-வது கவியினும், ஈந்தோனை நூல் சுச-வது கவியினும் காண்க.

இப்பிரபந்தம் பாயிரம், நூல் ஆகிய இரண்டனுள் "தெய்வ வணக்கமுஞ் செய்பொருட் டொகையும்" செப்புதலால் பாயிரஞ் சிறத்தலின் பாயிரத்தைக் கடவுள் வணக்கம், குலவுற்பவம், குலமாட்சிமை முதலியவற்றுடன் கூறி, அக்குலமாட்சிமை யானது படை, குடி, கூழ்,

---

* க்ஷத்திரிய வருணமென்னும் முதற் பொருட்கு வில்முதலியவைகள் சினைப்பொருள். சிலைகளிலாது முதலும் முதலிலாது சினைகளும் இல்லை; யாதலால் சினைப்பொருள்களைக் கூறவே முதலே ஆயது. இதைத்தொல்காப்பியஞ் சொல்லதிகாரம் வேற்றுமையியல் "முதலுஞ் சினையும் பொருள் வேறுபடாஅ-நுவலுங்காலை சொற்குறிப்பினவே" என்னும் சு-வது சூத்திரத்தாற் காண்க.

அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு உறுப்பினைக்கொண்ட அரசியலாதலின்; அவ்வாறனுள் படை அரண் இவ்விரண்டும் முன்னும் மற்றைய நான்கும் அரசுறுப்பிலாக அரசெனப் பின்னும், அவை நிலைபயப்பத் துதித்தலாகிய வாழ்த்தை ஈற்றினும் வைத்து, முறையே நூலைப் படை, அரண், அரசு, வாழ்த்து, என நான் குறிப்பினதாகக் கூறியிருக்கிறார் என வறிக.

அரசிலாறு என்பதைத் திவாகரம் கஉ-வது பல்பெயர் கூட்டத்தொரு பெயர்த்தொகுதி "படையுங் குடியுங் கூழு மமைச்சு-மரணு நட்பு மரசியலாறே" என்னும் அரு-வது சூத்திரத்தா னுணர்க; நாயனாரும். "படை குடி கூழமைச்சு நட்பர ணாறு—முடையா னரசரு ளேறு" என்றாரென்க. சினை-ஆகுபெயர்.

இந்நூல் சரஸ்வதி அநுக்கிரகம்பெற்ற மஹான் வாக்காதலின் அதற்குச் சிற்றறிவுடைய என்னால் எழுதிய உரையில் வழுவிருப்பின் மூதறிவோர் யாவரும் ஆய்ந்து களைந்து கனம் பண்ணி உபயோகித்துக்கொள்வார்களென அவர்களது மேலான கனத்தைக் கோருகிறேன்.

பேழைக்குடி, ம. துரைசாமி நாயகர்.

கடவுள் துணை.

சிலையெழுபது

மூலமும் உரையும்.

பாயிரம்.

பாயிரமென்பது.—வரலாறு. அது நூலுக்கு முன் சொல்வது. முகவுரை யெனினும், பாயிரமெனினும், நூன் முக மெனினும் ஒக்கும். அதை "ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிரமில்லது பனுவ லன்றே." என்பனவாக லின், மாநகர்க்குக் கோபுரமே போலும், இங்கே நூலுக்கு முதலில் வைத்து எட்டுக் கவிகளால் பாயிரங் கூறினர்.

கடவுள் வணக்கம்.

கடவுள் வணக்கமென்பது:—தெய்வத்தை வணங் கிக் கொள்ளுதல். அது, இந்நூல் நிறைவுபெறற் பொருட் டாதலின் இங்கே பாயிரத்துக்கு முதலில் வைத்துக் கூறினர்.

கோச்சகம்.

திருவளரும் வன்னியர்செஞ் சிலையெழுப திணைவிளம்ப
மருவளர்பைங் கடுக்கையும்வெண் மதியுமிலைந் தோன்வாமத்
துருவளரும் வரைமடந்தை யுவந்தளிப்பத் தோன்றிவரந்
தருவளஞ்செய் விகடசக்ரத் தந்திமுகன் றுடொழுவாம். (1)

(இதன் பதப்பொருள்.) திருவளரும் வன்னியர் - செல்வம் நிறைந்திருக்கின்ற வன்னியர்களது, செம்சிலை எழுபதினை விளம்ப - (குலத்துக்குரிய) அழகிய சிலை எழுப தென்னும் பிரபந்தத்தைச் சொல்ல, மருவளர் பைங்கடுக் கையும் வெண்மதியும் மிலைந்தோன் - வாசனை தங்கிய பசியகொன்றை மாலையையும் வெள்ளிய சந்திரனையும்

அணிந்த சிவபெருமானும், வாமத்து உருவளரும் வரை மடந்தை - (அவரது) இடது பாகத்து வடிவமைந்து விளங்கும் பார்வதி தேவியாரும், உவந்து அளிப்பத்தோன்றி - களிப்பினேடு பெறப்பிறந்து, வரந்தரு வளஞ்செய் - (பக்தர்கள் விரும்பும்) வரங்களைத்தரும வளப்பத்தினைச் செய்யாகின்ற, விகட சக்ரதந்திமுகன்தாள் - விகடசக்ர விநாயகரது பாதங்களை, தொழுவாம் - யாம் வணங்குவாம் (என்றவாறு).

கருத்து. சிலையெழுபது என்னும் இப்பிரபந்தத்தைச் சொல்ல விகட சக்ரவிநாயகர் பாதத்தை வணங்குவாம். என்பதாம்.

இவ்விநாயகருக்கு விகட சக்ர விநாயகரெனப் பெயர் வந்த காரணத்தைக் காஞ்சிப் புராணத்துட் காண்க.

அஷ்ட ஐசுவரியமு முடையவராகையால், திருவளரும் வன்னியர் என்ருர். இதை சூச-வது கவியிற்காண்க. இதுவன்றி சஅ-வது கவியில் மாவசையாப் பெருஞ் செல்வரென்றதனுலு முணர்க.

இதில் வன்னியரென்பது:—சோம சூரியாக்கினியென்னும் க்ஷத்திரிய குலத்தோர் மூவரையும் முக்குலத்தோருண்டென்பதென்னை? திருவிளையாடல் திருவாலவாய்க் காண்டம் திருவாலவா யானபடலம்.

"வெள்ளநீர் வறப்பவாதி வேதியன் ஞாலமுன்போ
லுள்ளவா றுதிப்பநல்கி யும்பரோ டிம்பரேனைப்
புள்ளொடு விலங்குநல்கிக் கதிருடற் புத்தேண்மூவர்
தள்ளரு மரபின்முன்போற் றமிழ்வேந்தர் தமையுந்தந்தான்.

என்னும் கஉ - வது கவியில் "கதிருடற் புத்தேண் மூவர் தள்ளருமரபின் முன்போற் றமிழவேந்தர் தமையுந்தந்தான்" என்றதனுலுணர்க. கதிருடற் புத்தேளிர் மூவராவார் முச்சுடரை. என்னை? திவாகரம் கஉ-வது பல்பெயர் கூட்டத்தொரு பெயர்த் தொகுதி "முச்சுடராதித்தன் சந்திர னங்கி" என்னும் கக - வது சூத்திரத்தால் சூரியன் சந்திரன், அக்கினி என வுணர்க. தமிழ்

வேந்தராவார், சேர, சோழ, பாண்டியரை, இவர்களிற் சேரன் அக்கினிகுலமென்க. அம்மூவேந்தருட் சேரன் அக்கினிகுல மென்ப தென்னை? ஸ்ரீவில்லிபுத்தூராழ்வார் பாரதம் ஆதிபருவம் திரௌபதி மாலையிட்ட சருக்கம்

"இவன்சல் லியனென் றுரைசான்ற விகல்வேன் மன்னர்க் கேறனையா, னிவன்றன் பகைவர் யாவரையு மிமையோராக்கு மெழினீல, னிவன்றண் டமிழ்சே ரடல்வழுதி யிவன்றே ரிரவி குலவளவ, னிவன்செந் தழலோன் மரபாகி யீரேழுலகும் புகழ்ச்சேரன்"

"என்னும்." சரு-வது கவியில் 'இவன் செந்தழலோன் மரபாகி யீரே ழுலகும் புகழ்ச்சேரன்" என்றதனு லுணர்க. திவாகர நிகண்டு முதலிய நூற்களிற் கூறியிருக்குமோ வெனின்; கூறியே யிருக்கின்றது. என்னை? தமிழ் வேந்தர் மூவருக்கும் முறையே பெயர் சொல்லவந்த பொழுது முன்னும் பின்னும் சேரனையும் பாண்டியனை யும இன்னகுல மென்று தோன்றாது வாளாகூறி, மத்தியிற் சோழன் பெயரைக் கூறும்போதுமாத்திரம் சூரிய குலமென்று தோன்ற சூரியனென ஒரு பெயரிருக்கிறது; இருக்கவே சூரியனுக்கு ஒளிகொடுப்பது அக்கினியாதலால், முதலிற் கூறுஞ் சேரன் அக்கினிகுலமென்றும் சூரியனால் ஒளிபெறுவது சந்திரனுதலால் இறுதியிற்கூறும் பாண்டியன் சந்திரகுலமென்றும் தானே குறிப்பாலுணர்த்துதலா லுணர்க. வன்னி, தழல், அக்கினி, அங்கி, கனல், சுசி என்பன ஒரு பொருட் சொற்கள். அப்படி யாகுங்கால் சேரன் குலத்தார் சிலையெழுப தென்றே கூறலாமே யெனின் அதற்கன்று; சேரன் குலத்தார் சிலையெழுப தென்று கூறின், மற்றைய விரண்டுகுலமுங் குறிப்பாலடங்கி யிருப்பினும் வெளிப்படையிற் பொருந்தா; வன்னியரென்பதோ இயற்கையிற் சேரன் குலமாயினும் மற்றைய இரண்டு குலத்தையுந் தழுவிக்காட்டு மென்னுங் கருத்தால் இந்நூலாசிரியர் வன்னியர் சிலையெழுபதென்றே கூறினரென வுணர்க. மற்றைய விரண்டு குலமுஞ் சேரன் குலத்தி லடங்கு மென்ப தென்னை? குலசேகரப் பெரு

மாள் சொன்ன திராவிட வேதத்தில் உகூ-வது தேட்டருந் திறல் அழகிய மணவாளர் விஷயம்.

"அல்லிமாமலர் மங்கைநாத னரங்கன் மெய்யடியார்கட, மெல்லையி லடிமைத் திறத்தினிலென்று மேவு மனத்தனுங், கொல்லிகாவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன், சொல்லினின்றமிழ் மாலைவல்லவர் தொண்டர் தொண்டர்களாவரே."

என்னும் கய-வது பாசுரத்தில் இவர் அக்கினி குலமாகிய சேரன் குலத்தாராகவிருந்தும் சூரியகுலமென்பது தோன்ற கோழிக்கோ னென்றும், சந்திரகுலமுந் தானெனத் தோன்ற கூடல் காவலனென்றுங் கூறியவாற்றுணர்க. உருத்ர வன்னியன், இக்ஷ்வாகு, புரூரவர் முதலினோர் வம்சங்களையுங் காட்டுமோவெனின் காட்டுமென்க. என்னை? இந்நூலில் ஆக்னேயக் கருத்தை யொட்டி "சம்புகோத்திரவரெனப்" பல விடங்களிற் சொல்லியிருப்பதால் உருத்ர வன்னியன் முதலியோரையும், மேற்படி குலசேகரப் பெருமாள சொன்ன கண்ணபுரத்தொளிர் காகுத்தன்றாலாட்டு.

"கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய்
தங்குபெரும் புகழ்ச்சனகன் றிருமருகா தாசரதி
கங்கையினுந் தீர்த்தமலி கணபுரத்தெங் கருமணியே
யெங்கள்குலத் தின்னமுதே யிராகவனே தாலேலோ."

என்னும் ங-வது பாசுரத்தில் இராமனை எங்கள் குலமென்றாராதலின் இட்சுவாகு முதலியோரையும், மேற்படி சேய்வளர் காட்சியின்சீரை கோதைபோல் தாய் தேவகி பெருத்தாழ்வெண்ணிப் புலம்பல் "முந்தை நன்முறையன்புடை மகளிர் முறைமுறைத் தத்தங் குறங்கிடையிருத்தி, யெந்தையே யென்றன் குலப்பெருஞ் சுடரே யெழுமுகிற் கணத்தெழில்கவ ரேறே, யுந்தை யாவனென்றுரைப்பநின் செங்கேழ் விரலினுங்கடைக் கண்ணினுங் காட்ட, நந்தன் பெற்றன னல்லுணர் வில்லா நங்கள் கோன்வசு தேவன் பெற்றிலனே"

என்னும் ௩-வது பாசுரத்தில் நங்கள்கோன் வசு தேவன் என்றதனால் புரூரவர் முதலியோரையும் காட்டி யதையுணர்க, இதன் ௭-வது கவியில் "வன்னி யிறைக் குலத்தி லுதித்தவரே" என்றும், நூல் முதற் கவியில் "அணிவனிய குலவரசர்" என்றும், ௪-வது கவியில் "வனிய குலவரசர்" என்றும், ௭-வது கவியில் "சுசியுதித் தோர்"என்றும், ௧௨-வது கவியில் "அக்கினிகுலத்தரசர்" என்றும், ௧௫-வது கவியில் "வன்னியமன்னர்" என்றும், ௨0-ல் "உறழ்தோளார் வன்னிமன்னர்" என்றும், ௨௧-ல் "வனிய குலவரசர்" என்றும், ௨௩-ல் "திண்ணமுறு வன்னிமன்னர்" என்றும், ௩௨-ல் "சயங்கூற வன்னி மன்னர்" என்றும், ௩௩-ல் "வேதியர்க்குதவு வன்னி மன்னர்" என்றும், ௩௪-ல் "புகழ் வனிய வரசர்"என்றும் ௩௬-ல் "வயமுறு வன்னிய வரசர்" என்றும், ௩௭-ல் "வீரவன்னிமன்னர்" என்றும், ௩௮-ல் "வன்னிமன்ன ரெனு மேன்மக்கள்" என்றும், ௪0-ல் "சீராரும் வன்னி மன்னர்" என்றும், ௪௧-ல் "தழலிடை வந்தவதரித்தோர்" என்றும், ௫௧-ல் மூன்று குலத்தினுள் "தூய்தாங்கனற் றோன்றும், பன்னும் புகழ்கொளரசர்களே" என்றும், ௫௨-ல் "மிக்கோர் வன்னிமன்னர்" ௫௫-ல் "வன்னியரசர் சமுகம்" என்றும், ௫௯-ல் "வன்னிவேந்தர்" என்றும், ௬௨-ல் "வனிய நிருபர்" என்றும், ௬௬-ல் "வன்னியர சன்றி" என்றும் பிரித்துக் கூறியிருக்கின்றதே யெனில்? அதற்கு இதன் ௮-வது கவியில் "மலயமன்னர் குன்றவர் பல்லவர்" என்றும், நூல் ௬-ல் "படிபுரக்க வவதரித்த பண்ணுடர்" என்றும், ௮-ல் "இறைவர் பண்ணுடர்" என் றும், ௨௫-ல் "வாழ்விக்கும் பண்ணுடர் என்றும், ௪௩-ல் "அரசாள்வது பண்ணுடர் தந்தொழிலே"என்றும், ௪௫-ல் "நவில் பண்ணுட்டாரே" என்றும், ௫0-ல் "மங்கையர் கோன் சொலத்தகு பல்லவராயன் மரபிற்றோன்றி" என் றும், ௫௩-ல் குணத்தோர் பண்ணுடரே என்றும், ௫௫-ல் "தமிழ்வேந்தர் இமையப் பொருப்பர் பண்ணுடர்" என் றும், ௫௬-ல் "பண்ணுடர் தமது பெரும்பதி யிருப்பால், என்றும், ௬௬-ல் "நாடு பலவினுக்கரசு பண்ணுடு" என்

றும், சுஎ-ல் "வீர பண்ணுடர் வில்லே" என்றும், மற்றைய கவிகளில் பொதவில் "வன்னியர்" என்றும், ௬க-வது கவியாகிய கொடிச் சிறப்பில் "அடர்ப் புவி மூன்றினுந் தாமே அரசியற்றும்படி தாவ" என்றும் கூறியிருப்பதால் பொதுவாயதெனவே துணிக. மிகுதிபற்றிச் சிறப்பெனலாகாதோவெனில்? அறியாது கூறினுய்! மதுதெளிவெனச் சொல் முதமொழி நல்லாய் * அக்கினிக்குள் சூரியனும் சூரியனுக்குள் சந்திரனும் அடங்குதலின் உற்று நோக்குங்கால் முழுமையும் அக்கினியின் மயமேயன்றி வேறுயாது? நீயே கூறுக. அதுபோல அவ்வக்கினி குலமே மற்றையது மென்பார் மிகுதியுமமைத்துக் கூறினரென வுணர்க இக்காரணங்களால் வன்னியரென்னும் பதம்: யுகங்கடோறும் † ஆதியில் பிரமாவினுலேயே தோன்றி தமிழ்வேந்தர் மூவருள் சேரன் குலத்துக்காகி, பிறகு சோழ பாண்டியர்களைத் தழுவிக்காட்டி மற்றைய தேசத்தரசர்களுக்கு மாயதோர் மொழியென வுணர்க.

நூற்பெயரும், ஆக்கியோன் பெயரும்.

நூற்பெயரும் ஆக்கியோன் பெயரும் என்பது நூலினது பெயரும் அதைச் செய்தவன் பெயரும் முதலியன. அது வடநூல் வழக்குப்பற்றி தானே நாந்திக்கூறிக் கொள்ளுதலின் இங்கே கடவுள் வணக்கத்தின் பின்வைத்துக் கூறினுர்.

---

* க்ஷத்திரியகுல மூன்றனுள் முதன்மையுடையது அக்கினி குலம்; அக்குலத்துக்குரிய அரசியலாகிய படை முதலிய வுறுப்புகளே மற்றைய விரண்டுகுலத்துக்கு மாதலாலும், அதனுல் சூரியகுலச்சிலையெழுபது சந்திரகுலச்சிலையெழுபது என வெடுக்கின் சொன்னதையே சொல்லவேண்டி வருதலின் கூறியது கூறல் கூற்ற மாதலோடும் பொருத்த மின்மையாலும் அக்கினி குல மொன்றற்கே கூறின் மற்றையதும் அடங்குமென்பார் கூறினுர் எனக்கொள்க. இக்ஷவாகு முதலியோர் சூரியகுலத்தவரும், புரூரவர் முதலியோர் சந்திரகுலத்தவரும் ஆவர்.

† இதை இதன் ரு-வது கவியினுங்காண்க.

அறுசீர்கழிநெடிலா சிரியவிருத்தம்.

முந்துநாள் வீர சம்பு முனிசெய்மா மகத்திற் போந்த
சந்ததி யார்சீ ரோது கெனத்தகு முதியோர் கேட்ப
இந்தணி சடிலத் தெம்மா னிணைக்கழல் பராஅ யிசைத்தான்
செந்தமிழ்க் கம்பன் செம்பொற் சிலையெழு பதுவா மிந்நூல். (2)

(இ - ள்.) (கருணாகரச் சோழன் கம்பரைப்பார்த்து.) முந்துநாள் - ஆதியில, வீரசம்பு முனிசெய் மாமகத்தில் போந்த சந்ததியார் சீர் - விஜயத்தைக்கொண்ட சம்பு முனிவரால் செய்யப்பட்ட மகத்தாகிய யாகத்தில் வந்த (உருத்திர வன்னிய மகாராஜன் முதலியோர்) சந்ததியர்களாகிய (வன்னியர்களது) சிறப்பைச் சொல்லும் நீர்செய்த பிரபந்தத்தை, ஓதுகென - சொல்லுக என்று சொல்ல, தகு முதியோர்கேட்ப (அப்பொழுது அவனது சபையில் தங்கிய) தகுதி யுடைய பெரியோர்கள் கேட்டு மகிழும்படியாக, செந்தமிழ்க் கம்பன் - செவ்விய தமிழை ஆய்ந்த கம்பரானவர், இந்து அணி சடிலத்து - சந்திரனைத் தரித்த சடாபாரத்தினை யுடைய, எம்மான் இணைக்கழல்பராஅய் - எமது பிரானாகிய பரமசிவனது இரண்டு பாதங்களையுந் தொழுது, செம்பொன் சிலை எழுபது ஆம் இந்நூலில் இசைத்தான் - மிக்க அழகினையுடைய மாற்றுயர்ந்த பொன்னாற்செய்த சிலையெழுப தென்னும்பெயர்கொண்ட இப்பிரபந்தத்தைச் சொன்னார் (எ - று.)

கருத்து. கம்பரானவர் கருணாகரன் சபையில் பெரியோர் கேட்டு மகிழும்படி சிலை யெழுபதென்னும் இப்பிரபந்தத்தைச் சொன்னா ரென்பதாம்.

கம்பரென்பதனால் ஆக்கியோன் பெயரும், முந்துநாள் வீரசம்பு முனிசெய்மாமகத்திற் போந்த சந்ததியாரென்றதனால் முன்னூலின் வழியும், செந்தமிழென்றதனால் அது வழங்கு நிலமாகிய வடவேங்கடந் தென்குமரி மேல்கீழ் கடல் எல்லையும், சிலையெழுபதென்றதனால் நூற்பெயரும், சீர் என்றதனால் அந்நூற்குரிய வருணத்தவர்களது சிறப்பைத் தொகுத்துக் கூறுதல் என்னும் யாப்பும், அதனை

விளக்கிக்காட்டுதல் முதலிய பொருளும், அப்படிக் காட்டியவற்றை விளங்க அறிந்துகொள்ளுதல் பயனும், தகுமுதியோர் கேட்பவென்றதனால் கேட்போரும், ஆகிய எட்டினையும் வெளிப்படையினும், கருணாகரச்சோழன் ஆண்டநாள் காலமும், அவன் முன்னிலை அவையும், பரிசு பெறுதல் காரணமும் ஆகிய இம்மூன்றையும் குறிப்பினும் எச்சமாக்கிக் கூறினர் எனவுணர்க.

கச்சித்தலத்தின் சிறப்பு

கச்சித்தலத்தின் சிறப்பென்பது ;—காஞ்சி நகரத்தினது பெருமை. அது இந்நூலரங்கேற்றிய நகரமாகையால் இனி பின்னரும் எடுத்தாளும்பொருட்டு முன் விகடசக்ர விநாயகனை வணங்கிக்கொண்டதுபோல இங்கே காலம், களன், காரணம் ஆகிய மூன்றையுங் குறிக்க வேண்டி ஆக்கியோன் பெயருக்கும் நூற் பெயருக்கும் பின் வைத்துக் கூறினர்.

வேறு

மெச்சுந் தரங்கக் கடலுலகின் மிளிருந் தலங்கண் மிகவெனினு
மிச்சித் தவர்தங் குறைவெயின்முன் னிமம்போற் கடிதற் கியலாவே
பச்சை வண்ணத் திருமாலும் பவள வண்ணச் சோதியும்வாழ்
கச்சித் தலத்தைப் புரையுமெனக் கழறத் தலங்கள் காணேமால். (3)

(இ-ள்.) தரங்கக் கடலுலகில் - அலைகள் பொருந்திய சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தில், மிளிரும் தலங்கள் மிகஎனினும் - விளங்கும் க்ஷேத்திரங்கள் பல என்று சொல்லினும், இச்சித்தவர் தங்குறை - இச்சித்தவர்கள் தங்கள் குறைகளை, வெயில் முன் இமம்போல் கடிதற்கு இயலா-சூரியனானவன் தன் முன் உண்டாகும் பனியை நீக்குமாறுபோல விலக்குதற்கு முடியாது (ஆதலால்) பச்சை வண்ணத் திருமாலும் - மரகதவண்ணனாகிய விஷ்ணுவும், பவளவண்ணச் சோதியும் - பவளவண்ணனாகிய சிவபெருமானும், வாழ்-வாழும், மெச்சும் கச்சித்தலத்தைப் புரையுமெனக் கழற - யாவருந் துதிக்கும் (இச்சித்தவர்கள் தங்கள் குறைகளைச் சூரியனானவன் தன் முன்னுண்

டாகும் பனியை நீக்குமாறுபோல் விலக்குவதற்கியைந்த) இக் கச்சித்தலத்தை யொக்குமென்று சொல்ல, தலங்கள் காணேம்.—க்ஷேத்திரங்கள் அறியேம். (எ-று) ஆல், ஏ - அசைகள்.

கருத்து. இவ்வுலகத்தில் காஞ்சி க்ஷேத்திரம் ஒன்றுமே தன்னை விரும்பியவர்களுக்கு எல்லா வின்பத்தையுங் கொடுக்க வல்லதென்பதாம்.

இதில் சிவன் விஷ்ணு இருவருக்கும் காஞ்சிபுரியுரிமையுடைமையாதலை நூலின் ருo-வது கவியிற்காண்க.

கோத்திரச் சிறப்பு.

கோத்திரச் சிறப்பென்பது வம்சத்தின் மூலபுருஷர் பெருமை. அது, அம்மூலபுருஷரின் சந்ததியார் சிறப்பே இந்நூலாதலின் இங்கே இந்நூலரங்கேற்றிய நகரமாகிய கச்சித் தலத்தின் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

சாத்திர மறைகள் சொற்ற தனிநியமம் வாழா தோர்
சூத்திரந் தவறில் வன்னி தோன்றுமெய்ப் புகழ்காப் பாளர்
மாத்திரை யளவு ஞான மறைப்பின்மா தவங்கூர் சம்பு
கோத்திர வரசர்க் கொப்பக் கூறுவ தெவரை மாதோ. (4)

(இ - ள்.) தனிமறை சாத்திரங்கள் சொற்ற - ஒப்பற்ற வேத சாத்திரங்கள் சொன்ன, தவறில் சூத்திரம் நியமம் வழாதோர் - தவறில்லாச் சூத்திர நியம (வழிகளில்) வழுவாதவர்களும், வன்னிதோன்றும் மெய்ப்புகழ் காப்பாளர் - அக்கினியிற்றோன்றும் உண்மையான புகழைக் காக்கின்றவர்களும், மாத்திரை அளவும் ஞானம் மறைப்பு இல் மாதவங்கூர் சம்புகோத்திர அரசர்க்கு - இமைப்பொழுதேனும் ஞானபோதம் நீங்காத மகத்தாகிய தவமிகுந்த சம்பு கோத்திரவர்களுமாகிய (வன்னியரென்னும்) அரசர்களுக்கு, எவரை ஒப்பு கூறுவது-யாரைச் சமமாகச் சொல்வது. எ-று. மாதோ அசை.

கருத்து. வன்னியர்கள் சம்புகோத்திரவர்களென்பதாம்.

உற்பவச் சிறப்பு.

உற்பவச் சிறப்பென்பது முதல் முதல் வம்சமுண்டான பெருமை அது இவ்வம்ச மூலபுருஷனுண்டாவதற்கு முனபே யிருத்தலின் இங்கே கோத்திரச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

கோச்சகம்.

திங்கண்மும் மழைபிலிற்றச் செழித்துயிர்க ணனிமல்க
அங்கமோ ராறுமறை யந்தணரா குதியோங்கத்
துங்கமனு நெறிதழைப்பத் துகளறுவன் னியினின்றும்
பங்கயனு முதலிவரைப் படைத்துலகு படைத்தானல். (5)

(இ-ள்) பங்கயனும் - (முற்கூறிய சம்பு விருடிக்கு முன்பாகவே) பிரமதேவரும், திங்கள் மும்மழை பிலிற்ற - மாத மும்மாரி பொழியவும், உயிர்கள் செழித்து நனி மல்க-உயிர்கள் செழிப்பையடைந்து மிகவும் விளங்கவும், அந்தணர் ஓர் ஆறு அங்கமறை ஆகுதி ஓங்க-பிராமணர்களது ஆறு அங்கத்தினையுடைய வேதாகுதி வளரவும், துங்க மனு நெறி தழைப்ப - உயர்வாகிய மனுமுறை பரவும்படியாகவும், துகள் அறு வன்னியில் நின்றும் - குற்றமில்லாத அக்கினியினின்றும், முதல் இவரைப் படைத்து-படைப்பு ஆதியில் இவ்வன்னியர்களை உண்டாக்கி, உலகு படைத்தான் - (பிறகு மற்றைய மனிதர் முதலிய) உயிர்களையும் உண்டாக்கினர். (எ-று), ஆல் - அசை.

கருத்து. பிரமாவானவர் சம்புவிருடிக்கு முன்பாகவே மாதமும்மாரி பொழியவும் அதனல் உயிர்கள் செழித்துப் பல்கவும், வேதாகுதிகள் வளரவும், மனுநெறி பரவவும், அக்கினியினின்றும் க்ஷத்திரியராகிய இவ்வன்னியரை உண்டாக்கிய பிறகு மற்றைய மனிதர் முதலிய உயிர்களையும் உண்டாக்கினர் என்பதாம்

இதில் முதலில் அரசன் ஏற்பட்டு முறை நியமித்து நடத்தப் பிறகு குடிகள் அதன்வழி நடக்கிறதாகையால் அதைக் கொண்டு "பங்கயனு முதலிவரைப் படைத்துலகு

படைத்தான்" என்ருர். இதைக் குமரகுருபரசுவாமிகள் அருளிய நீதிநெறி விளக்கம்.

> "இகழி னிகழ்ந்தாங் கிறைமக னென்று
> புகழினு மொக்கப் புகழ்ப—இகன்மன்னன்
> சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யும்
> நீர்வழிப் பட்ட புணை"

என்னும் சச-வது பாட்டிற்காண்க. அன்றியும் மனுஸ்மிருதி எ-வது அத்தியாயம் அரசன் சிறப்பு; அரசன் சிறுவனுயிருந்தபோதிலும் அவனை மனிதனென்று அவமானஞ் செய்யக்கூடாது; ஏனெனில் மேலான தேவர்களின் கூட்டமே அந்த அரசன் உறவாயிருக்கிறதல்லவா? என்னும் அ-வது சுலோகத்தின்கீழ் அக்கினியானது அஜாக்கிரதையாய்த் தன்கிட்ட வந்தவனை மாத்திரந் தகிக்கும்; அரசனுகிற அக்கினி கோபித்துக்கொண்டால் தனம் தான்யம் புத்ர மித்ர களத்ராதிகளோடும் அழித்துப்போடும் என்னும் கூ-வது சுலோகத்தானும், அவ்வரசன் காரியா காரியங்களையும் தன் சக்தியையும் தேசகாலங்களையும் நன்ருக யோசித்துத் தரும சித்தியின் பொருட்டு அநேக ரூபத்தை எடுத்துக் கொள்ளுகிருன். அதாவது தனக்குப் பலவீன காலத்தில் அடங்கி இருப்பான் பலமுள்ள போது போர்க்கு வருவான் என்னும் க0-வது சுலோகத்தாலும்; எந்த அரசன் தயையினுல் பொருளும் சத்ரு ஜெயமும் உண்டாகிறதோ, அவன் தேஜோரூபனல்லவா? ஆதலால் பொருளை விரும்பினவனும் சத்துரு ஜெயத்தை விரும்பினவனும் ஜீவித்திருப்பதை விரும்பினவனும் அவனை எதிர்க்கக்கூடாது என்னும் கக-வது சுலோகத்தானும்; அவ்வரசனேடு எவன் புத்தியில்லாமையால் துவேஷித்துக் கொள்ளுகிருனே அவன் தானுகவே அழிந்து போகிருன், அரசனும் அவன் அழிகிறதைக் குறித்து யோசிக்கிருன் என்னும் கஉ-வது சுலோகத்தானும்; ஆதலால் அவ்வரசன் எதை அனுஷ்டிக்கும்படியாயும் நீக்கும்படியாயும் ஏற்பாடு செய்

கிறுனே அதை ஒருவரும் தடுக்கக்கூடாது" என்னும் கரு-வது சுலோகத்தானும் அறிக.

ஆறங்கமாவன, மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபசிதி, நிருத்தம், சோதிடம் என்பன.

குலச்சிறப்பு.

குலச்சிறப்பென்பது :—வம்சத்தின் பெருமை. அது வம்சம் தோன்றியபின் அமைதலின் இங்கே இரண்டு கவிகளால் உற்பவச் சிறப்புக்குப் பின் வைத்துக் கூறினர்.

விதிகுலத்தோர் சிறப்புறச்செய் வேள்விக்குச் சிறந்தவன்னி
உதிகுலத்தோ ராதலினு லுயர்குலத்தோ ராமிவர்க்குத்
துதிகுலத்தோ ரோவ்வாரேற் சொலும்வணிக குலத்தோரும்
நதிகுலத்தோர் களுமெங்ங னுட்டினிலொப் பாவாரே. (6)

(இ-ள்.) நாட்டினில் - உலகில், சொல்லும் விதிகுலத்தோர் - யாவரும் புகழும் பிராமணர்கள், சிறப்புறச்செய் வேள்விக்குச் சிறந்த-அழகு பொருந்தச் செய்யும் யாகத்திற்குச் சிறந்திருக்கின்ற, வன்னி உதிகுலத்தோர் ஆதலின் - அக்கினியே பிறந்த குலத்தவராகையால், உயர் குலத்தோராம்-உயர்வாகிய ஜாதியர்களாகும்;—இவர்க்கு அத்துதி குலத்தோர் ஒவ்வாரேல்-இவ்வன்னியர்களுக்கு, (இவரில் உயர்ந்திருக்கின்ற) அப்பிராமணர்களும் ஐசுவரியத்தினுலன்றி ஜாதியினுலும் ஒப்பாகார்களானுல், வணிக குலத்தோரும் - (இவரிற்றுழ்ந்திருக்கின்ற) வணிக ஜாதியாரும், நதிகுலத்தோர்களும் - வேளாள ஜாதியாரும்,— எங்ஙன் ஒப்பாவார்-எவ்விதம் ஒப்பாகுவர்கள் (எ-று.) ஆல் - ஏ - அசைகள்.

கருத்து. வன்னியர்கள் காரணத்தால் இவரில் உயர்ந்த பிராமணர்களினும் சிறந்தவர்களாகிறுர்கள் என்பதாம்.

இதில் பின் வருணமுறை பிறழ்ந்து வருமிடங்களோறும் இங்ஙனம் அமைத்துக்கொள்ளல்வேண்டும் என்பார், முதலில் பிராமணர்களையும், இரண்டாவது க்ஷத்திரியர்

என்னும் வன்னியர்களையும், மூன்ருவது வைசியர் என்னும் செட்டியார்களையும், நான்காவது வேளாளர்களையும் வருணமுறை பிறழாது வைத்தார் என்க.

இதுவுமது.

மறைக்குலத்தி லுதித்தாலென் மறையுணர்ந்தா லென்வணிகர்
நிறைக்குலந்தி லுதித்தாலென் னிதிபடைத்தா லென்னுன்காம்
முறைகுலத்தி லுதித்தாலென் முயற்சிசெய்தா லென்வன்னி
இறைக்குலத்தில் உதித்தவரே யிகபரனென் றியம்புவரே. (7)

(இ-ள்.) மறைக்குலத்தில் உதித்தால்என்-பிராமண ஜாதியிற் பிறந்தால் என்ன? மறை உணர்ந்தால்என் - வேதங்களைத் தெரிந்தால் என்ன? நிறைவணிகர் குலத்தில் உதித்தால்என்-நிறைக்குரிய செட்டி ஜாதியிற் பிறந்ததால் என்ன? நிதிபடைத்தால் என்-மிக்க தன சம்பத்தைப் படைத்ததால் என்ன? முறை நான்கு ஆம்குலத்தில் உதித்தால்என் - முறையே நான்காவது ஜாதியாராகிய வேளாள ஜாதியிற் பிறந்ததால் என்ன? முயற்சி செய்தால் என் - (உழவு தொழில் முதலிய பல) முயற்சிகளைச் செய்ததா லென்ன?—[இம்மூன்று ஜாதியிற் பிறந்து அவ்வச்சாதி நடைகளாலடையும் பிரயோசனங்களில் ஒரு விசேடமும் இல்லை என்றபடி] வன்னி இறைக் குலத்தில் உதித்தவரே - வன்னிய ரென்று சொல்லுகிற க்ஷத்திரிய ஜாதியிற் பிறந்தவர்களோ! (அப்படி அல்லர்) இகபரன் என்று-இவ்வுலகத்திற்குக் கடவுள் என்று, இயம்புவர் - யாவரும சொல்லுகின்றவர்கள் ஆகிருர்கள் (எ-று.) ஏ-அசை இகபரன் - பால்வழுவமைதி.

கருத்து. வன்னியர்கள் இவ்வுலகத்திற்குக் கடவுள் என்று யாவரும் சொல்லுகின்றவராகிருர்கள் என்பதாம்.

இதில் பல நூற்களிலும் பிராமணர்களுக்காறும், வைசியர்களுக்கு ஆறும், சூத்திரர்களுக்கு ஆறும் தொழில்கள் கூறியிருக்க, இங்கே ஒவ்வொன்றும்; வன்னியரென்னும் க்ஷத்திரியர்களுக்கு உரிய தொழில்கள் ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், வென்றி என்ற ஆறனுள் ஒன்

றையுங் குறிக்காது "வன்னி இறைக்குலத்தி லுதித்தவரே இகபரனென் றியம்புவரே" என்று கூறிய தெங்ஙனமெனின்; பிராமணர்களுக்கு ஓதலும், செட்டியார்களுக்குப் பொருளீட்டலும், வேளாளர்களுக்கு உழுதலும் சிறத்தலால் ஒவ்வொன்றுகூறி அரசர்களுக்கு அவர்களது அறுதொழில்களுள் "புரை தீரப்பெரும் பார் புரத்தல்" என்னும் செங்கோன் முறைமையே சிறத்தலின் அதைப்பின் அரசில் செங்கோற்சிறப்பு முதலியவைகளால் தெரிவிப்பாமென்னுங் குறிப்பாகவே கூறினரென்க. அரசருக்குரிய அறுதொழில் தி-கஉ-வ-தி 'அரசு றறுதொழி லோதல் வேட்டல்-புரைதீரப் பெரும்பார் புரத்த லீதல் - கரையறு படைக்கலங் கற்றல் விசயம்" என்னும் எங-வது சூத்திரத்தானும், மற்றைய மூவருணத்தவர்க்கும் அவ்வாறு தொழிலெனபதை அரசின் கங-வது கவியினுரையினும், பொதுவில் நால்வருக்கும் ஒவ்வொன்றே சிறந்தவென்பதை அதிவீர ராமபாண்டியன் சொன்ன நறுந்தொகை என்னும் வெற்றி வேற்கை "வேதியர்க் கழகு வேதமு, மொழுக்கமும் என்னும்" ச-வது சூத்திரத்தானும், "மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை" என்னும் ரு-வது சூத்திரத்தானும், "வைசியர்க் கழகு வளர்பொருளீட்டல்" என்னும் சா-வது சூத்திரத்தானும், "உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்" என்னும் எ-வது சூத்திரத்தானும் உணர்க. பிராமணர்களுக்கு அடுத்து க்ஷத்திரியர்களைக் கூறவேண்டியிருக்க ஈற்றிற் கூறிய தென்னையோவெனின் இவர்களையன்றி மற்றையர் யாவரும் இவர்கள் ஆக்கினையிற் றங்கியவென்பார் ஈற்றில் வைத்துக் கூறினரென்க. இகபரன் - அதாவது உலகத்திற்குக் கடவுள் என்று கூறிய தென்னையோ வெனின் இவ்வருணத்திற்குரிய செங்கோன் முறைமை அரசினும், அரசு, அரண், படை முதலியவைகளினும் சிறத்தலின் அதை இங்கே படை, அரண், அரசு முதலாக வகுத்தவர் படையை இருபத்தெட்டுக் கவிகளானும் அரணை இரண்டு கவிகளானும் கூறி, அரசு முப்பத்தெட்டுக் கவிகளால், சிங்காதனம், முடிதரித்தல், புயகேயூர கிரீடம், குடை, செங்கோல், அறத்தினெறி, ஆக்கி

லைச் சக்கிரம், செல்வாக்கு, மாசகற்றல், பெருந்தன்மை, இதயவண்மை, இராச சமுகம், பதியிருத்தல், மன்னர் சூழ்தல், மொழி தவருமை, கொடைவளம், வள்ளற் றன்மை, அடுத்தவர்க்குத் தாழ்வின்றெனல், உமையருள் பெற்றோரெனல், அஷ்ட ஐசுவரியம் தசாங்கம் என்பன முதலாக, முப்பத்து நான்கு சிறப்புகளோடும் அதன் இருபத்தொன்பதாவது கவியில் "அரன் மாலிந்திரன் குகன் வேளென வன்னி வேந்தர் சிறந்திருப்பதை இம் மேதினியே விளம்பிடுமால்" என்று கூறியிருக்கின்றாரல் லவா? பூம்பாவைபோல்வாய்! நீயே நன்குணர்ந்து கூறு வாயாக. இவை முதலாய மேம்பா டுடையவர்களைக் கட வுளென்பதில் ஐயமென்னை யுளது. அன்றியும் அரசனுக்கு இறையெனப் பெயர் வந்தது கடவுட் டன்மையினு லாத லின் அக்குலத்து வந்தவர்களும் கடவுளென்பார் "வன்னி யிறைக்குலத்தி லுதித்தவரே" என்றுங் கூறினரென்க. அரசனைத் தெய்வமெனப் பிறர்கூறுவரோ யெனின் கூறினு ரென்க. அதைக் கற்புடை மகளிற்குக் கணவனே தெய்வ மாதல் போலும் புதல்வற்குப் பெற்றோரே தெய்வமாதல் போலும் முனிவர்களுக்குக் குருவே தெய்வமாதல் போலும் யாவருக்கும் அரசனே தெய்வமென்னுங் கருத் தைக் கொண்ட நீதிநெறி விளக்கம்.

"குலமகட்குத் தெய்வங்கொழுநனே மன்ற-புதல் வர்க்குத் தந்தையுந் தாயு-மறவோர்க்-கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ-மிலைமுகப் பைம்பூ ணிறை" என் னும் உஎ-வது கவியாலுணர்க. அன்றியும் மகாபாரதம் சாந்திபர்வம் வீட்டு மனைக்கண்ட சருக்கம் "அரசனே யுலகினுக்கு யிராசனே தரும-மரசனே பெருங் கடவுளு மவனில்லை யென்னில்-விரைசெய் மாலையாய் மின்னனூர் கற்பு மெய்ப் பொருளு-முரைசெய் முன்னரே தீர்தரு மென் கோலோ வுளவாம்" என்னும் ருக-வது கவியிற்காண்க. நாயனுரும் "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறையென்று வைக்கப்படும்" என்ருர் என்க. இக்கடவு ளென்னுந் தன்மையே வன்னியர்களுக்குப் பள்ளிகளை

னும் பேர்வழங்கி வருகின்றதென்க, என்னே! * பள்ளி யென்பது - கடவுளாலயத்தின் பெயர். அது, அதில் தங் குதல் போலுமாகிய கடவுளுக்காகி, அக்கடவுட் டன் மையைக் கொண்ட அரசனுக்கும், அவன் வம்சத்தவர் களுக்கும் ஆகுபெயராகி வழங்கி வருகின்றதென்க.

படைத்துணைத்தலைவர் குலச்சிறப்பு.

படைத்துணைத் தலைவர் குலச்சிறப்பென்பது படைத் துணைக்குத் தலைமையாயவர் வம்சத்தின் பெருமை அது குலபுருடர்கள் வீரப்பிரதாப முதலிய செயல்களால் வலி யடைந்து துணை சேர்த்துக் கொள்ளுதலின் இங்கே சிறப் புக்குப் பின்வைத்துக் கூறினர்.

விடையுடையார் வரமுடையார் வேந்தர்கோ வெனலுடையார்
நடையுடையார் மிடியுடைய நாவலர்மாட் டருள்கொடையார்
குடையுடையார் மலையமன்னர் குன்றவர்பல் லவர்மும்முப்
படையுடையார் வனியர்பிற ரென்னுடையார் பகரீரே. (8)

(இ - ள்.) வன்னியர் - வன்னியர்களானவர்கள், விடையுடையார் - (நடுவு நிலைமையில் வழுவாது) உத்தரஞ் சொல்பவர்களும், வரமுடையார் - தெய்வானுக்ரகங்களை யுடையவர்களும், வேந்தர் கோ எனல் உடையார் - இரா ஜாதி இராஜர் என்று (யாவரும் சொல்லுந்) தரமுடைய வர்களும், நடையுடையார் (மேலான) ஒழுக்கத்தினை யுடையார்களும், மிடி உடைய நாவலர்மாட்டு அருள் கொடையார் - வறுமையையுடைய புலவர்களிடத்து கொடுக்கும் கொடையினை யுடையவர்களும், குடை யுடை யார் - (சந்திரவட்டக்) குடையினையுடையவர்களும், மலைய மன்னர் குன்றவர் பல்லவர் மும்முப்படை உடையார் - மலைய மன்னர் குன்றவர் பல்லவர் என(மூவகுப்போராய்) மூன்றுமூன்று படையினையுடையவர்களும் (ஆகிறூர்கள்)

* இந்தப் பள்ளிகள் என்னும் மொழியானது பாலா அதாவது காப்பவன் என்னும் மொழியினின்று மருவினதாகவும், சிலர் பல்லவர் என்னும் மொழியினின்று மருவினதாகவும் ஊகிக்கி றூர்கள்.

பிறர் என் உடையார் - மற்றையோர் (இவ்வங்கங்களில்) எதை உடையவர்கள், பகரீர் - சொல்லுவீர்களாக (எ-று.) ஏ - அசை.

கருத்து: வன்னியர்கள் நடுவுநிலைமை யுடையவர்களும், தெய்வானுக்கிரக முடையவர்களும், ராஜாதி இராஜ ரென்று யாரும் சொல்லுந் தரமுடையவர்களும், ஒழுக்கத்தினை யுடையவர்களும், வித்வான்களுக்குக் கொடுக்கும் கொடையினை யுடையவர்களும், முத்துக்குடையினை யுடையவர்களும், மலையமன்னர் குன்றவர் பல்லவர் என மூவகுப்போராய் மூன்று மூன்று படையினை யுடையவர்களும் ஆகிறார்கள் என்பதாம்.

* மலைய மன்னரெனவே. பாண்டிய குலத்தவரையும், குன்றவரெனவே - (மலை நாடராகிய) சேரர் குலத்தவரையும், பல்லவ ரெனவே-சோழர் குலத்தவரையும் மும்முப் படையெனவே-மூலம், துணை, கூலிஎன ஒவ்வொன்றுக்கும் மும்மூன்றாகவும் குறிப்பிட்டார்.

ஒன்பது படைத் துணைவர்கள் - நத்தமன், சுருதிமன், மலையமன் என மூன்று; குறவர், வேடர் ஏனாதி என மூன்று; மீனவர், சேர்வையார், கூடைகட்டி என மூன்று ஆக ஒன்பது. இதைக் காஞ்சீபுர சாசனத்துட் காண்க. இப்படைத் துணைவர்கள் சாலிவாகன சஹாப்தம் எ௱கூ-க்கு முன் சிலகால மிருந்ததாகத் தெரியவருகிற தென்க.

இதுவரையினும் நூலுக்குப் பாயிரங்கூறி

இனி நூல் கூறுவராயிற் றென்க.

பாயிரம் முற்றிற்று.

---

* மலையென்பது பொதிகைமலை

நூல்.

நூலென்பது :—நூல்போலுந் தன்மையுடையது. அது இவ்வருணத்திற் குரிய அரசியலை அமைத்தலின் இங்கே பாயிரத்திற்குப் பின்வைத்துப் படை, அரண், அரசு, வாழ்த்து என நான்கும் உறுப்பாக, எழுபத்தொரு கவிகளால் கூறினர். நூல் உவமையாகு பெயர்.

படை.

படையென்பது: தானை. அது அரசியலுக்கு முதன் மைய தாதலின் இங்கே நூலுக்கு முதலில் வைத்து வில், வாள், வேல், யானை, குதிரை, தேர் என ஆறுவகையாக, உஅ-கவிகளால் கூறினர். நாயனரும் "உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன் வெறுக்கையு ளெல்லாந் தலை" என்ருரென்க. அறுவகைத் தானையை திகஉ-வ·தி. "வேற்ருனை வாட்டானை விற்ருனை மேலோர்-தேர்த்தானை பரித்தானை களிற்றுத் தானையென - வாற்றல் சான்ற வறு வகைத்தானை" என்னும், அஉ. வ-சூ-க.

வில்.

வில்லென்பது அறுவகைத்தானையு ளொன்று. அப் படையுறுப்பாறனுள் ஒன்ருகிச் சிறத்தலோடும் அதன் பெயர்களுள் ஒன்றினலேயே இந்நூற்குப் பெயர் அமைத்த லின், இங்கே அந்தைவலி யுறுத்தற்கு ஈற்றினுங் கூறுவ தோடு படைக்கு முதலிலேவைத்து விஜயதசமி நாட் கோடல், வில், விற்பிடி, வின்மணி, நாணி, வில்லேந்துதல், வில்வளைத்தல், நாணேற்றுதல், குணத்தொனி, அம்பருத் தூணி, பிரமாத்திரம், நாராயணுத்திரம், பாசுபதாத்திரம் அபிமந்திரித்தல், நாணிறங்குதல் எனப் பதினைந்து சிறப் பாக இருபத்திரண்டு கவிகளால் கூறினர்.

இவைகளை ஸ்மிருதி, புராண, இதிகாசாதிகளிற் கண்டுணர்க.

விஜய தசமி நாட்கோடற் சிறப்பு.

விஜய தசமி நாட்கோடற் சிறப்பென்பது:—வருடந் தோறும் வரும் புரட்டாசிமாத சுக்கிலபட்ச தசமி திதி விரதங்கொள்ளுதலின் பெருமை. அது ஆயுத மெடுத்தல் அல்லது அம்புபோடுந் தினமாதலின், இங்கே பாயிரத்துட் கூறிய ஆயுதங்களை யுடையவராகிய படைத்துணைத் தலைவர் சிறப்பைத்தழுவி வில்வகுப்பிற்கு முதலில் வைத்தார்.

கோச்சகம்.

சொன்மங்கலம் பொருந்துந் தொல்லுலகிற் பல்லுயிரும்
நன்மங்கலம் பொருந்து நான்மறையு நனிவிளங்கும்
வன்மங்கலம் பொருந்தி வளர்வனிய குலவரசர்
வின்மங்கலம் பொருந்தும் விறற்றசமி நாட்கொளினே. (1)

(இ - ள்.) தொல் உலகில் - பழமையான உலகத்தில், வன்மம் கலகம் பொருந்தி வளர் வனிய குலஅரசர் - போர்க்கவசத்தை (தங்களுக்கு அலங்காரமாகிய) ஆபரணமாப் பொருந்தி விளங்காநின்ற வன்னியகுல அரசர்களானவர்கள், வில் மங்கலம் பொருந்தும் விறல் தசமி நாள் கொளின்-வில்லுக்குச் சுபகரத்தைப் பொருந்தும் விஜய தசமி நாள் விரதத்தைக் கொண்டால், சொல் மங்கலம் பொருந்தும் - யாவருடைய சொற்களும் நீதி யுடையனவாக இருக்கும்; பல் உயிரும் நல்மங்கலம் பொருந்தும் - பலவாகிய உயிர்களும் நல்லசெழிப்பை யடையும், நான்மறையும் நனி விளங்கும்-நான்கு வேதங்களும் மிக்க பிரகாசத்தை யடையும். எ-று.

கருத்து வன்னியர்கள் விஜயதசமி நாட்கோடலால் சொற்கள் நீதியும், உயிர்கள செழிப்பும், வேதங்கள் பிரகாசமும் அடையும் என்பதாம்.

விற்சிறப்பு.

விற்சிறப்பென்பது:—வில்லின் பெருமை. அது தகுதி யானநாளில் கைக்கொண்டு பழகுதலின், இங்கே விஜய

தசமி நாட்கோடற் சிறப்புக்குப் பின்வைத்து நான்கு கவி களினல் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கலையாய் வன்னி குலோத்துங்கர் கரத்திற் கவின்கொண் டமைந்தவென்றிச், சிலையா லன்றோ வேழ்புயலுஞ் சேணிற் பொலி யுந் திவாகரனும், அலையார் கடலுங் கடையனனு மடன்மா ருதமு மடங்கியொரு, நிலையாய் நின்ற மனுநீதி நெறியு நின்ற தறியீரோ. ()

(இ-ள்.) குல உத்துங்க வன்னியர் - ஜாதியி லுயர்ந்த வன்னியர்களது, கரத்தில் கலையாய் கவின்கொண்டு அமைந்த-கையினிடத்துக் குல வித்தையாக அழகோடு பொருந்திய, வென்றிச் சிலையால்-வெற்றியைத் தரத்தக்க வில்லினல், ஏழ்புயலும் - சத்தமேகங்களும், திவாகரனும்- சூரியனும், சேணில் பொலியும் - ஆகாயத்தில் விளங்கு வனவாகும், அலை ஆர்கடலும்-அலைகள் நிறைந்த சமுத் திரமும், கடை அனலும் - ஊழித்தீயும், அடல் மாருத மும் - பிரசண்ட காற்றும், ஒருநிலையாய் அடங்கிநின்ற - (தத்தம் வரம்பு கடவாது) ஒரு நிலையைப் பற்றினதாகவே அடங்கி நின்றிருக்கின்றன, மனுநீதி நெறியும் நின்ற-மனு தரும வழியும் நின்றிருக்கின்றது, அறியீரோ-அறியீர் களா (எ-று.) அன்று-ஒ-ஒ-அசைகள்.

கருத்து:-வன்னியர்கள் கையில் அமைந்த வில்லினல் சத்த மேகங்களும் சூரியனும் ஆகாயத்திற் பொலிதலும் சமுத்திரமும் வடவனலமும் பிரசண்டக் காற்றும் தத்தம் வரம்பு கடவாது அடங்கி நிற்றலும், மனுமுறை நிலைத் திருக்கின்றதும் ஆம் என்பதாம்.

இதுவும் அது.

வேறு,

மலையினிற் பொலங்கொண் மேரு மலையன்றி மலைமற் றுண்டோ
கலையினி லுரைப்ப வெண்ணெண் கலையன்றிக் கலைமற் றுண்டோ
வலையினி லுகாந்த நீத்தத் தலையன்றி யலைமற் றுண்டோ
சிலையினிற் றிறங்கூர் வனியர் சிலையன்றிச் சிலைமற் றுண்டோ. (3)

(இ-ள்.) மலையினில் பொலன்கொள் மேருமலை அன்றி மற்றுமலை உண்டோ - மலையில் பொன்மயங் கொண்ட மகாமேருவைத் தவிர வேறு மலை இருக்கிறதா? கலையினில் எண் எண் கலையன்றிமற்று உரைப்ப கலையுண்டோ- கலைக்கியானத்தில் அறுபத்துநான்கு கலையைத்தவிர வேறு சொல்வதற்குக் கலை இருக்கிறதா? அலையினில் யுகாந்தநீத்தத்து அலைஅன்றி மற்று அலை உண்டோ-அலையில் பிரளய நீத்தத்தின் அலையைத்தவிர வேறு அலை இருக்கிறதா? (என்பதுபோல) சிலையினில் திறம் கூர்வன்னியர் சிலை அன்றி மற்றச் சிலை உண்டோ - வில்லில் வன்னியரது (அக்கினியிற்றோன்றிய) வில்லைத் தவிர வேறுவில் இருக்கிறதா? எ - று.

இதுவும் அது.

வேறு,

அமரரொரு புறமரிய முனிவரொரு புறம்விசயை யரிவையொரு புறமடலுறுஞ், சமனுமொரு புறம்விரவு கழுகுமொரு புறநெடிய தருமமொரு புறமுடைகொள்வாய், ஞமலியொரு புறமெரிக ணலகையொரு புறமிடர்செய் நரிகளொரு புறமகிழவெஞ், சமர்செய்திடு மணிமவுலி யணிவனிய குலவரசர் தமதுகர மருவுசிலையே. (4)

(இ-ள்.) மணி மவுலி அணி வனியகுல அரசர் தமது, இரத்தின கிரீடத்தைச் சூடி விளங்காநின்ற வன்னியரென்னும் அரசர்களது, கர மருவு சிலை - கையினிடத்துத் தங்கும் வில்லானது, அமரர் ஒருபுறம் - தேவர்கள் ஒரு பக்கமும், அரிய முனிவர் ஒரு புறம் - அரிய (தவத்தினையுடைய) இருடிகள் ஒரு பக்கமும், விஜயை அரிவை ஒரு புறம் - துர்க்கை ஒரு பக்கமும், அடல் அறும் சமனும் ஒருபுறம் - கொல்லுகின்ற இயமனும் ஒரு பக்கமும், விரவு கழுகும் ஒருபுறம் - காக்கை பருந்துகளுடன் கலந்த கழுகுகள் ஒரு பக்கமும், நெடிய தருமம் ஒரு புறம்-அழியாத தருமம் ஒருபக்கமும், முடை கொள்வாய் ஞமலி ஒருபுறம்-புலால் நாற்றத்தைக் கொள்ளும் வாயினையுடைய நாய்கள் ஒரு பக்கமும், எரிகண் அலகை ஒருபுறம்-அக்

கினிக் கண்களையுடைய பேய்கள் ஒரு பக்கமும், இடர் செய் நரிகள் ஒருபுறம் - துன்பத்தைச் செய்யும் நரிகள் ஒரு பக்கமும் (சூழும்படி நின்று) மகிழ-களிப்பை யடைய, வெம் சமர் செய்திடும் - கொடிய போரைச் செய்யும் (எ-று.)

கருத்து. வன்னியர்களது வில் தேவர்களும், முனிவர்களும், துர்க்கையும், இயமனும், பருந்துகாகங்களோடு கலந்த கழுகுகளும், தருமமும், நாய்களும், பேய்களும், மகிழும்படி கொடிய போரைச் செய்யும் என்பதாம்.

இதில் தேவர்கள் முனிவர்கள் - அசுரர் பயந்தீர்தலாலும், அவி கிடைத்தலாலும், இயமன் பாபாத்துமாக்களில்லாமையால் கவலையற் றிருத்தலாலும், துர்க்கை பலிகொள்ளுதலாலும், நாய் நரி காக்கை பருந்து கழுகுகள் ஆகாரங்கிடைத்தலாலும், பேய்கள்நிணக் கூழுண்ணுதலாலும், தருமம் நிலைகிடைத்தலாலும் மகிழ்வடைந்த வென்க.

இவைகளைக் கருணாகரச்சோழன்பேரிற் செய்த கலிங்கத்துப்பரணியிலும், இராமாயண பாரதாதி இதிகாச புராணங்களுள் யுத்த கட்டங்களினுங் காண்க.

இதுவும் அது

வேறு,

முட்டரை யறிஞ ராக்கு முனிவரைத் தவஞ்சீர்ப் பிக்கும்
சிட்டருக் கரசு நல்குஞ் சேர்ந்தவர்க் குரம்பா லிக்கும்
மட்டறு தெவ்வர் தம்மை வலிதப வச்சு றுத்தும்,
துட்டரைத் தொலைப்ப வன்னி தோன்றுபொற் சிலையொன் றம்மா.

(இ-ள்.) துட்டரைத்தொலைப்ப - துஷ்டர்களைத் தொலைக்கும் பொருட்டு, வன்னி தோன்றுபொற்சிலை ஒன்று - அக்கினியிற் றோன்றும் அழகிய வில் ஒன்றே, முட்டரை அறிஞர் ஆக்கும்-மூடர்களை விவேகிகளாக்கும், முனிவரைத் தவம் சீர்ப்பிக்கும் - முனிவர்களைத்தவத்தினால் சிறக்கச்செய்யும், சிட்டருக்கு அரசு நல்கும்-சிநேகர்களுக்கு அரசைக்கொடுக்கும், சேர்ந்தவர்க்கு உரம்பாலிக்

கும் - தன்னை யடைந்தவர்களுக்குப் பலத்தைக் கொடுக்கும், மட்டு அறு தெவ்வர் தம்மை வலிதப வச்சுறுத்தும்- உதமில்லாத பகைவர்களுக்கு வலி கெடும்படி அச்சத்தைக் கொடுக்கும் (எ-று.) அம்மா-அசை,

கருத்து. வன்னியர்கள் வில் மூடர்களுக்கு விவேகமும், முனிவர்களுக்குத் தவமும், சிநேகிதர்களுக்கு அரசும், தன்னைச் சேர்ந்தவர்களுக்குப் பலமும் உண்டாக்கும் என்பதாம்.

இதில் வன்னியர்களோடும் யாகத்திற்றோன்றிய வென்பார் "வன்னி தோன்று பொற்சிலை" என்றார். அழகிய சிலையொன்று கொள்ளலாமோ வெனின் கொள்ளினும் அமையுமென்க என்னை? அரிச்சந்திரபுராணம் விவாக காண்டம்.

"நற்றேரை விட்டிறங்கி நாயகியைத் தொழுதிறைஞ்சி நண்ணிராசன், முற்றேரை நோக்குதலு முடிவேந்தன் கருணைவிழிமுனை கண்டாக்க, கற்றேருங் கற்பரியுங கற்சிலையுங் கற்கணையுங் கன்னிமுன்னே, பொற்றேரும் பொற்பரியும் பொற்சிலையும் பொற்கணையாய்ப் பொலிந்த வன்றே"

என்னும் கஉடு-வது செய்யுளில் "பொற்சிலையும்" என்றதனல் அறிக. பொன்னுதலால் மூங்கிலாகிய விற்போலும் குணங்கள் பொருந்து மோவெனின்! தெய்வத் தன்மையால் பொருந்துமென்க. என்னை? புகலி திருஞான சம்பந்த நாயனருக்குச் சிவபிரானுல் கொடுக்கப் பட்ட பொன்னுலாகிய தாளம் ஓசையுற்றதாக திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்துள திருஞானசம்பந்த நாயனுர் புராணத்தாலுணர்க.

விற்பிடிச்சிறப்பு

விற்பிடிச்சிறப்பென்பது:—வில்லைப்பிடித்தலின் பெருமை. அது வில்லின் வடிவுகண்டு உரிமையுற்றபிறகு பற்றுதலின். இங்கே விற்சிறப்புக்குப் பின் வைத்து இரண்டு கவிகளால் கூறினர்.

மிடிகரக்கப் புலவருக்கு மிகுபொருளீந் திடுவார்தம்
அடியிரக்கத் தொடுபணிவார்க் கரசுதருங் கொடையாளர்
படிபுரக்க வவதரித்த பண்ணுடர் கரத்தமைவிற்
பிடியுரத்தி னலன்றோ பெருஞால முரமுறலே. (6)

(இ-ள்.) புலவருக்கு மிடிகரக்க மிகுபொருள் ஈந்திடுவார் - வித்வான்களுக்குத் தரித்திரம் நீங்கும்படி மிக்க திரவியத்தைக் கொடுக்கின்றவர்களும், தம் அடிபணிவார்க்கு - தமது பாதத்தில் (வீழ்ந்து) வணங்குவோர்களுக்கு, இரக்கத்தொடும் அரசுதரும் கொடையாளர் - இரக்கத்தோடும் அரசு கொடுக்கும் கொடையினை யுடையவர்களும் (ஆகிய) - படிபுரக்க அவதரித்த பண்ணுடர் - பூவுலகையாளும்படி யவதரித்த தமிழ்நாடரென்னும் சேர சோழ பாண்டிய வன்னியர்களது, கரத்து அமை விற்பிடி உரத்தினல் அன்றோ - கையினிடம் அமைந்த விற்பிடியுரத்தினலல்லவா, பெருஞாலம் உரம் உறல் பெரிய உலகமானது நிலைபெற்றிருத்த (லாகின்றது).

கருத்து. வன்னியர்கள் விற்பிடித்தலால் உலகு நிலைபெற்றிருக்கின்றது என்பதாம்.

இதில் "மிடிகரக்கப்புலவருக்கு மிகுபொருளீந்திடுவார்" என்பதற்குச் சத்திமுற்றப்புலவர் பாண்டியனது மதுரைக்கு வந்தபொழுது மழையிடரினல் அவ்வழி சென்ற நாரையைப் பார்த்து,

"நாராய் நாராய் செங்கானாராய் - பழம்படுபனையின் கிழங்குபிளந்தன்ன - பவளக்கூர்வாய் செங்கானாராய் நீயு நின்மனைவியும் தென்றிசைக் குமரியாடி - வடதிசைக் கேகுவீராயினெம் - மூர்ச்சத்தி முற்றவாவியுட்டங்கி - நனை சுவர்க்கூரைகனை குரற்பல்லி-பாடுபார்த்திருக்குமெம் மனைவியைக்கண்டு - எங்கோன்மாறன் வழுதி கூடலில் - ஆடையின்றி வாடையின் மெலிந்து - கையது கொண்டு மெய்யது பொத்திக் காலதுகொண்டு மேலது தழீஇப் - பேழையுள்ளிருக்கும் பாம்பென வுயிர்க்கு - மேழை யாளனைக் கண்டனமெனுமே"

என்னும் பாடலைக் கேட்டு நகரிசோதனையாக வந்த பாண்டியன் அருள்புரிந்ததைக் காண்க.

அன்றியும், சேரமான் பெருமாள் பாணபத்திர னுக்கு "மதிமலி புரிசை மாடக் கூடற் - பதிமிசை நிலவு பானிற வரிச்சிற் - கன்னம் பயிற்பொழி லாலவாயின் மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம் - பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்-கொருமையினுரிமையி னுதவி யணிதிகழ் - குருமா மணிதிகழ் குலவிய குடைக் கீழ்ச் - செருமாவுகைக்குஞ் சேரலன் காண்க - பண்பால் யாழ்பயில் பாணபத்திரன் - றன்கோலென்பா லன்பனறன் பாற் - காண்பது கருதிப் போந்தனன் - மாண்பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே."

என மதுரை சோமசுந்தரக்கடவுள் எழுதிக்கொடுத் தனுப்பிய திருமுகத்தைக் கண்டு கொடுத்த சரித்திரத் தைப் பெரியபுராணம் திருவிளையாடல்களிற் காண்க. "தம் அடி இரக்கத்தோடும் பணிவார்க்கு அரசுதரும் கொடை யாளர்" என்பதற்கு இராமன் தம்மையடைந்தவர்களாகிய விபீஷணன், சுக்ரீவன் முதலியோர்களுக்குப பட்டாபி ஷேகஞ் செய்திருப்பதால் - அச்சரிதங்களை இராமாயணத் திற் காண்க, "படிபுரக்க அவதரித்த பண்ணுடர்" என்றத னால் அரசர்கள் உலகத்தைக் காக்கவேண்டியதற்கு ஏற் படுத்தப் பட்டார்கள் என்பதை - மனுஸ்மிருதி எ-வது அத்தியாயம் இராஜதருமம் "வேதத்திற் சொல்லிய உப நயன முதலான சமஸ்காரங்கள் செய்துகொண்டவனு யிருக்கிற க்ஷத்திரியனாலே இவ்வுலகம் விதிப்படி காப் பாற்றத் தக்கதென்று உ-வது சுலோகத்தானும், "உலகத் தில் அரசனில்லாமற் போனால் பலமில்லாதவர்கள் பயத்தினு லழிந்துபோவார்கள் ஆகையினால் இவ்வுலக மெல்லாம் அழியாமலிருக்கும் பொருட்டுச் சுவாமியான வர் அரசனை யுண்டு பண்ணினர்" என்னும் ங-வது சுலோ கத்தானும் உணர்க. பண்ணுடரென்றது தமிழ் நாடர். பண் இசை. இது இயல் இசை நாடகம் என்னும் தமிழின் பகுதி மூன்றனுளொன்று "கிளந்த வல்ல வேறுபிற

தோன்றினுங்-கிளந்தவற் றியலா னுணர்ந்தனர்கொளலே'' என்றதனல் ஆகுபெயராய்த் தமிழ் என்ருயது; அது வழங்கும் நிலத்தைப் பரிபாலிக்கின்றவர்க ளாகையால் தமிழுடரென்ருயது. தமிழுடரென நேரிற்கூருதசென்னை யோவெனின் நன்று கூறினய்! உலக முழுமையுந் தன் வயத்ததாதலோடு தமிழைப் பரிபாலிக்கின்றவரசர்களும், தமிழும், அது வழங்கும் நிலமும் மிக்க கீர்த்தியும் வாய்ந்த தென்னுங் கருத்தால் பண்ணுடரென்ரு ரென்க. இதற்கு-இவர்களுக்குத் தமிழ் வேந்தரென வந்திருப்பதே சான்று இதைப் பாயிரத்துட் காட்டிய திருவிளையாடற் கவியினும் இந்நூல் அரசின் உ௪-வது கவியினும், உலக முழுமையும் தன்வயத்ததாதலென்பதை ஷ ௩௪-வது கவியினுங் காண்க.

சா

இதுவுமது.

மைப்படியு முடலவுணர் வருக்கமாய் வுற்றதுவும்
இப்படியோ டனைத்துலகு மிணையினலம் பெற்றதுவும்
நெய்ப்படியுஞ் சுசியுதித்தோர் நீள்பகழி தொடுசிலையின்
கைப்பிடியாண் மையினல்லாற் கடைப்பிடியே தியம்பீரே. (7)

(இ-ள்.) மைப்படியும் உடல் அவுணர் வருக்கம் மாய் வுற்றதுவும் - கருமை படியும் உடலினையுடைய இராக்ஷதர் களது வமிசம் (அடியோடும்) நாசமடைந்ததுவும், இப்படி யோடு அனைத்து உலகும் இணை இல் நலம் பெற்றதுவும் - இந்த உலகத்துடன் மற்றைய உலகங்களும் இணை சொல் லக்கூடாத நலத்தை அடைந்ததுவும், (ஆகும்; ஆகையால் இவைகளெல்லாம்,) நெய்படியும் சுசி உதித்தோர் - நெய் யாகுதியேற்று விளங்கும் அக்கினியில் உதித்தவர்களாகிய வன்னியர்கள், நீள்பகழி தொடு சிலையின் - நீண்ட பாணங் களை விடுக்கும் வில்லை, கைப்படி ஆண்மையின் அல்லால் - கையால் பற்றும் ஆண்மையால் அல்லது, ஏது கடைப் பிடி - ஏதுவேறு உறுதி, இயம்பீர் - சொல்லுவீர்களாக. (எ - று.)

இயம்புவீர் இயம்பீரென இடை குறைந்து நின்றது. சிலையின் - என்றது உருபு மயக்கம்.

கருத்து. வன்னியர்கள் விற்பிடித்தலால் இராக்ஷத வருக்கங்களற்றதுவும், அதனால் இவ்வுலகத்தோடு மற்றைய உலகும் நல்ல நலத்தைப் பெற்றதுவும் ஆகும் என்பதாம்.

வின்மணிச்சிறப்பு என்பது:—வில்லிற்கட்டிய மணியின் பெருமை. அது வில்லைப்பிடித்த பிறகு அசைவுண்டு ஓசையுறுதலின், இங்கே விற்பிடிச் சிறப்புக்குப் பின் வைத்துக் கூறினார்.

வின் மணிச்சிறப்பு.

பணியிறைக்கங் கணனடியைப் பழிச்சுநர்வா தாபிமுடி
துணியிறைவர் பண்ணுடர் சோதிமணி முடிவனியர்
அணியிறையேந் தியவயிர மாஞ்சிலையி லடருநவ
மணியிரையக் களகளென வயிறிரையு மாற்றலர்க்கே. (8)

(இ-ள்.) பணி இறைக் கங்கணன் அடியைப் பழிச்சுநர்-ஆதிசேட கங்கணனாகிய சிவபெருமான் திருவடிகளைத் துதிக்கின்றவர்களும், வாதாபி முடிதுணி இறைவர் - வாதாபியின் சிரத்தைத் துணித்துப் பெருமையிற் சிறந்தவர்களும், பண்ணுடர் - தமிழுடரென்னும் சேர சோழ பாண்டியரும், சோதி மணி முடி வனியர் - பிரகாசம் பொருந்திய இரத்தின கிரீடந்தரிக்கின்றவர்களுமாகிய வன்னியர்களது, அணி இறை ஏந்திய - அழகிய கையினுற்றாங்கிய, வைரம் ஆம் சிலையில்-வைரமலைக்குச் சமதையாகிய வில்லில், அடரும் நவமணி இரைய - நெருங்கக் கட்டிய புதிய மணிகள் இரைய, மாற்றலர்க்கு வயிறு களகள என இரையும் - பகைவர்களுக்கு வயிறு களகள என்று இரையும், (எ-று.) ஏ-ஆசை. இறை-ஆகுபெயர்.

கருத்து. வன்னியர்கள் வின்மணி இரைய பகைவர் வயிறு களகளவென்று இரையும் என்பதாம்.

இதில் "பணிஇறைக் கங்கணன் அடியைப் பழிச்சுநர் என்றதனால், பெரிய புராணத்துட் கூறிய முடிமன்னர் அறுவர், குறுநிலமன்னர் ஐவர், திருவிளையாடலிற் கூறிய மதுரைப் பாண்டியர்கள், இவைகளை யல்லாது சிதம்பர மாண்ட இரணிய வன்மச்சோழன், அனபாயச் சோழன்,

திருவருணை வல்லாள மகாராஜன், முசுகுந்த சக்கரவர்த்தி முதலினோர் திருச்சரிதங்களானும் "வாதாபி முடிதுணி இறைவர்" என்றுதனால் உருத்திர வன்னிய மகாராஜன் சரித்திரத்தாலும் உணர்க.

நாணியின் சிறப்பென்பது வில்லிற்றொடுக்கும் கயிற்றின் பெருமை. அது மணியோசை யற்றபிறகு அமைதலின் இங்கே வின்மணிச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

நாணியின் சிறப்பு

கன்னாணும் புயமுடையார் கடனாணு மருளுடையார்
மன்னாண்மைப் பொலிவுடையார் மணிமுடிவன் னியர்தாங்கும்
வின்னாணின் வலியாலே வியனிலம்வாழ் வதுமடையார்
தந்நாண மிழந்துவலி தாழ்ந்துகரங் குவிப்பதுமே. (9)

(இ-ள்.) கல் நாணுபுயம் உடையார் - மலையும் நாணும் புயத்தினை யுடையவர்களும், கடல் நாணும் அருள் உடையார் - சமுத்திரமும் நாணும் அருளினை உடையவர்களும், மன் ஆண்மைப் பொலிவு உடையார் - நிலைபெற்ற ஆண்மைத் திறத்தினை யுடையவர்களுமாகிய, மணி முடி வன்னியர்-இரத்தின கிரீடந்தரித்த வன்னியர்கள், தாங்கு-தாங்கா நின்ற, வில் நாணின் வலியால் - வில் நாணின் பலத்தினால், வியன் நிலம் வாழ்வதும் - விசாலமாகிய இந்தப் பூமி நிலைத்திருப்பதும், அடையார் தம் நாணம் இழந்து வலிதாழ்ந்து கரம் குவிப்பதும் - பகைவர்கள் தமது நாணத்தை விடுத்துப் பலம் கெட்டுக் கையைக் குவித்து வணங்குவதும் ஆகும்.

கருத்து வன்னியர்கள் எடுக்கும் வில் நாணியினால் பூமி நிலைத்திருத்தலும், பகைவர்கள் வணங்குதலும் ஆகும் என்பதாம்.

வில்லேந்துதற் சிறப்பு

வில்லேந்துதற் சிறப்பென்பது: வில்லைத் தாங்குதலின் பெருமை —அது நாணி அமைந்த பிறகு ஆதலின்,

இங்கே நாணியின் சிறப்புக்குப் பின்வைத்து நான்கு கவிக ளால் கூறினர்.

கலி விருத்தம்

உலகறிமும் முரசொலிப்ப வுலைவில்கலி வெருண்டொளிப்ப,
நிலவெனவெண் குடைகவிப்ப நிகழ்பவம்பின் புறந்தவிப்ப
இலகுபுலிக் கொடிதழைப்ப விருங்குடிகள் விருந்தழைப்ப
அலகிலவா வியற்றும்வன்ய ரணிசிலையேந் துவதம்மா. (10)

(இ-ள்.) வன்னியர் அணி சிலை ஏந்துவது - வன்னி யர்கள் (தங்கள் கையினிடம்) அழகிய வில்லை ஏந்துவதா னது, உலகு அறி மும்முரசு ஒலிப்ப - உலகெங்கும் பிர சித்தமாகும்படி மூன்று பேரிகை முழங்கவும், உலைவு இல் கலி வெருண்டு ஒளிப்ப - துணிவினைக் கொள்ளும் கலியும் பயந்து மறையவும், நிலவு என வெண்குடை கவிப்ப - சந் திரனைப்போலும் வெள்ளிய முத்துக்குடை கவிந்து நிழல் செய்யவும், நிகழ்பவம் பின்புறந்தவிப்ப-நடக்கின்ற ஊழா னது முதுகுகாட்டி ஓடிநின்று தவிக்கவும், இலகு புலிக் கொடி தழைப்ப - விளங்கா நின்ற புலிக்கொடியானது செழுமையோடு நிலைக்கவும், இரும் குடிகள் விருந்து அழைப்ப - பெரியகுடி சனங்கள்வரும் அதிதி முதலியவர் களுக்கு அழைத்து விருந்து செய்யவும், அலகு இலவா இயற்றும் - (இவைகள் போலும் இன்னும்) கணக்கில்லா தன வாகிய விசேடங்களைச் செய்யும். அம்மா-அசை.

கருத்து. வன்னியர்கள்வில்லைத் தாங்குதல் மூன்று பேரி முழங்கவும், கலி ஒளிக்கவும். சந்திர வட்டக் குடை நிழல் செய்யவும், ஊழ் முதுகுகாட்டி ஓடவும், புலிக்கொடி தழைத்து நிலைக்கவும், குடிகள் அதிதிமுதலியவரை, விருந் துக்காக அழைக்கவும், இன்னுங் கணக்கில்லாதனவும் செய் யும் என்பதாம்.

மும்முரசு - மங்சல முரசு, கொடை முரசு வெற்றி முரசு.

"இதில் நிகழ்பவம் புறந்தவிப்ப" என்றதனுல் நாய ஞர் "ஊழையும் உப்பக்கங் காண்ப ருலைவின்றித்தாழாது

ஞற்றுபவர்" எனக்கூறியதுபோல் இவர்கள் வில்லெடுக்குமபோதே முயற்சியிற் றழாரென்பதைக் குறிப்பிட்டார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இதுவும் அது.

அலையை யெடுக்கா விடிற்பரவைக் காற்ற லேதவ் வரவரசன்
தலையை யெடுக்கா விடிற்பொலிவு தரணிக் கேது விதுவளரும்
கலையை யெடுக்கா விடிற்காட்சி கங்குற் கேது வன்னியர்செஞ்
சிலையை யெடுக்கா விடிலுயிர்க்குச் செழிப்பங் கேது செப்பிடினே.()

(இ-ள்.) செப்பிடின் - சொன்னால், அலையை எடுக்கா விடில் பரவைக்கு ஆற்றல் ஏது - அலையை எடுக்காவிட்டால் சமுத்திரத்துக்கு ஆற்றல் ஏது? அவ் அரவு அரசன் தலையை எடுக்காவிடில் தரணிக்குப் பொலிவு ஏது - அவ்வாதிசேடன் தலையை (நிமிர்ந்து) எடுக்காவிட்டால் பூமிக்கு விளக்கம் ஏது? விது வளருங் கலையை எடுக்கா விடில் கங்குற்கு காட்சி ஏது - சந்திரன் வளருங்கலையை எடுக்காவிட்டால்இரவிற்குச் சிறப்பேது? (என்பனபோல்) வன்னியர் செம சிலையை எடுக்காவிடில் - வன்னியர்கள் அழகிய வில்லை (தங்கள் கையினிடம்) எடுக்காவிட்டால், அங்கு உயிர்க்கு செழிப்பு ஏது - அப்பொழுது உயிர்களுக்குச் செழிப்பென்பது ஏது? (எ - று.)

கருத்து. வன்னியர்கள் வில்லை எடுக்காவிட்டால் உயிர்களுக்குச் செழிப்பே இல்லை என்பதாம்.

இதுவும் அது.

வேறு.

வட்டவுல கிற்கொடிய நெட்டவுண ரைச்சமரின் மட்டறவிடித்தெதிரெயிற், கிட்டவறு பட்டதலை நட்டுவிழ மொட்டையுடல் கெட்டுருட ரக்குருதிநீர், கொட்டநுரை கட்டிடமி கச்சுழிசு ழித்தலை கொ ழித்துநதி யிற்புகவழி, விட்டுறுமி நெட்டையிடு மக்கினி குலத்ரச விக்ரம ரெடுத்தசிலையே. (12)

(இ-ள்.) வட்டவுலகில் - சக்ராகாரமாகிய இவ்வுலகத்தில், விக்ரமர் அக்கினி குலத்து அரசர் எடுத்தசிலை - விஜ

யத்தைக் கொண்டவர்களாகிய வன்னிய ரென்னும் அரசர்கள் எடுத்த வில்லானது, கொடியநெடு அவுணரை சமரில் மட்டு அறஇடித்து - கொடுமையைக் கொண்ட கூட்டமாகிய அரக்கர்களை யுத்தத்தில் கணக்கில்லாது கொன்று (பின்பு) எதிர் எயில் கிட்ட - (யுத்தஞ்செய்து பூமியைக் கட்டிக்கொள்ளும் பொருட்டு) பகைவர்கள் மதிலை நெருங்க (வளைத்துக் கொள்வார்களாயின் அவர்களையும்) அறுபட்ட தலை நட்டுவிழ - (அவ்வியல்பைக் கண்டவுடன் தன்னிடத்து நின்றும் விடப்படும் அம்புகளால்) அறுபட்ட தலைகள் கவிழ்ந்து விழவும், நுரை கட்டிட குருதி நீர் கொட்ட அப்படி அறுபட்ட வாயினின்றும்) நுரைக்கட்டிகள் மிகும்படி இரத்த நீர் பொழியவும், மொட்டை உடல் கெட்டு உருள்தர - (அவ்விரத்த நீர்) தலைபோன உடல்களானவை கெட்டு உருள ஓடி, நதியிற்புக வழிவிட்டு - ஆறுகளிற்போய் விழும்படி வழிவிட்டு, உறுமி நெட்டையிடும் - பிறகு உறுமுதலோடும் தள்ளும். எ-று.

கருத்து. வன்னியர்கள் வில்லை எடுத்தல் யுத்தத்தில் அரக்கர்களை கணக்கில்லாது கொன்று, பின்பு பகைவர்கள் வரின் அவர்களையும் எதிர்த்து, அறுத்து வீழ்த்திய முண்டங்களும் தலைகளும் இரத்த வெள்ளத்திலுருண்டோடி நதியில் விழும்படி வழிகாட்டி, பின் உறுமுதலோடுந் தள்ளும் என்பதாம்.

இதுவும் அது.

வேறு.

குடைகொண் டெழுந்தான் மாயனெடுங் குன்றந் தனையான் குலங்களிக்கப், புடைகொண் டெழுந்து பொழிந்தபெரும் புயல்களிரிந்த வன்னியர்விற், படைகொண் டெழுந்தார் புவிசெழிக்கப் பதறி யவுணர் தென்பதிக்கே, விடைகொண் டெழுந்தே யொருநாளு மீளா வகைசென் றடைந்தனரே. (13)

(இ-ள்.) மாயன் ஆன் குலம் களிக்க நெடு குன்றந் தனை குடைகொண்டு எழுந்தான் - விஷ்ணுவானவர் பசுக் கூட்டங்கள் மகிழும்படி உயர்வாகிய கோவர்த்தனகிரியை

(ஒருக்கால்) குடையாகக் கொண்டெழுந்தார் (அதனுல்) புடை கொண்டு எழுந்து பொழிந்த பெரும் புயல்கள் இரிந்த - கனங்கொண்டெழுந்து (மழை) பொழிந்த பெரிய மேகக்கூட்டங்கள் விலகின (அதுபோல) வன்னியர் புவி செழிக்க வில் படைகொண்டு எழுந்தார் - வன்னியர்கள் புவி செழிக்கும்படி விற்படை கொண்டெழுந்தார்கள், (அதனுல்) பதறி - திடுக்கிட்டு, அவுணர் விடை கொண்டு எழுந்து ஒருநாளும் மீளாவகை - அரக்கர்கள் விடைபெற்றுக்கொண்டுபோய் மறுபடியும் எந்நாளும் திரும்பாதபடி தென்பதி சென்று அடைந்தனர் - இயமலோகம் போய்ச் சேர்ந்தார்கள். எ-று.

கருத்து. வன்னியர்கள் வில்லை எடுத்தார்கள் இராக்ஷசர்கள் ஒருநாளுந்திரும்பா வகையாக எமலோகம் போய்ச் சேர்ந்தார்கள் என்பதாம்.

வில்வளைத்தற்சிறப்பு.

வில்வளைத்தற்சிறப்பென்பது:—வில்லை வளையும்படி செய்தலின் பெருமை. அதுவில்லைத்தாங்கியபிறகாதலின், இங்கே வில்லேந்துதற் சிறப்பிற்குப் பின்வைத்துக் கூறினுர்.

கோச்சகம்.

தனுவணங்கொண் டுலகளிப்பத் தார்வேந்த ரெனவுதித்தோர்,
தனுவணங்க சனும்வெள்கித் தாள்வணங்கு மெழின்மிக்கோர்,
தனுவணங்க கலவெவர்க்குந் தாய்போனன் ருற்றும்வன்யர்,
தனுவணங்கத் தரியலர்க † டஞ்சமென வணங்காரோ. (14)

(இ-ள்.) உலகு அளிப்ப- உலகத்தைக் காக்கும்படி, தார்வேந்தரெனத் தனு வணங்கொண்டு உதித்தோர் - (அக்கினியும மற்றைய கடவுளம்சங்களுமே) மாலையைத் தரித்த க்ஷத்திரியர்களெனச் சொல்லப்படுகிறமானுட வடிவங்கொண்டு பிறந்தவர்களும், தன் உவண் அங்கசனும்

† தஞ்சமென்றது—தொல்காப்பியம் இடைச் சொல்லியல் "தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே" என்னும் கஉ-வது சூத்திரத்தாலுணர்க.

வெள்கி தாள் வணங்கும் எழில் மிக்கோர் - தன்னிடத்து மன்மதனும் நாணிப் பாதத்தில் வணங்கும்படி அழகில் மிகுந்தவர்களும், தனு அனங்கு எவர்க்கும் அகல தாய் போல நன்று ஆற்றுவன்யர் - யாவர்க்குஞ் சிறுமை நோயகல தாய்போல (அருள் வைத்து) மனுநெறி முறை யாகக் காவல் செய்கின்றவர்களுமாகிய வன்னியர்களது, தனுவணங்க - வில்லானது வளைய, தரியலர்கள் தஞ்சம் என வணங்காரோ - பகைவர்கள் (எதிரில் வந்து எங்களை சம்மரிப்பது) எளிது (கோபித்து வில்லைவளைக்காதீர்கள்) என வணங்கமாட்டார்களோ? (எ-று.)

கருத்து. வன்னியர்கள் வில்வளையப் பகைவர்கள் தஞ்சம் என வணங்குவார்கள் என்பதாம்.

இக்ஷ்வாகு வம்சத்தில் விஷ்ணுவே இராமனுகவும், புரூரவர் வம்சத்தில் கிருஷ்ணனுகவும், பலராமனுகவும், மதுரைப் பாண்டியன் வம்சத்தில் தடாதகைப் பிராட்டியாராகப் பார்வதியும், சிவபெருமான் சௌந்தரபாண்டியனுகவும், சுப்ரமண்யர் உக்ர குமார பாண்டியனுகவும், அக்கினி உருத்திரவன்னிய மகாராஜனுகவும் போந்த சரித்திரங்களாலு முணர்க.

தன் + உவண்—தனுவண். என்றது தொகுத்தல் விகாரம்.

நாணேற்றுதற் சிறப்பு.

நாணேற்றுதற் சிறப்பென்பது:—நாணியை வில்லினிடத்துப் பூட்டுதலின் பெருமை. அது வில்லை வளைத்த பிறகே யாதலின், இங்கே வில் வளைத்தற் சிறப்புக்குப் பின் வைத்துக்கூறினுர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஓங்குபுகழ் வன்னிமன்ன ரொன்னலார்த மைப்புறங்கண் டுலகங் காக்கத், தாங்குவரிச் சிலைவணக்கிச் சரோருகக்கை யாற்றீண்டித் தனிநாண் பூட்டப், பாங்குறுமு வுலகினரும் பைங்கழைத்தோண் மடநல்லார் பசும்பொன் வண்ணப், பூங்கமுகின் மங்கலநாண் பூட்டுதல் போன் மெய்ப்புளகம் போர்ப்பர் மன்னே. (15)

(இ - ள்.) ஓங்கு புகழ் வன்னி மன்னர் - உயர்ந்த கீர்த்தியைக்கொண்ட வன்னிய அரசர்கள், ஒன்னலார் தமைப் புறங்கண்டு-பகைவர்களை முதுகுகாட்டச்செய்து, உலகம் காக்க - உலகத்தைக்காக்கும் பொருட்டு, வரி தாங்கு சிலை சரோருகக் கையாற்றீண்டி வணக்கி-இடைக் கட்டுகளையுடையவில்லைத் தாமரைமலர்போலும் கையினால் பற்றி வளைத்து, தனி நாண்பூட்ட - ஒப்பற்ற நாணியேற்ற, பாங்கு உறு மூவுலகின் - பகுப்பினைக்கொண்ட மூன்று உலகினும், (வசிக்கின்றவர்கள்), அரும் பைங் கழைத் தோள் மடநல்லார்-மென்மையாகிய பசிய மூங்கில்போலும் தோள்களையுடைய இளம்பருவப் பெண்களது, பசும் பொன் வண்ணப்பூம் கமுகில் மங்கலநாண் பூட்டுதல்போல்-பசும் பொன்னிறம் வாய்ந்த அழகிய கழுத்தில் தாலிக் கயிற்றைச் சேர்ப்பதுபோல, மெய்ப்புளகம் போர்ப்பர் - சரீரம் புளகித்து மகிழ்வார், எ - று. கமுகு - ஆகுபெயர். மன், ஓ - அசைகள்.

கருத்து. வன்னியர்கள் வில்லில் நாணியைப்பூட்ட மூன்றுலகத்தவர்களும் மாங்கல்ய தாரணகாலம் போலும் மகிழ்வார்கள் என்பதாம்.

குணத்தொனிச்சிறப்பு.

குணத்தொனிச் சிறப்பென்பது - வில்நாணியைப் பிகுவறியத் தெறிப்பதாலாகிய ஓசையின் பெருமை அது நாணியைப் பூட்டியபிறகு ஆதலின், இங்கே நாணேற்று தற் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நெடியதிரை யெழுகடலி னொலியுமழை முகிலொலியு நிகழும்யுக முடிவின் முடுகும், ஒடிவில்பெரு வளியொலியு முருமொலியு மிணையி லெனவுரகர்விழி பிதிரவெருவிக், கொடியதிது கொடியதென விபுதர் நிலை கெடவவுணர் குடர்குலைய வடர்தி சையுடன், படியதிர வனியர் சிலை தழுவுகுண வொலியினிலை பகர்வதெவ னரித ரிதரோ. (16)

(இ - ள்.) நெடிய திரை உழுகடலின் ஒலியும்-நீண்ட ஏழு சமுத்திரங்களின் சத்தமும், மழை முகில் ஒலியும்.

துளிகளைக்கொண்ட மேக கர்ச்சனையும், நிகழும் யுகமுடிவில் முடுகும் ஒடிவுஇல் பெருவளி ஒலியும் - நடக்கின்ற யுகாந்தத்தில் மோதுகின்ற தளர்தலிலாத பிரசண்டமாருதத்தி னதிர்ப்பும், உரும் ஒலியும் - இடியின் முழக்கமும், இணைஇல் என வெருவி-ஒப்பில்லையென்பதாகப் பயந்து, உரகர் விழி பிதிர-நாகலோகத்தவர்களுக்கு விழிபிதுங்கவும், இது கொடியது இது கொடியது என விபுதர் நிலைகெட-இது கொடியது இது கொடியது என தேவர்களுக்குத் (தங்கள் தங்கள்) நிலை கெடவும், அவுணர்குடர் குலைய-இராக்ஷதர்களுக்கு (வயிற்றைப் பிசைவதால் தனித் தனி நிலைகெட்டு) குடல் அடுக்குக் குலையவும், அடர்திசையுடன் படியதிர - நெருங்கிய திக்குகளோடும் பூமி யதிரவும், (செய்யும் ஆகையால்) வனியர் தழுவு சிலை குணத்தொனியின்நிலை-வன்னியர்கன் கையிற் றழுவிய விற்குணத்தொனியினிலையை, எவன் பகர்வது - எப்படிச் சொல்வது அரிது அரிது - அருமை! அருமை! எ-று. அரோ அசை.

கருத்து. வன்னியர்கள் தரிக்கும் வில்லின் குணத்தொனிக்கு எழு சமுத்திர சத்தமும், மேகத்தினது சத்தமும், இடி முழக்கமும், பிரசண்டமாருத அதிர்ப்பும், ஒவ்வா தென நாகலோகத்தவர்களுக்கு விழி பிதுங்கவும், தேவர்களுக்குத் தங்கள் தங்கள் நிலை கெடவும், இராக்ஷதர்களுக்குக் குடர் அடுக்குக் குலையவும், திக்குகளோடு பூமி அதிரவுஞ் செய்யு மாதலால் அதன் பெருமை சொல்வது அருமை அருமை என்பதாம்.

அம்பறுத்தூணிச்சிறப்பு.

அம்பறுத்தூணிச் சிறப்பென்பது:—அம்பு அறுத கூட்டின் பெருமை. அது விற்குணத்தொனி யறிந்தே பிறகு கருதுதலின் இங்கே விற்குணத்தொனிச்சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்

கோச்சகம்.

உம்பர்யா மென்றிறுமாந் துறைவதுண்டவ் வமரர்யாங்
கம்பரா மென்றேத்தக் கவியரசாய் வாழ்வதுமுண்

டிம்பரா ருஞ்சொல்வன்ய ரேலாருக் கிடரிழைக்கு
மம்பருத் தூணியுண்டே லாவியங்கத் தெவர்க்குமுண்டே. (17)

(இ - ள்.) இம்பர் யாருஞ்சொல் வன்னியர் - இவ்வுலகத்தில் யாவரும் சொல்லுகின்ற வன்னியர்களது, ஏலாருக்கு இடர் இழைக்கும் அம்பு அருத்தூணி உண்டேல் - பகைவர்களுக்குத் துன்பத்தைச் செய்யும் அம்பருத்தூணியிருக்குமேயானல், அவ் அமரர் யாம் உம்பர் என்று இறுமாந்து உறைவது - அத்தேவர்கள் நாம் உயர்ந்த பதவியையுடையேம் என்று எண்ணிக் கருவித்திருப்பதுண்டு; யாம் கம்பர் என்றேத்தக் கவியரசாய் வாழ்வது முண்டு - யாமும் கம்பர் என்று யாவரும் புகழக் கவிராஜனுக வாழ்வதும் உண்டு; எவர்க்கும் ஆவி அங்கத்து உண்டு - (இவையன்றி மற்றையோர்) யாவர்க்கும் உயிர் அங்கத்தினிடத்து உண்டு. ஏ - று. ஆம் ஏ - அசைகள்.

கருத்து வன்னியர்களது அம்பருத்தூணி யிருப்பதால் தேவர்கள் செருக்கியிருப்பதும், யாம் கம்பரென உலகப் பிரசித்த கவிராஜனுகவிருப்பதும் ஆன்மகோடிகள் உயிரோடிருப்பதும் உண்டு என்பதாம்.

இதில் இராக்ஷதர்கள் அடியோடுங் கெட்டதால் "உம்பர் யாமென்றிறுமாந் துறைவதுண்டவ் வமரர்கள்" என்றும் தமிழ் வேந்தர் மூவராலும் நிலம் யானை குதிரை தண்டிகை முதலியவை கொடுத்து அனுசரித்ததோடும் தமக்குக் கொடுத்த யானை குதிரைகள் பயிர்களையழித்துவிடும் நிலங்களுக்கு வரி நீக்கிக் கொடுத்தலையும் மறவேமென்பார் "யாம் கம்பராமென்றேத்தக் கவியரசராய் வாழ்வதுண்டு" என்றும் கூறினரென்க.

பிரமாத்திரச்சிறப்பு.

பிரமாத்திரச் சிறப்பென்பது :—பிரமாவினிடத்துப் பெறும் அத்திரத்தின் பெருமை. அது அம்பருத்தூணிக்குள் இனத்தோடு தங்குதலின், இங்கே அம்பருத்தூணிச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வரமிகுவன் னியர்வணங்கா முடியரசர் வண்மைதனை வரையவேண்டிற்
சிரமகுட மன்னவராய்ப் பற்பலதே யங்களினுந் திகழ்வோர் தம்முள்
விரவலரைப் பொன்னிலத்து மித்திரரை யிந்நிலத்தும் வீறி வாழ்வான்
பிரமசிரத் தானிறுவும் பெற்றிமைகண் டாய்ந்தெவர்தாம் பேசற்பாற்றே

(இ - ள்.) வணங்காமுடி மிகுவர வன்னியர் அசரர்-வணங்கா முடியோராகிய அதி மேன்மையைக் கொண்ட வன்னியர் என்னும் அரசர்கள், சிரமகுட மன்னவராய்ப் பல பல தேயங்களினும் திகழ்வோர்தம் உள் - தலையில் கிரீடந் தரித்த அரசர்களாகப் பல பல தேயங்களினும் விளங்குவோர்க்குள், விரவலரைப்பொன்னிலத்தும்-பகைக் வர்களைத் தேவ வுலகத்தும், மித்திரரை இந்நிலத்தும்-நண் பர்களை இவ்வுலகத்தும், வீறிவாழ்வான் - விளங்கிவாழும் பொருட்டுப், பிரமசிரத்தால் நிறுவும் வண்மைதனை வரைய வேண்டில் - பிரமாத்திரத்தினாலே நிலைக்கச் செய்யும் வலி யின் பெருமையை எழுதிச்சொல்லப் புகுந்தால், பெற் றிமை கண்டு எவர் ஆய்ந்து பேசற் பாற்று-அப்பெருமை யைக் கண்டு எவர் ஆராய்ந்து சொல்லும் பான்மையினை யுடையது. எ-று. ஏ - அசை.

பிரம அத்திரம் - பிரமாத்திரம். அது பிரமாச்சிர மென தகரத்துக்குச் சகரம் போலியாகி பிரமசிரமென இடை குறைந்து நின்றது.

கருத்து. வன்னியர்கள் பிரமாத்திரம் பகைவர்களைத் தேவவுலகத்தும், சிநேகர்களை இவ்வுலகத்தும், நிலைக்கச் செய்யு மென்பதாம்.

நாராயணாத்திரச் சிறப்பு.

நாராயணாத்திரச் சிறப்பென்பது :—நாராயணனிடத் துப் பெறும் அத்திரத்தின் பெருமை. அது பிரமாத்திரத் தினுஞ் சிறத்தலின், இங்கே பிரமாத்திரச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

காரியலுங் கரதலவன் னியவீர ரடுசமரிற் கனன்றே யுய்க்கும்
பேரியனு ராயணுத் திரத்தினுக்கிந் திராதிபிர மாதியோரும்
நேரியல வுட்குவரே லியாவரெதிர் வாழ்த்தியதை நின்றுதாழ்வோர்
பாரியர்மங் கலநாண்பன் னளுநிலை பெறவரம்பா லிக்கு மம்மா. (19)

(இ - ள்.) கார் இயலும் கரதல வன்னிய வீரர்-மேகத்தைப்போல் (இரப்பவர்களுக்கு வரும் பிரயோசனத்தை விரும்பாது) கொடுக்கும் கைகளையுடைய வன்னிய வீரர்கள், அடுசமரில் கனன்று உய்க்கும், - (எதிர்த்த பகைவர்களைக்) கொல்லும்படி யுத்தகளத்தில் கோபித்துச் செலுத்தும், பேர் இயல் நாராயணுத்திரத்தினுக்கு - பெருமையுடைய நாராயணுத்திரத்தினுக்கு, நேர் இயல இந்திராதி பிரமாதியோரும் உட்குவரேல் - எதிரில் வர இந்திரன் பிரமா முதலியோர்களும் அஞ்சுவார்களேயானல், எதிர் யாவர் - (வேறே) எதிர்ப்பவர்கள் எவர் (ஒருவரு மில்லையாதலால்), நின்று அதை வாழ்த்தி தாழ்வோர் பாரியர் — (எதிர்) நின்று அதைத் துதித்து வணங்குகின்றவர்களின் மனைவியரது, மங்கலநாண் பல்நாளும் நிலைபெற வரம்பாலிக்கும் - தாலிக்கயிறு எப்போதும் நிலைத்திருக்கும்படி வரங்கொடுக்கும் எ - று. அம்மா - அசை

கருத்து. வன்னியர்களின் நாராயணுத்திரம் தன்னை வணங்குபவர்களின் மனைவியர் தாலிக்கயிறு பலநாளும் நிலைத்திருக்கும்படி வரங்கொடுக்கும் என்பதாம்.

பாசுபதாத்திரச் சிறப்பு.

பாசுபதாத்திரச் சிறப்பென்பது.— பசுபதியினிடத்துப் பெறும் அத்திரத்தின் பெருமை. அது நாராயணுத்திரத்தினுஞ்சிறத்தலின், இங்கே நாராயணுத்திரச் சிறப்புக்குப் பின் வைத்துக்கூறினர்.

கோச்சகம்.

உருத்திரவின் வயங்குதிங்க ளுதயனெதி ரொளிர்தருங்கோல்
உருத்திரனும் வயிரவரை யுறழ்தோளார் வன்னிமன்னர்
உருத்திரத மிவர்ந்திகலோ ருரஞ்சாய்ப்பத் தொடுக்குமழல்
உருத்திரவன் படைக்குமற்ற வும்பர்படை யொப்பாமோ. (20)

(இ - ள்.) உருத்து இரவின் வயங்கு திங்கள் உதயன் எதிர்ஒளிர் தருங்கொல் - உதித்து இரவின் கண் விளங்கா நின்ற சந்திரன் சூரினுக்கு முன் பிரகாசத்தை யடையுமா? (அதுபோல்) வயிரம் வரை உறழ்திரளும் உருதோளார் வன்னிமன்னர் - வயிர மலைபோலும் திரண்ட வடிவினைக்கொண்ட தோளினை யுடையோராகிய வன்னியரென்னும் அரசர்கள், உருத்து இரதம் இவர்ந்து இகலோர் உரஞ்சாய்ப்பத்தொடுக்கும் - கோபித்து இரதத்திலேறிச் செலுத்திப் பகைவர்களது உடலைப் பூமியில் வீழ்த்தும்படி தொடுக்கும், அழல் வன்உருத்திர படைக்கு - அக்கினியைக் கக்காநின்ற வலிமையையுடைய பாசுபதாத்துக்கு, மற்ற உம்பர் படை ஒப்பு ஆமோ - மற்றையதேவர்கள படைகள் ஒப்பாகுமா? எ - று.

கருத்து வன்னியர்களது பாசுபதாத்திரம் தேவர் படைகள் யாவற்றினுஞ் சிறந்தது என்பதாம்.

இதில் மன்ற வும்பர் யென்றதனல் இந்திராஸ்திரம், அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம், வாயுவாஸ்திரம், குபேராஸ்திரம், கந்தர்வாஸ்திரம், பர்வதாஸ்திர முதலியவைகளை யென்க.

அபிமந்திரித்தற் சிறப்பு.

அபிமந்திரித்தற் சிறப்பென்பது:—அம்புகளில் மந்திரவுரு வேற்றுதலின் பெருமை. அது அம்புகளைப் பிரயோகம் செய்யும்பொழுது அமைதலின், இங்கே அத்திரங்களின் சிறப்புக்குப் பின் வைத்துக்கூறினர்.

அறுசீர்க்கழிநெடி லடியாசிரிய விருத்தம்.

அக்கரமொன் றக்கரமூன் றக்கரமைந் தக்கரமெட் டாதி யாய
எக்கடவுண் மந்திரமு மெண்ணிலுருச் செபித்துநினை வெய்தி னேரும்
மிக்கதிது வெனவியப்ப விறல்வன்ய குலவரசர் விடுங்கோல் சென்று
தக்கவபி மந்திரமாட் சியினமர்வென் றிறைவனிடஞ் சார்த லாலே. ()

(இ - ள்.) விறல் வனியகுல அரசர் - வெற்றிகொண்ட வன்னியகுல வரசர்கள், தக்க அபிமந்திரமாட்சியின் -

(அளவுக்குத்) தக்கதாக அபிமந்திரித்தலின் வல்லமையால், விடும்கோல் - விடப்பட்டபாணமானது, சென்று அமர் வென்று இறைவனிடம் சார்தலால் - போய்ப் பகையைச் சயித்து அரசனிடத்திலேயே வந்து அடைகிறபடியால், அக்கரம் ஒன்று அக்கரம் மூன்று அக்கரம் ஐந்து அக்கரம் எட்டு ஆதி ஆய - ஏகாக்ஷரம், திரியாக்ஷரம், பஞ்சாக்ஷரம் அட்டாக்ஷர முதலாகிய, எக் கடவுள் மந்திரமும் - எவ் வகைக் கடவுள் மந்திரங்களையும், உரு எண் இல் சபித்து நினைவு எய்தினோரும் - உரு கணக்கில்லாது சபித்துப் பயனடைந்தோர்களும், இது மிக்கது என வியப்ப - இம்மந்திரம் விசேடமுடையதென ஆச்சரியமடைவார்கள். எ-று.

கருத்து. வன்னியர்கள் அபிமந்திரித்தல் மந்திரங்களெல்லா வற்றினுஞ் சிறந்ததாகின்றது என்பதாம்.

இதில் "ஆதியாய் எக்கடவுண் மந்திரமும்" என்றதனால் சடாக்ஷரம், துவாதசாக்ஷரம், சோடசாக்ஷரம், சதுர்விமதியக்ஷர முதலியவைகளுங்கொள்க.

நாணிறங்குதற் சிறப்பு.

நாணிறங்குதற் சிறப்பென்பது:—வில்லினின்றும் நாணிறங்குதலின் பெருமை. அபிமந்திரித்தலால் அம்புகள் பிரயோகமாகி ஜயமடைந்த பிறகு வில்லினின்றும் பிரிவுறுதலாதலின் இங்கே அபிமந்திரித்தற் சிறப்புக்குப்பின் வைத்துக்கூறினர்.

பூதலத்தோர்க் கிடரியற்று மரக்கருடல் பிளந்துவெற்றிப் புனைந்த வோலை. மீதலத்தோர்க் குணரவிடுத் தவர்பயந்தீர்த் தரக்கியர்கள் வெரீஇத்தோ டோய்ந்த, காதலருக் கமுதரற்றிக் கழுத்திலகு மங்கலநாண் கழித்த தற்பின், தாதலர்தா ரணிவனியர் தனிச்சிலைநாண் களித்திறங்கித் தயங்கு மாதோ. (22)

(இ-ள்.) தாது அலர் தார் அணி வனியர் தனிச் சிலைநாண் - வாசனை தங்கிய மலர் மாலையை யணிந்த வன்னியர்களின் ஒப்பற்ற வில்நாணியானது, பூதலத்தோர்க்கு இடர் இயற்றும் அரக்கர் உடல் பிளந்து - பூவுலகத்தவர்க்குத் துன்பத்தைச் செய்யாநின்ற அரக்கர்களுடைய சரீ

ரத்தைப் பிளந்து, வெற்றிபுனைந்து - ஜயமடைந்து, அ ஓலை மீதலத்தோர்க்கு உணரவிடுத்து - அச்சய வோலையைத் தேவவுலகத்தவர்கள் அறியும்படி யனுப்பி, அவர்பயம் தீர்த்து - அவர்கள் கொண்டிருந்த பயத்தைத்தீர்த்து, அரக்கியர் - இராக்ஷத ஸ்திரீகள், வெரீஇத் தோள் தோய்ந்த காதலருக்கு அழுது அரற்றி - பயந்து தங்கள் (தங்கள்) தோளிற்சேர்ந்து (இன்பத்தைக்கொடுத்த) கண வர்களுக்குக் கதறி யழுது, கழுத்து இலகு மங்கல நாண் கழித்ததற்பின் - கழுத்தில் விளங்கிய தாலிக்கயிற்றை அறுத்தபிறகு, களித்து இறங்கித் தயங்கித் தயங்கும் - மகிழ்ந்து (வில்லினின் றும்) இறங்கித் தங்குவதாகும். எ-று. மாதோ - அசை.

கருத்து. வன்னியர்களின் வில்நாணியானது அரக்கர் களை வென்று ஜயமடைந்து, அவ்வெற்றியைத் தேவர்கள் அறியும்படி செய்து அவர்கள் பயத்தைத்தீர்த்து, இரா க்ஷத ஸ்திரீகளின் தாலிக்கயி றறுத்தாலன்றி யிறங்கா தென்பதாம்.

இதுவுரையில் கூறியவைகள் விற்சிறப்பென்க. இனி வாட்சிறப்புக் கூறினாராயினர்.

வாள்

வாளென்பது :—கடகம் அதாவது கத்தி : வீரபட் டய மெனினும் ஆம். அது வில்லோடும் சமம்நோக்கிப் பின் வைத்துக் கூறினர்.

வீரவாட்சிறப்பு

வீரவாட் சிறப்பென்பதுவீரபட்டயத்தின் பெருமை. அது விற்சமரே யன்றி வாட்சமருங் கொள்வாமெனக் கருதுங்கால் அமைதல் இங்கே நாணிறங்குதற் சிறப்புக் குப் பின் வைத்துக் கூறினர்.

கோச்சகம்

விண்ணவர்க்கு விருந்தினராய் மேவியர மாதரின்பம்
மண்ணின்மரு வலர்மருவ வாழ்விக்கும் பண்ணுடர்
திண்ணமுறு வன்னிமன்னர் திருக்கரத்தி லேந்தியமர்
நண்ணும்வய வாண்மகிமை நாமெங்ங னவில்வதுவே. (23)

(இ - ள்.) பண்ணுடர் திண்ணம் உறும் வன்னிமன்னர் - தமிழ்நாட ரென்னும் (சேர சோழ பாண்டியர்களாகிய) பலத்தை யுடைய வன்னிய வரசர்களது, திருக்கரத்தில் ஏந்தி அமர் நண்ணு வயவாள் - அழகிய கையினிடத்துப் பொருந்தி யுத்தத்தைச் செய்யும் வீரவாளானது, மண்ணின் மருவலர் விண்ணவர்க்கு விருந்தினராய் மேவி- பூவுலகிலுள்ள பகைவர்கள் தேவவுலகத் தவர்களுக்குவிருந்தினராகப் பொருந்தி, அரமாதர் இன்பமருவ வாழ்விக்கும் - அரம்பை முதலிய தெய்வப் பெண்களோடும் இன்பத்தை யனுபவிக்கும்படியான உயர்ந்த வாழ்வைக் கொடுக்கும், (ஆகையால்) மகிமை நாம் எங்ஙன் நவில்வது—(அவ்வீரவாளின்) சிறப்பை நாம் எவ்விதத்திற் சொல்வது. எ-று.

கருத்து. வன்னியர்கள் வீரவாள் பகைவர்களைத் தேவர்களுக்கு விருந்தாளிகளாய் அரம்பை முதலிய தேவஸ்திரீகளின் போகங்களை யனுபவிக்கச் செய்யும் என்பதாம்.

வாட்சிறப்புக் கூறினவர் இனி வேற்சிறப்புக் கூறினாராயினர்.

வேல்.

வேலென்பது - வாளோடும் ஒற்றுமையுடையது. அது இனம் நோக்கி வாளின் பின்வைத்துக் கூறினர்.

வேலேந்தியகாலாட்படைச் சிறப்பு.

வேலேந்திய காலாட்படைச் சிறப்பென்பது-வேலாயுதத்தைத் தாங்கிய காலாட்படையின் பெருமை. அது

வாளோடு வேல் இன மாதலின் இங்கே வீரவாட் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

செய்யகத்து வளநாடு தேர்புலவர்க் கினிதளிப்பார்
மெய்யகத்து வன்னியர்செவ் வேள்பலவா முருக்கொளல்போல்
கையகத்து வேலேந்து காலாளின் படையினன்றி
வையகத்து மருவுகலி மற்றென்று லகலாவே. (24)

(இ - ள்.) செய் அகத்து வளநாடு தேர்-வயல்வளத்தைக்கொண்ட நாடு தேர் முதலியவைகளையும், புலவர்க்கு இனிது அளிப்பார் வன்னியர்-தம்மை யடைந்த வித்வான்களுக்கு இனிமையோடுங் கொடுக்கின்றவர்களாகிய வன்னியரென்னும் அரசர்களது, செவ்வேள் மெய் அகத்து பல ஆம் உருகொளல்போல் - ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் தமது சரீரத்தினிடத்தி னின்றும் (அவ்வுருவாகப்) பல உருவங்கள் கொண்டு வருதல் போல், (வருகின்ற) வேல் ஏந்து காலாளின் படையின் அன்றி - வேல் ஏந்திய காலாளின் படையினலல்லது, வையகத்து மருவு கலி மற்று ஒன்றால் அகலா - இவ்வுலகத்துப் பொருந்தும் அதருமமானது வேறு ஒருவழியினுலும் நீங்காது, எ-று.

கருத்து வன்னியர்களது காலாளின் படைகளினல் உலகத்தி லுண்டாகும் அதருமம் நீங்கி வருகின்றது என்பதாம்.

"செய்யகத்துவள நாடு தேர் புலவர்க் கினிதளிப்பார்" என்றதற்கு - மதுரையில் குலசேகர பாண்டியன் அரசு புரிந்த காலத்து ஷெ பாண்டியன் தன்மேல் பாமாலை தொடுத்துவந்த இடைக்காடனை அவமதித்த காரணத்தால் சோமசுந்தரக்கடவுள் வருத்தமடையக் கண்ட பாண்டியன் ஷெ காடனை வருவித்து மிக்க மரியாதை யோடும் பாமாலை கேட்டு "அறிவுடைக் காடனுக்கு மருமை மாண் புலமை யோர்க்கும், முறைமையா லாரந்தூசு முகிழ்முலைக் கொடியினன்னர், நிறை நிதி வேழம்பாய்மான் விளைநில நிரம்ப நல்கி, யறைகழற் காலிற் பின்னேழடி நடந்திதனை வேண்டும்"

என்னும் திருவிளையாடல் இடைக் காடன் பிணக்கு தீர்த்த படலம் ௩௪-வது கவியிற் காண்க. இன்னும் "புலவர்க்கினி தளிப்பார்" என்றதனுல் முதலிடைகடையென மூன்று சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன முதலியவைகளும் கொள்க.

வேற்சிறப்புக் கூறினவர் இனி யானைச்சிறப்புக் கூறினாராயினர்.

யானை.

யானையென்பது: யுத்தத் தேர்ச்சியை யுடைய யானையை. அது காலாட்படையோடும் ஒற்றுமை நோக்கிப் பின்வைத்துக் கூறினர்.

யானைப்படைச்சிறப்பு.

யானைப்படைச் சிறப்பென்பது - யானைப்படையின் பெருமை. அது வேலேந்திய காலாட்படைக்குப் பலந் தருதலின் இங்கே வேலேந்திய காலாட்படைக்குப் பின் வைத்துக் கூறினர்.

ஒரானை முகத்தானை யுலகத்தோர் முன்னிறுத்திப்
பேரான கருமமெலாம் பிறழாது முற்றுகிற்பார்
காரான வுடலவுணர் கலங்குறமுன் னிறுத்திவன்யர்
போரானைப் படையானே போர்வயங்கோ டலினன்றே. (25)

(இ - ள்.) வன்னியர்கள் - வன்னியர்க ளானவர்கள், கார் ஆன உடல் அவுணர் கலங்குற முன்னிறுத்தி - கரிய உடலினை யுடையவர்களாகிய இராக்ஷதர்கள் கலங்கும்படி முனையில் நிறுத்தி, போர் ஆனைப் படையானே - பொரும் யானைப் படையினலே, போர்வயம் கோடலின் அன்றே - யுத்தத்தில் ஜயத்தை யடைகிற படியினு லல்லவா, (அக் காட்சியைக் காணுகின்ற) உலகத்தோர் - உலகத்தவர்களும், (அவ்வங்கந் தமக்கில்லை யாதலால் தங்களுக்கு அவ்வியானை கிடைப்பது அருமையென எண்ணி) ஓர் ஆனை முகத்தானை முன் இறுத்தி - (அவ்யானைகளுள் ஒன்றி

னது) ஓர் உறுப்பைக்கொண்ட விநாயகனை முதலில் வைத்து, (வணங்கி) பேர் ஆன கருமம் எல்லாம்பிறழாது முற்றுகிற்பார் - பெரிய செயல்களை யெல்லாந் தவறாது முடித்துக் கொள்கிறார்கள், எ - று.

கருத்து. வன்னியர்கள் யானைப்படையைக் கொண்டு ஜயமடைதலைக் கண்டே உலகத்தவர்களும் யானைமுகத் தினையுடைய விநாயகனைப் பூசித்துப் பயன் அடைகிறார் கள் என்பதாம்.

யானைச் சிறப்புக் கூறினவர் இனிக் குதிரைச் சிறப் புக் கூறினாராயினர்.

குதிரை.

குதிரை யென்பது-யுத்தவல்லபமுடைய குதிரையை. அது ஜாதி ஒற்றுமையால் யானைக்குப் பின்வைத்துக் கூறினார்.

குதிரைப்படைச் சிறப்பென்பது: குதிரைப்படை யின் பெருமை. அது யானைக்கினை மாதலின் - இங்கே யானைப் படைச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

குதிரைப்படைச்சிறப்பு.

பூவேறி நான்முகனும் புள்ளேறித் திருமாலும்
சேவேறிக் கண்ணுதலுஞ் செய்வதென்னே தீஞ்சுவைகொள்
பாவேறிப் புகழ்பெற்றுப் பாராளும் வனியர்தழல்
மாவேறிப் பகைவென்று மாநிலங்காத் தருள்வாரே. (26)

(இ-ள்.) நான்முகன் பூஎறியும் - பிரமதேவர் பூவிலே றியும், திருமால் புள் ஏறியும் - விஷ்ணு கருடவாகனத்தி லேறியும், கண்ணுதல் சே ஏறியும் - சிவபெருமான் இடப வாகனத்தி லேறியும், செய்வது என்-செய்கின்றதென்னை யிருக்கிறது, [இம் மூவர்களும் படையல்லாத திறமற்ற வாகனம் வைத்துக்கொண்டு தந்தொழிலை நடத்தலால் யாதொரு பிரயோஜனமும் இல்லை யென்றபடி] தீம்சுவை கொள்பாஏறி - மிக்க சுவைகளைக் கொண்ட பிரபந்தங்க

ளில் எறி, (நிலையாய்த் தங்கி) புகழ்பெற்று - புகழை யடைந்து, பார் ஆளும் வன்னியர் - பூவுலகத்தை அரசுபுரி யும் வன்னியர்கள், தழல்மா எறி - அக்கினிக் குதிரையி லேறிச் (செலுத்தி), பகைவென்று மாநிலம் காத்து அருள் வார் - பகைவர்களைச் சயித்துப் பூமியைக் காத்தருளுகி றார்கள், எ-று. பா ஆகுபெயர்.

கருத்து. வன்னியர்கள் அக்கினிக் குதிரையி லேறிச் செலுத்திப் பகைவர்களைச் சயித்து உலகத்தைக் காக்கின் றார்கள் என்பதாம்.

குதிரைச் சிறப்புக் கூறினவர் இனி தேர்ச்சிறப்புக் கூறினாராயினர்.

தேர்.

தேர் என்பது - இரதம். அது குதிரையோடும் அதன் பின்வருதலாதலின், குதிரைக்குப் பின்வைத்துக் கூறினார்.

தேர்ப்படைச் சிறப்பென்பது - தேர்ப்படையின் பெருமை. அது குதிரையைப் பூண்டிருக்கப்படும்ஆதலின், இங்கே குதிரைப்படைச் சிறப்புக்குப் பின்வைத்து இரண்டு கவிகளால் கூறினார்.

தேர்ப்படைச்சிறப்பு.

பார்விழாப் பெறக்காக்கும் பண்ணுடர் பதமலரில்
போர்விழாப் புரிவேந்தர் பொன்னவிர்மா முடிவணக்கி
யார்விழா திருப்பார்க ளமரர்மலர் மழைசொரியத்
தேர்விழா வுறவுகைக்கிற் றிருவிழாத் தினமென்றே. (27)

(இ - ள்.) பார் விழாப் பெற காக்கும் பண்ணுடர் - உலகுகளிப்பையடைய அரசுசெய்கின்ற தமிழ் நாடரென் னும் சேர சோழ பாண்டியராகிய வன்னியர்கள், அமரர் மலர் மழை சொரிய விழா உறத்தேர் உதைக்கில் - தேவர் கள் பூமாரி பொழிய சக்கரஞ் சுழலும்படி தேரைச் செலுத்துவார்களானால், திருவிழாத் தினம் என்று - அது உற்சவதினமென நினைத்து, விழா போர் புரி வேந்தர் - தளர்ச்சியடையாது யுத்தத்தைச் செய்யும் அரசர்களில்,

பொன் அவிர் மாமுடி வணக்கி விழாதிருப்பார்கள் யார் - (தங்கள் தங்கள்) அழகு விளங்கிய முடியை வணங்கித் தெண்டனிடாதவர்கள் எவர்கள்? (யாவருந் தெண்டனிடு வார்கள் என்றபடி).

கருத்து. வன்னியர்கள் தேவர்கள் பூமாரி பொழிய இரதமூர்ந்து வருவார்ர்ளானல் அதுதேவ உற்சவதின மெனநினைத்துவேந்தர்கள் எல்லோரும் தமது இரத்தின கிரீடங்கொண்ட முடியை வணக்கித் தெண்டனிடுவார்கள் என்பதாம்.

இதுவும் அது.

செங்கதிரோ னோராழித் தேரேறித் திகழ்வதுவும்
அங்கசன்மா ருதத்தேரூர்ந் தடலாண்மை செலுத்துவதும்
துங்கமனு நெறிபிழையாத் துகளறுவன் னியவீரர்
அங்கிரத மிவர்திறத்துக் கணுவளவு மிணையாமோ. (28)

(இ - ள்.) துங்கமனு நெறிபிழையா - உயர்வாகிய (தங்கள் குல முதல்வர்களால் சொல்லியிருக்கிற) மனு முறை வழிகளிலே தவருத, துகள் அறு வன்னியவீரர் - குற்றமற்ற வன்னியவீரர்கள், அங்கி ரதம் இவர் திறத் துக்கு - அக்கினி இரதம் ஏறிச் செலுத்தும் ஆண்மைக்கு, செங்கதிரோன் ஓர் ஆழித்தேர் ஏறித் திகழ்வதும் - சூரியன் ஒற்றைச் சக்கிரத்தையுடைய இரதத்திலேறிச் செலுத்துவ தும், அங்கசன் மாருதத்தேர் ஊர்ந்து அடல் ஆண்மை செலுத்துவதும் - மன்மதன் தென்றல்தேரேறி (நடத்தி) மிக்க ஆண்மையைக் காட்டுவதும் (ஆகிய இவைகளெல் லாம்) அணு அளவும் இணையாமோ - அணுத்துணையேனும் ஒப்பாகுமா? எ-று.

கருத்து. வன்னியர்கள் அக்கினி இரதத்துக்குச் சூரி யன் இரதமும், மன்மதன் இரதமும் கொஞ்சமேனும் ஒப் பாகா என்பதாம்.

இது வரையில் படையைக் கூறினவர் இனி அரண் கூறிஞராயினர்.

அரண்.

அரண் என்பது:—கோட்டை. அது படைக்கு ஆதாரமாதலின், இங்கே படைக்குப் பின்வைத்து நீரரண், மதிலரண், மலையரண், காட்டரண் என நான்கனுள் நீரரண் மதிலரண் இவ்விரண்டையும் அகழியாகவும், மற்றையவை அகத்தும்புறத்தும் நிற்றலால் அவைகளைப்பொதுவில் அரணாகவும் இரண்டாக்கி இரண்டுகவிகளால் கூறியிருக்கிறார் என்க. நால்வகையரணை தி-கஉ-வ-தி- "மலையரண் காட்டரண் மதிலர ணீரரணையது சிறப்பினால் வகையானே" என்னும் சூ-வது சூ-க. நாயனாரும் "மணிநீரு மண்ணு மலையும் அணிநிழற் - காடுமுடைய தரண்" என்றார் என்க.

கோட்டை, அரண், காவல் என்பன ஒரு பொருட் சொற்கள்.

அகழின் சிறப்பு.

அகழின் சிறப்பென்பது:—மதில்சூழ்கிடங்கின் பெருமை. அது படைகளுக்கு ஆதாரமாக மதிலைச் சூழ்ந்திருத்தலின், இங்கே படையுறுப்பாகிய தேர்ப்படைச் சிறப்பைத்தழுவி அரணுக்கு முதலில் வைத்துக் கூறினார்.

பேராழிச் செலுத்திவயம் பெறவனியர்க் கிடமாகிக்
கூராழிப் பரனகரைக் குறைசொல்கம்பை நகருடுத்திட்
டோராழித் தேரிருபா லொதுங்கவுய ரெயிற்புடைசூழ்
சீராழி யாமகழின் சிறப்பெவரே யுரைப்பவரே. (29)

(இ - ள்.) பேர் ஆழி செலுத்தி வயம்பெற - பெரிய ஆக்கினை சக்கரத்தைச் செலுத்தி (உலகு) வசமாகும் வண்ணம், வன்னியர்க்கு இடம் ஆகி - வன்னியர்களுக்கு ஆதார தானமாகி, கூர் ஆழிப்பரன் நகரை, (விஷ்ணு உலகமாகிய) வைகுண்டத்தையும், குறை சொல் - இகழத்தக்கச் சிறப்பு வாய்ந்த, கம்பை நகர் உடுத்திட்டு - காஞ்சி நகரமானது (தன்னை ஆடையாக) உடுத்தப் பெற்று, ஓர் ஆழித் தேர் இருபால் ஒதுங்க அயர் எயில் புடை சூழ்-ஒற்றைச் சக்கிரத்தையுடைய சூரியனது தேர் இருபுறமும் விலகும்படி. கட்டப்பட்டிருக்கின்ற மதிலைச்சூழ்ந்த அகழியானது,

சீர் ஆழி ஆம் - விசாலமான சமுத்திரமே (ஆகும் ஆகையால்,) அகழின் சிறப்பு உரைப்பவர் எவரே - அவ்வகழியின் சிறப்பைச் சொல்லத்தக்கவர் யாவரே. எ-று.

கருத்து. காஞ்சிபுரியின் மதிலைச்சூழ்ந்த அகழியானது சமுத்திரமே ஆம் என்பதாம்.

அரண் சிறப்பு.

அரண் சிறப்பென்பது:—காவலின் பெருமை. அது அகழியுளடங்கிய காடு மலையாதலின் இங்கே அகழின் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

சரண்புகுந்தீ சனைச்சான்றோர் தம்முயிரைக் காப்பரெனும்
வரம்புளதங் கதுவியப்பின் மருவியதோர் வழக்கன்றால்
முரண்புகுதோட் செருநர்வரின் மூதுலகோர் வன்னியர்தம்
அரண்புகுந்து தம்முயிர்காத் தமர்ந்திருப்ப ராதலினே. (30)

(இ-ள்.) முது உலகோர் - பழமையான உலகத்தவர்கள், முரண்புகுதோள் செருநர் வரின் - வலிய தோளினையுடைய பகைவர்கள் வருவார்களானால், வன்னியர் தம் அரண்புகுந்து - வன்னியர்களது அரணிற் புகுந்து, தம் உயிர்காத்து அமர்ந்திருப்பார் - தங்களுயிரைக் காப்பாற்றிக்கொண்டு தங்கியிருப்பார்கள், ஆதலின் - ஆதலால், சான்றோர் - பெரியோர்கள், ஈசனைச் சரண்புகுந்து தம் உயிரைக் காப்பர் எனும் வரம்பு உளது - கடவுளை வழிபட்டுத் தங்களுயிரைக் காத்துக் கொள்வார்களென்று சொல்லும் வரம்பு ஒன்றிருக்கிறது, அங்கு அது - அஃதானது, (யாவருக்கும் சாக்ஷியளவையின்மையால்), ஓர் வியப்பின் மருவிய வழக்கு அன்று - ஓர் ஆச்சரியத்தைப் பொருந்திய வழக்கினையுடையதல்ல எ-று.

கருத்து. உலகத்தவர்களுக்குப் பகைநேரிட்ட காலங்களில் வன்னியர்களது அரணைச் சேர்ந்தே தங்களுயிரைக் காத்துக்கொள்ளுகிறார்கள் என்பதாம்.

இதுவரையில் அரண் கூறினவர் இனி அரசு கூறினாராயினர்.

அரசு.

அரசென்பது:—இராஜ்ஜிய பாரத்தன்மை. அது அரணையுடையதாதலின், இங்கே அரணை அடுத்துவைத்துக் கொடி, அரசாட்சி மண்டபம், சிங்காதனத் திருத்தல், முடிதரித்தல், புயசேயூரகிரீடம், குடை, செங்கோல் வண்மை, செங்கோல் நடத்தல், அறத்திநெறி, ஆக்கினைச் சக்கிரம், தொழிநெறி பிறழாமை, முத்திரை மோதிரம், துட்டநிக்கிரகம், வாயில்காத்தல், தொழுவல் முதலியவை செல்வாக்கு புகழ், மாசறகற்றல், பெருந்தன்மை, இதயவண்மை, இராஜ சமுகம், பதியிருத்தல், மன்னர் சூழ்தல், மொழி தவறாமை, சாந்த முதலியவை, கொடைவளம், வள்ளறறன்மை, அடுத்தவர்க்குத் தாழ்வின்றெனல், உமையருள் பெற்றோரெனல், அஷ்ட ஐசுவரியம், தசாங்கம், அரசு, வில்லின் புகழ் கூறுதல், என முப்பத்து நான்கு சிறப்பாக முப்பத்தேழு கவிகளால் கூறினர். நாயனாரும் "அறனிழுக்காது அல்லவை நீக்கி மறனிழுக்கா - மான முடையது அரசு" என்றார் என்க.

அரசுக்குரிய சிறப்புகள் இங்ஙனம் கூறியவைகளையும் கூறாது விட்டிருப்பவைகளையும் ஸ்மிருதிபுராண விதிகாசாதிகளிலேயே தெரிந்துணர்க.

கோடிச்சிறப்பு.

கொடியின் சிறப்பென்பது:—கொடியின் பெருமை. அது அரசுக்கு வெற்றிக்குறியாக மதின் முதலிய அரண்களிற் றங்கலின், இங்கே அரணுறுப்பாகிய அரண் சிறப்பைத் தழுவி அரசுறுப்புக்கு முதலில் வைத்துக் கூறினர்.

சுடர்க்கொடியும் வனக்கொடியுந் துகளில்வெற்றிப் புலிக்கொடியும்
அடற்புவிமுன் றினுந்தாமே யரசியற்றும் படிதாவக்
கடற்புவியி னிரந்தரமுங் கருணைபுரி தாயேபோல்
இடர்பகையி லாதுவன்ய ரெவ்வுயிரும் வளர்ப்பாரே. (31)

(இ-ள்.) கடல் புவியில் - கடலால் சூழப்பட்ட இவ் வுலகத்தில்,—வன்னியர்-வன்னியர்கள், சுடர்க்கொடியும்- அக்கினிக் கொடியும், ஐவனக் கொடியும் - பஞ்சவன்னப் பிருதும், வெற்றிப் புலிக் கொடியும் - வெற்றியைத் தரா நின்ற புலிக்கொடியும், அடர்புவி மூன்றினும் தாமே அரசு இயற்றும்படி தாவ - நெருங்கிய மூன்று உலகத்தி னும் தாமே அரசு புரியும்படி தாவாநிற்க, நிரந்தரமும் கருணைபுரிதாயே போல் - எப்பொழுதும் அருளோடும் அன்பு பாராட்டும் தாயைப் போலும், எவ்வுயிரும் இடர் பகை இலாது வளர்ப்பார்-எந்த உயிரையும் சிறுமைபகை யில்லாது வளரும்படி செய்கிறார்கள் எ-று.

கருத்து. வன்னியர்கள் கொடிகள் மூன்று உலகத்தை யும் தாவிக்கொண்டிருக்கும்படி உலகத்தைக் காக்கின்றார் கள் என்பதாம்.

அரசாட்சிமண்டபச் சிறப்பு.

அரசாட்சி மண்டபச் சிறப்பென்பது:—அரசாளு கைக்கு வீற்றிருக்கும் மண்டபத்தின் பெருமை. அது கொடிகளைக் கொண்டிருத்தலின், இங்கே கொடிச் சிறப் புக்குப் பின்வைத்துக் கூறினார்.

அண்டர்மலர் மழைசொரிய வந்தணர்பல் லாண்டிசைப்பத்
தண்டனிட்டுப் பொருநதலருஞ் சயங்கூற வன்னிமன்னர்
கொண்டபசும் பொன்வேய்ந்து குலவுபல மணிகுயிற்றும்
மண்டபத்தில் வீற்றிருக்கை மண்டபம்பெற் றிடுபேறே. (32)

(இ-ள்.) வன்னிமன்னர் - வன்னியரென்னும் அரசர் கள், அண்டர் மலர் மழைசொரிய - தேவர்கள் பூமாரி பொழியவும், அந்தணர் பல்லாண்டு இசைப்ப - பிராமணர் கள் ஆசீர்வாதஞ் சொல்லவும், பொருநதலரும் தண்டன் இட்டுச் சயம் கூற - பகைவர்களும் நமஸ்காரஞ்செய்து (நின்றுகொண்டு) ஜயாவிஜயீபவா வென்று சொல்லவும், கொண்டபசும்பொன் வேய்ந்து - (அதிக விலை) கொண்ட பசும்பொன்னினால் கட்டி, குலவுபலமணி குயிற்றும்-விளங்

கும்பல இரத்தினங்களைப் பதிக்கப் பெற்றிருக்கிற, மண்டபத்தில் வீற்றிருக்கை - அரசாட்சி மண்டபத்தில் கொலு வீற்றிருத்தலானது, மண்டபம் பெற்றிடுபேறு - அம்மண்டபம் பெற்ற தவப்பயனாகும். எ-று.

கருத்து. வன்னியர்கள் அரசாட்சி மண்டபத்துள் கொலுவீற்றிருக்கைக்கு அம்மண்டபம் தவஞ்செய்திருத்தல் வேண்டும் என்பதாம்.

சிங்காதனத்திருத்தற்சிறப்பு

சிங்காதனத்திருத்தற் சிறப்பென்பது:—சிங்காதனத்திற் றங்குதலின் பெருமை. அது அரசாட்சி மண்டபத்துள் தங்குதலின் இங்கே அரசாட்சி மண்டபச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தங்காத னன்பனிறை யென்ன மாதர் சந்ததமுந் தொழுதெழுவார் சலியா தாகம், தங்காத னனையநட்பிற் சிறந்தே யாவுந் தகுபுலியு மோர்துறையிற் றண்ணீர் மாந்தும், சிங்காத னம்பசும்பொன் மணிதூ சாதி தெளிவுறுவே தியர்க்குதவும் வன்னி மன்னர், சிங்காதனத்தின்மிசை யமர்ந்து நாளுந் திகழரசு செயுங்கருணைச் செயலாலன்றே. (33)

(இ - ள்.) தெளிவு உறு வேதியர்க்கு (பிரமநிஷ்டையில்) தெளிந்த பிராமணர்களுக்கு, சிங்காது-குறையாது. அனம் பசும் பொன் மணிதூசு ஆதி உதவும் வன்னிமன்னர் - அன்னம் பொன் இரத்தினம் ஆடை முதலியவைகளைக் கொடுக்கின்ற வன்னிய அரசர்கள், நாளும் சிங்காதனத்தின்மிசை அமர்ந்து திகழ் அரசு செயும் கருணைச் செயலால்-என்றும் சிங்காதனத்தின்மேலமர்ந்து விளங்க அரசுநடத்துகின்ற அருட் செய்கையால், மாதர் அன்பன் தம் காதன் இறை என்ன - மகளிர்கள் அன்புக்குரியனாகிய தமது நாயகனைத் தெய்வமென நினைத்து, சந்ததமும் தொழுது எழுவார் - எப்பொழுதும் வணங்கியெழுவார்கள், ஆவும் புலியும் - பசுவும் புலியும், ஆகம் சலியாது

தங்கு ஆதன் அனைய நட்பில் சிறந்து - உடல் கெடாவண்ணந் தங்கும் உயிரைப்போலும் நட்பிற் சிறந்ததாகி, தகு ஓர் துறையில் தண்ணீர் மாந்தும் - தகுதியினையுடையனவாகக் கூடி ஒரு துறையில் தண்ணீர் குடிக்கும். எ-று. அன்றே - அசை.

காந்தன் என்பது காதன் என இடை குறைந்து நின்றது.

கருத்து. வன்னியர்கள் சிங்காதனத்தின்மேல் அமர்ந்திருத்தலால், மாதர்களுக்குக் கற்பும், உயிர்களுக்கு நட்பும் கெடாதிருக்கின்றன வென்பதாம்.

முடிதரித்தற்சிறப்பு.

முடிதரித்தற் சிறப்பென்பது:—கிரீடந் தரித்தலின் பெருமை. அது சிங்காதனத்தில் அமர்ந்தே யாதலின், இங்கே சிங்காதனத்திருத்தற் சிறப்புக்குப் பின்வைத்து இரண்டு கவிகளால் கூறினர்.

கோச்சகம்.

தன்முடிமேற் புவிதாங்குந் தனியரவிற் றுயில்வோற்கும்
சொன்முடிவாம் பரமனுக்குந் தோன்றுமிளைப் பொழித்திடுவார்
பொன்முடிசென் னியிற்றாங்கிப் புகழ்வனிய வரசரொன்னார்
முன்முடியக் குடிதழைய முதுலகம் புரத்திலினே. (34)

(இ-ள்.) புகழ் வனிய அரசர் - யாவரும் புகழாநின்ற வன்னியரென்னும் அரசர்கள், பொன்முடி சென்னியில் தாங்கி - அழகிய (இரத்தின கிரீடத்தைத்) தலையிற் சூடி, முன் ஒன்னார் முடிய - முதலில் பகைவர்கள் அழியவும் குடி தழைய - குடிகள் தழையவும், முது உலகம் புரத்தலின் - பழமையான இவ்வுலகத்தைக் காத்தலால், தன் முடிமேல் புவிதாங்கும் - தனது முடியின்கண் பூமியை வைத்துத் தாங்குகின்ற, தனி அரவில் துயில்வோர்க்கும்- ஒப்பற்ற ஆதிசேஷ சயனத்தில் அறிதுயில் கொள்ளும் விஷ்ணுவுக்கும், சொல் முடிவு ஆம் பரமனுக்கும் - சொற்

களின் முடிவிடப் பொருளாகிய சிவபிரானுக்கும், தோன்றும் இளைப்பு ஒழித்திடுவார் - காத்தல், அழித்தல் என்னுந் தொழில்களால்) உண்டாகும் சிரமத்தை நீக்குகிறார்கள், எ - று. ஏ-அசை.

கருத்து. வன்னியர்கள் முடிதரித்து விஷ்ணு மூர்த்திக்கும், சிவபிரானுக்கும் உண்டாகும் சிரமத்தை நீக்குகிறார்கள் என்பதாம்.

இதுவும்அது.

தேவர்முடி திங்கண்முடி சேணுரு மிரவிமுடி
மூவர்முடி முனிவர்முடி மும்மையுல கினில்வாழ்வோர்
யாவர்முடி யும்விளங்கு மென்றுமொரு முடிவில்லாக்
கோவிறைவன் னியர்முடிமேற் குலவுமுடி விளங்கலினே. (35)

(இ - ள) என்றும் ஒரு முடிவு இல்லா - எக்காலத்தும் ஒரு விசத்தினாலும் அழிவில்லாத, கோ இறை வன்னியர் முடிமேல் - இராஜாதி ராஜர்களாகிய வன்னியர்களது தலையின்மீது, குலவு முடி விளங்கலின் -விளங்குகின்ற (இரத்தின) கிரீடந் தங்குதலால், தேவர் முடி - தேவர்களது முடிகளும், திங்கள் முடி - சந்திரனது முடியும், சேண் ஆரும் இரவிமுடி-ஆகாயத்திலுலாவும் சூரியனது முடியும், மூவர் முடி - (பிர்மா, விஷ்ணு, ருத்திரன் ஆகிய) மூவருடைய முடிகளும், முனிவர் முடி - முனிவர்களது முடிகளும், மும்மை உலகினில் வாழ்வோர்யாவர் முடியும் - (சுவர்க்க, மத்திய, பாதாளமென்னும்) மூன்றுலகத்திலும் (முற்கூறியவர்களை யல்லாத வேறே) வாழப்பட்ட யாவர்களுடைய முடிகளும், விளங்கும் - அழியாது தங்குவனவாகும் எ-று.

கருத்து. வன்னியர் சிரத்தில் கிரீடம் விளங்கத் தேவர்கள் முடிகளும் சந்திரன் முடியும், சூரியன் முடியும், பிரமா விஷ்ணு ருத்ரன் ஆகிய மூவர் முடிகளும், முனிவர்கள் முடிகளும், மூன்றுலகத்தவர்கள் முடிகளும், விளங்கும் என்பதாம்.

புயகேயூர கிரீடச்சிறப்பு.

புயகேயூரகிரீடச்சிறப் பென்பது.—வாகு வலயத் தோடும் முடிவிளங்கலின் பெருமை. அது முடிதரித்த பிறகாதலின், இங்கே முடிதரித்தற்சிறப்புக்குப்பின் வைத்துக் கூறினர்.

இயனடுநீண் டிருபுடைதாழ்ந் திடவமைத்த லணைமூன்றின்
அயன்முதன்மூ வருந்தொழின்மூன் றுங்கியற்ற வமர்ந்ததுபோல்
வயமுறுவன் னியவரசர் வடவரைபோல் வீறியதிண்
புயமுடியு மணிமுடியும் பொருந்தியது புதுமைத்தே. (36)

(இ-ள்.) வயம் உறு வன்னிய அரசர் - விஜயத்தைக்கொண்ட வன்னியரென்னும் அரசர்களது, வடவரைபோல் வீறியதிண் புயமுடியும் - மகாமேருவைப்போலும் பணைத்த வலிமையைக் கொண்ட புயகேயூரங்களும், மணிமுடியும் - இரத்தினக் கிரீடமும், இயல் நடுநீண்டு - இயல்பினுல் மத்தியபாகம் உயர்ந்து, இருபுடை தாழ்ந்திட அமைதத - இரண்டு பக்கமும் தாழும்படி அமைக்கப் பட்டிருக்கிற, அணை மூன்றில் ஆங்கு-(சிரம்புயங்களாகிய) மூன்றுசனத்தினிடத்திருந்தே, தொழில் மூன்று இயற்ற - (ஆக்கல் காத்தல், அழித்தல் என்னும்) மூன்று தொழிலையும் செய்யும் பொருட்டு, அயன் முதல் மூவரும் அமர்ந்ததுபோல் பொருந்தியது - பிரமா விஷ்ணு உருத்திரன் ஆகிய மூவர்களும் அமர்ந்ததுபோல் பொருந்தியிருக்கின்றதானது, புதுமைத்து - ஆச்சரியப்படத்தக்கதாகும். எ-று.

கருத்து. வன்னியர்கள் தரிக்கும் புயகேயூர, கிரீடமானவை பிரமா, விஷ்ணு, உருததிரன் ஆகியமூவரும் சிருட்டி திதி சம்மாரம் என்னும் முத்தொழிலையும் முறையே நடத்த சிரம்புயங்களாகிய ஆசனங்களில் தங்கிப் பொருந்தியிருத்தலானது யாவரும் வியக்கத்தக்கதேயாம் என்பதாம்.

குடைச்சிறப்பு.

குடைச்சிறப்பென்பது:— சந்திரவட்டக் குடையின் பெருமை. புயகேயூர கிரீடந்தரித்த பிறகு நிழல்செய்ய அமைத்தலின், இங்கே புயகேயூர கிரீடச் சிறப்புக்குப்பின் வைத்துக் கூறினர்.

படையுடைய படிவேந்தர் பணிந்திடுவோர் மனுநீதி
நடைவருணச் சிரமநெறி நழுவாது காத்தெவர்க்கும்
விடையவன்ற னருள்பெற்ற வீரவன்னி மன்னர்கொற்றக்
குடைநிழலைத் தந்துகலிக் கோடைதணித் திடுவாரே. (37)

(இ-ள்.) படை உடைய படிவேந்தர் பணிந்திடுவோர் - (இரத கஜ துரக பதாதிகளென்னும் நான்கு வகைப்) படைகளைக் கொண்ட உலகத்து மற்றைய அரசர்கள் வந்து வணங்கும் பெருமையினையுடையாராகிய, விடையவன்றன் அருள்பெற்ற வீரவன்னிமன்னர் - சிவபிரானது அருளைப்பெற்ற வீரமுடைய வன்னியரென்னும் அரசர்கள், மனுநீதி நடை வருண ஆச்சிர தருமம் நழுவாது - மனுநீதி நடையினின்றும் வருணதருமமும் ஆச்சிரம தருமமும் கெடாது, எவர்க்கும் கொற்றக் குடை நிழலைத் தந்துகாத்து - யாவருக்கும் விஜய சந்திர வட்டக் குடைநிழலைக் கொடுத்துக்காத்து கலிகோடை தணிந்திடுவார் - வறுமை என்னும் வெப்பத்தைத் தணித்து விடுகிறார்கள். எ-று.

ஆச்சிரமதருமமென்றது. ஆச்சிரதருமமென ஈறு குறைந்து நின்றது.

கருத்து. வன்னியர்கள் யாவருக்கும் விஜய சந்திர வட்டக் குடைநிழலைக்கொடுத்து, வருணச்சிரம தருமம நழுவாது காத்து, கலியென்னும் கோடையைத் தணித்து விடுகிறார்கள் என்பதாம்.

செங்கோற்சிறப்பு.

செங்கோற் சிறப்பென்பது:— ஆணை நடத்தும் கோலின் பெருமை. அது குடைநிழலிற் றங்கியே கைக்

கொள்ளுதலின் இங்கே குடைச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வெங்கோப மதம்பொழியும் விண்ணவர்கோ னும்பனிகர் வேழமுண்டோ, பைங்கோலஞ் சேர்கனகப் பஞ்சதரு வனையபா தபமற்றுண்டோ, இங்கோத வான்சுரபிக் கிணையுண்டோ வன்னிமன்னரெனுமேன் மக்கள், செங்கோலுக் கெதிராங்கோல் செகதலத்திலொன்றுண்டோ செப்பு வீரே. (38)

(இ - ள்.) வெம் கோபமதம் பொழியும் விண்ணவர் கோன் உம்பல்நிகர் வேழம் உண்டோ-வெவ்விய கோபத்தோடும் மதம் பொழிதலையுடைய இந்திரனது வெள்ளையானையை ஒப்பாகும் யானை வேறிருக்கிறதா? பை கனகக் கோலம் சேர் பஞ்ச தரு அனைய பாதபம் மற்று உண்டோ-பசும்பொன்னிறங் கொண்ட ஐந்தருக்களை ஒப்பாகும் தரு வேறு இருக்கிறதா? இங்கு ஓது அ வான் சுரபிக்கு இணை உண்டோ - இவ்வியல்பாகவே சொல்லப்படுகிற தெய்வப் பசுவாகிய அக்காமதேனுவை ஒப்பாகும் (பசுவேறு) இருக்கிறதா? (என்பபோல), சகதலத்தில் - பூதலத்தின்கண், மேன் மக்கள் எனும் வன்னிமன்னர் - மேன்மக்களென்று யாவரும் சொல்லாநின்ற வன்னியரென்னும் அரசர்களது, செங்கோலுக்கு எதிர் ஆம் கோல் ஒன்று உண்டோ - செங்கோலை ஒப்பாகுங் கோல்வேறு வொன்று இருக்கிறதா?, செப்புவீர் - சொல்லுவீர்களாக. எ-று.

கருத்து. வன்னியர்கள் செங்கோலே உலகத்துக்கு முதன்மையுடைய தென்பதாம்.

குடிகள் யாவரும் செங்கோலை தானோக்கவேண்டுமென்பதற்கும், தருமத்துக்கு ஆதி என்பதற்கும் நாயனர் "வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன் - கோனோக்கி வாழுங் குடி" என்றதனாலும், "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்" என்றதனாலும் உணர்க. மற்றைய கோல்களாவன தீக்கடை

கோல், நிறைகோல், தாற்றுக்கோல் இவைகள். அடுத்த ௩௬-வது கவியிற் காண்க.

செங்கோல்வண்மைச்சிறப்பு.

செங்கோல் வண்மைச் சிறப்பென்பது:— ஆணை செலுத்துங் கோல்வளத்தின் பெருமை. அது செங்கோலைக் கைக்கொண்டபிறகு வளந் தெரிதலின், இங்கே செங்கோல் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

கோச்சகம்.

வீரசம்பு முனிவேள்வி விளங்கவரு முடிவேந்தர்
சீர்மருவு கரத்தேந்து செங்கோலின் றிறத்தானே
நேரறுதீக் கடைகோலு நிறைகோலு நீடுலகி
லேரடரு முழுகோலு மிடரின்றி யிருப்பதுவே. (39)

(இ - ள்.) வீரசம்பு முனிவேள்வி விளங்க வருமுடி வேந்தர் - வீரத்தைக் கொண்ட சம்பு விருடி யாகத்தில் உலகு விளங்கும்படி அவதரித்த மகுட மன்னர்களது, சீர்மருவு கரத்து ஏந்து செங்கோலின் திறத்தால் - சிறப்புப் பொருந்திய கையினிடத்து ஏந்தா நின்ற செங்கோல் வண்மையால், நேர் அறு தீக்கடைகோலும் - (பிராமணர்களுக்குரிய) ஒப்பில்லாத தீக்கடைகோலும், நிறைகோலும்-(செட்டிகளுக்குரிய) தராசுக் கோலும், ஏர் அடரும் உழுகோலும் - ஏரை நடத்துகின்ற (வேளாளர்களுக்குரிய) தாற்றுக்கோலும், இடர் இன்றி இருப்பது - கெடுதலில்லாமலிருப்பதாகும். எ-று.

கருத்து. வன்னியர்களது செங்கோல் வண்மையால் பிராமணர்களுக்குரிய தீக்கடைகோலும், செட்டிகளுக்குரிய நிறைகோலும், வேளாளர்களுக்குரியதாற்றுக் கோலும் இடரில்லாது நிற்கின்றன என்பதாம்.

செங்கோனடத்தற்சிறப்பு.

செங்கோ னடத்தற் சிறப்பென்பது:— ஆணைக் கோலை நடத்துதலின் பெருமை, அது செங்கோல் வளத்

தோடும் ஒற்றுமையுடைய தாதலின், இங்கே செங்கோல் வண்மைச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

சீராரும் வன்னிமன்னர் செங்கோன்மை செலுத்துதலால்
சோராது சுரர்க்கும்பூ சுரர்க்குமிகு சிறப்புண்டாம்
நீராரும் புவியின்மநு நெறிதவறு தென்பதன்றி
யாராலும் பழுதுரைக்க லாமோசொல் வல்லீரே. (40)

(இ - ள்.) சொல் வல்லீர் - புலவீர்காள், நீர் ஆரும் புவியில் - சமுத்திரம் சூழ்ந்த உலகத்தில், வன்னி மன்னர் - வன்னிய ரென்னும் அரசர்கள், சீர் ஆரும் செங்கோன்மை செலுத்துதலால் - சிறப்புப் பொருந்திய (தமக்குரிய) செங்கோலை நடத்துகின்றதனால், சுரர்க்கும் சோராது - தேவர்களுக்கும் வலி குறையாது, பூசுரர்க்கும் மிகு சிறப்பு உண்டாம் - பிராமணர்களுக்கும் மிக்க சிறப்பு உண்டாகும், (ஆதலால் இவர்கள் ராஜ்ஜியத்தில்) மனு நீதிநெறி தவறாது என்பது அன்றி - மனுமுறை வழியினின்றும் கெடாது என்னுஞ் சொல் நிலைத்திருக்குமே யல்லது, யாராலும் பழுது உரைக்கல் ஆமோ - யாவராலும் பழுதுகள் சொல்லலாகுமா, எ-று.

கருத்து. வன்னியர்கள் செங்கோல் நடத்தலால் மனுமுறை வழிதவறு திருக்கின்றது என்பதாம்.

அறத்தினெறிச்சிறப்பு.

அறத்தினெறிச் சிறப்பென்பது :—தரும வழியின் பெருமை. அது செங்கோல் நடத்தலால் உண்டாதலின், இங்கே செங்கோனடத்தற் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தாரேந்து புயவேந்தர் தழலிடைவந் தவதரித்தோர் தனுவான் மிக்க, சீரேந்து மறத்தினெறி திறம்பாது நிற்கின்ற செயலா லன்றே, காரேந்திச் சொரிமழையுங் கலைமறையும் வாணிபமு மடவார் கற்பும், ஏரேந்து மவர்வாழ்வு மிடரின்றி நிற்பநன்றி யென்கொண் டம்மா.

(இ - ள்.) தழல் இடைவந்து அவதரித்தோர் - அக்கினியினிடையே வந்து தோன்றியவர்களாகிய, தனுவால் மிக்கதார் ஏந்து புயவேந்தர் - வில்வலியால் மிகுந்த மாலையைத் தரிக்கின்ற புயத்தினையுடைய அரசர்கள், சீர் ஏந்தும் அறத்தின் நெறி திறம்பாது நிற்கின்ற செயலால் - சிறப்பினையுடைய தருமத்தின் வழிகெடாது நிற்கின்ற செயலினால், கார் ஏந்தி சொரி மழையும் - மேகத்தினாலே சுமந்து பொழிகின்ற மழையும், கலைமறையும் - (பிராமணர்களது) கலையாகிய வேதமும், வாணிபமும் - (செட்டியர்களது) வியாபாரமும், மடவார் கற்பும் - பெண்களது பதிவிரதா நிலைமையும், ஏர் எந்தும் அவர் வாழ்வும்-ஏரை நடத்தி ஜீவிக்கின்றவர்களாகிய (வேளாளர்களது) வாழ்வும், இடர் இன்றி நிற்பது - இடர் இல்லாது நிலை பெறுகின்றது, அன்றி என்கொண்டு - வேறெதைக் கொண்டு (சொல்வீர்களாக.) எ-று.

கருத்து. வன்னியர்களது தரும வழியினால் மேகத்தினால் சுமந்து பொழியு மழையும், பிராமணர்களது கலையாகிய வேதமும், செட்டியர்களது வியாபாரமும், பெண்களது பதிவிரதா தருமமும், வேளாளர்களது உழவாகிய வாழ்வும் இடரில்லாது நிலைத்திருக்கின்றன என்பதாம்.

ஆக்கினைச்சக்கரச்சிறப்பு.

ஆக்கினைச் சக்கரச் சிறப்பென்பது :—ஆணையாச் சக்கிரத்தின் பெருமை. அது தருமவழியாற் செல்லுதலின், இஙகே அறத்திநெறிச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

வேறு.

ஊழிக் கிறைதண் கடல்வீழ்ந்தா னும்பற் கிறையந் தரமானன்
கோழிக் கிறைதன் ருதைவரை குறுகி னனெஞ் சறநாணி
மேழிக் கிறைமு விரண்டினனென்று மேவப் பெறுவன் னியர்செலுத்தும்
ஆழிக் கிறைநா டொறுமாரு தகிலமுழுதுங் காத்தல் கண்டே. (42)

(இ - ள்.) மேழிக்கு மூவிரண்டில் ஒன்று இறைமே வப் பெறும் வன்னியர் - மேழிக்கு (அதனையுடைய குடிக ளாகிய வேளாளர்களிடத்து) ஆறிலொரு கடமையைப் பொருந்தப் பெற்றுக்கொள்ளும் (சக்கிரவர்த்திகளாகிய) வன்னியர்கள், செலுத்தும் ஆழிக்கு - நடத்துகின்ற ஆக் கினைச் சக்கிரத்திற்கு, (அதன் கடமை) நாள்தோறும் இறை மாறாது - தினந்தோறும் கொஞ்சமேனுந் தவறாமல், அகி லம் முழுதும் காத்தல் கண்டு-உலக முழுமையையுங் காத் தலைப்பார்த்து (முன்னிற்பதற்கு), நெஞ்சு அறநாணி-மன மானது மிகவும் வெட்கத்தை யடைந்து, ஊழிக்கு இறை தண் கடல் வீழ்ந்தான் - சர்வ சம்மார காலத்துக் கரச னை (வடவாமுகாக்கினி யானவன்) குளிர்ச்சி பொருந் திய கடன்மத்தியிற் சேர்ந்தான், உம்பர்க்கு இறை அந்த ரம் ஆனான் - தேவர்களுக்கரசனை இந்திரன் சுவர்க்க லோகமாகிய அந்தரமாகிவிட்டான், கோழிக்கு இறை தன் தாதைவரைக் குறுகினான் - கோழிக் கொடியோனாகிய (சுப்பிரமணியனும்) தன் தகப்பன் மலையாகிய கைலைமலை போய்ச் சேர்ந்தான், எ-று.

கருத்து, வன்னியர்களது ஆக்கினைச் சக்கிரம் ஊழித் தீயும், இந்திரனும், சுப்பிரமணியனும் நாணும்படி தந்தொ ழிலை நடத்துகின்றது என்பதாம்.

இதில் "அறநாணி" என்றதனால் நடுவு நிலைமையால் அக்கினியும், வைபவத்தால் இந்திரனும், யுத்தவீரத்தால் சுப்பிரமணியனும் என்க.

தொழினெறிபிறழாமைச்சிறப்பு

தொழினெறி பிறழாமைச் சிறப்பென்பது:—தொழி நெறிகள் தவறாமையின் பெருமை. அது ஆணையாச் சக்கி ரத்தினு லாதலின், இங்கே ஆக்கினைச் சக்கிரச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

கற்பத் தொழியா மறைபயிலுங் கவின்மே வியவந் தணர்தொழி லும், சிற்பத் தொழில்வை சியர்தொழிலுந் தினமு முயர்முக் குலத்தோ

ரைப், பொற்பத் தொழுஞ்சூத் திரர்தொழிலும் புகலெத் தொழிலு முறை பிறழ்ந்தே, அற்பத் தொழிலா காதரசாள் வதுபண் ணுட்டார் தந் தொழிலே. (43)

(இ - ள்.) பண்ணுடர் தம்தொழில்-தமிழ் நாடரென்னும் (சேர சோழபாண்டிய) வன்னியர்களது தொழிலானது, கற்பத்து ஒழியாமறை பயிலும் கவின் மேவிய அந்தணர் தொழிலும - சர்வசம்மார காலத்திலும் அழிவில்லாத வேதங்களைப் பழகும் அழகு பொருந்திய பிராமணர்களது தொழில்களும், சிற்பத்தொழில் - சிற்பியரது தொழில்களும், வைசியர் தொழிலும் - செட்டியர்களது தொழில்களும், உயர்முக்குலத்தோரைப் பொற்பத்தொழும் சூத்திரர் தொழிலும் - (தம்மில்) உயர்ந்த (பிராமண க்ஷத்திரிய வைசியரென்னும்) மூன்று வருணத்தோர்களையும் விலக்ஷணத்தோடும் வணங்காநின்ற சூத்திரர்களது தொழில்களும், புகல் எத்தொழிலும்-இன்னும் சொல்லாநின்ற எவ்வகைப்பட்ட வேறு ஜாதியர்களது தொழில்களும், தினமும் - எந்நாளும், முறைபிழழ்ந்து - (அவரவர் வரன்) முறையினின்றுந்தவறி, அற்பத்தொழில் ஆகாது- அற்பத் தொழிலாகப் போய்விடாது, அரசு ஆள்வது - அரசாளுவதாகும் எ-று, ஏ-ஆசை.

கருத்து. வன்னியர்களது தொழிலானது பிராமணர்களது தொழில்களும். சிற்பியர்கள் தொழிலும், செட்டியர்கள் தொழில்களும், வேளாளர்கள் தொழில்களும், இன்னும் மற்றைய யாவருடைய தொழில்களும் கெடா வண்ணம் அரசாள்வது ஆகும் என்பதாம்.

முத்திரைமோதிரச்சிறப்பு

முத்திரை மோதிரச் சிறப்பென்பது:—முத்திரை மோதிரத்தின் பெருமை. அது தொழி னெறி பிறழாமலாளுந்தகைமையோடுந் தரித்தலின், இங்கே தொழினெறி பிறழாமைச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

கோச்சகம்.

எத்திசைமன் னவரரணு முத்திரிக்கு மீதன்றிப்
பத்திமையி லார்க்கந்தப் பரனுலகு முத்திரிக்கும்
சத்தியம்பொய் யாதுவைகிச் சகம்புரக்கும் வன்னியர்கைம்
முத்திரையா ழிக்குநிகர் மூதக்கீர் மொழியீரே. (44)

(இ - ள்.) மூதக்கீர் - மேலாம் அறிவினையுடையீர், சத்தியம் பொய்யாது வைகி - சத்தியத்தை யொளிக்காமலிருந்து, சகம் புரக்கும் வன்னியர் - உலகத்தைக்காவல் செய்யும் வன்னியர்களது, கைமுத்திரை ஆழிக்கு-கையில் விளங்குகின்ற முத்திரை மோதிரமானது, எத்திசை மன்னவர் அரணும் உத்திரிக்கும்-எத்திசைகளிலுமுள்ள அரசர்களது நால்வகையரணும் நிலைபெறச் செய்யும், இது அன்றி - இது வல்லாமலும், (அது) பத்திமை இலார்க்கு - அடங்கி நல்லொழுக்கத்தில் நடவாதவர்களுக்கு, அந்தப் பரன் உலகு முத்திரிக்கும் - அந்தப் பரனுலகு (சித்தியாகாத வண்ணம் அடைத்து.) முத்திரை செய்யும் (ஆகையால்), நிகர் மொழியீர் - ஒப்பு சொல்வீர்களாக. எ-று. ஆழிக்கு-வேற்றுமை மயக்கம்.

கருத்து வன்னியர்களின் முத்திரை மோதிரமானது பலதிக்குகளிலும் உள்ள அரசர்களின் அரண்களை நிலைக்கச் செய்வதோடும், பக்தியில்லாதவர்கள் சுவர்க்கம் அடையாதபடி அச்சுவர்க்கக் கதவை யடைத்து முத்திரையிடும் என்பதாம்.

துட்டநிக்கிரகச் சிறப்பு.

துட்ட நிக்கிரகச் சிறப்பென்பது :—துஷ்டர்களை யழித்தலின் பெருமை. அது முத்திரை மோதிரந்தரிக்கும் ஆண்டகையார்க்காதலின், இங்கே முத்திரை மோதிரச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தீட்டார் தமையுஞ் சிவநிந்தை செய்வோ ரையுஞ்செங் கோன் முறையேர், பூட்டார் தமையும் பொய்யரையும் போர்வெங் களத்துப் போந்துபுறம், காட்டார் தமையுங் கள்வரையுங் கலிதீர்ந் திடக்காட் டியவறத்தை, நாட்டார் தமையு நானிலத்தி னுட்டார் நவில்பண் ணுட்டாரே. (45)

(இ-ள்.) நானிலத்தில் - இவ்வுலகத்தில், நவில் பண்ணுட்டார் - யாவராலும் சொல்லுகின்றதமிழ் நாடரென்னுஞ் சேர சோழ பாண்டிய வன்னியர், தீட்டார் தமையும் - ஒழுக்க மில்லாதவர்களையும், சிவ நிந்தை செய்வோர்களையும் - தெய்வ நிந்தை செய்பவர்களையும், செங்கோன் முறை ஏர்பூட்டார் தமையும் - செங்கோன் முறைப்படி வழக்கம் போல ஏர்பூட்டாத வேளாளர்களையும், பொய்யரையும் - பொய்சொல்பவர்களையும், வெம்போர்க் களத்து போந்து - வெவ்விய யுத்தகளத்துக்கு வந்து புறங் காட்டார் தமையும் - முதுகு காட்டாத பகைவர்களையும், கள்வரையும் - திருடர்களையும், கலிதீர்ந்திடக் காட்டிய அறத்தை நாட்டார் தமையும் - (ஏழைகளுக்கு) வறுமை தீர உண்டாக்கிய தருமத்தைக் கெடுத்தவர்களையும், நாட்டார் - தங்கும்படி இடம் கொடார். எ-று.

கருத்து. வன்னியர்கள் ஒழுக்கமில்லாதவர்களையும், தெய்வ நிந்தை செய்பவர்களையும், முறைமையாக ஏருழாத வேளாளர்களையும், பொய்யர்களையும், எதிர்த்த பகைவர்களையும், திருடர்களையும், தருமத்தைக் கெடுத்தவர்களையும் இவ்வுலகத்தில் வைக்கமாட்டார்கள் என்பதாம்.

வாயில்காத்தற்சிறப்பு

வாயில் காத்தற் சிறப்பென்பது:—வாயில் காத்தலின் பெருமை. அது துஷ்ட நிக்கிரகஞ் செய்யுந் தரமுடையார்க்கே அமைதலின், இங்கே துஷ்ட நிக்கிரகச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

கோச்சகம்.

கடிந்தாரைக் களைவனியர் காப்பாளர் சமர்க்களத்தில்
மடிந்தாலுஞ் சுவர்க்கமுண்டாம் வாயில்காத் தவரடியில்
படிந்தாலு மரசுண்டாம் பகர்வதெவன் பாரிடத்தில்
விடிந்தால்வேந் தன்வாயின் மேவாதார் யாருளரே. (46)

(இ-ள்.) பாரிடத்தில் - இவ்வுலகத்தில், கடிந்தாரைக் களைகாப்பாளர் வன்னியர் - துஷ்டர்களைச் சம்மரித்து (உலகத்தைக்) காக்கின்றவர்களாகிய வன்னியர்களது, சமர்க்களத்தில் மடிந்தாலும்-யுத்தகளத்தில் எதிர்த்து இறந்தாலும், சுவர்க்கம் உண்டாம் - சுவர்க்க பதவி உண்டாகும், (அன்றி) வாயில் காத்து அவர் அடியிற் படிந்தாலும் - (அரண்மனை) வாயிலைக்காத்து அவர்களது பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண்டிருந்தாலும், அரசு உண்டாம் - அரசாட்சி கிடைக்கும் (ஆகையால்) பகர்வது எவன் - (இவர்களைப்பற்றி வேறே பன்னிப்பன்னி) சொல்வது என்ன இருக்கிறது, விடிந்தால் வேந்தன்வாயில் மேவாதார்யார் உளர்-சூரிய உதயமானல் அரசன் அரண்மனைவாயிலிற் சேராதவர்கள் யாவரிருக்கிறார்கள் (சொல்வீர்களாக) எ-று.

கருத்து. உலகத்தில் யாவர்களும் வன்னியர்களது வாயிற்படி காத்துக்கொண்டிருந்து உயிர்பிழைக்கின்றவர்களாகிறார்களென்பதாம்.

தொழுதன் முதலியசிறப்பு

தொழுதன் முதலிய சிறப்பென்பது:—தொழுஞ்செயலோர் முதலாயினோர் சூழ்ந்திருத்தலின் பெருமை. அது பதினெண் பகுதியோராய்ப் பக்கத்திலிருந்து உயிர்பிழைக்க வேண்டியவர்களைச் சொல்லுதலின், இங்கே வாயில் காத்தற் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

அணங்காற் றருவில் லேந்திமுறை யரசாள் வன்னிச் சயதரரை
வணங்கார் யார்கை கூப்பார்யார் வாரி சூழும் வையமிசை
இணங்கார் யார்நின் றேத்தார்யா ரேவற் பணிசெய் யார்யார்நன்
மணஞ்சார் முற்றங் காத்திருந்து வாழ்நாண் மகிழார் யார்யாரே. (47)

(இ-ள்,) வாரி சூழும் வையம்மிசை-சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில், அணங்கு ஆற்று அருவில் ஏந்தி - (பகைவர்கள், துஷ்டர்களுக்கு) அச்சத்தைக் கொடுக்கின்ற அருமையாகிய வில்லைத் தங்கள் கையினிடந்தாங்கி, முறை அரசு ஆள் வன்னிச்சயதரரை - பரம்பரையாக அரசை நடத்திவருகின்ற வன்னிய வீரர்களை, வணங்கார் யார் - வணங்காதவர் எவர்கள்? கைகூப்பார் யார் - கும்பிடாதவர்கள் எவர்கள்? இணங்கார் யார் - சிநேகத்தை விரும்பி யிணக்கஞ் செய்யாதவர்கள் எவர்கள்? நின்று ஏத்தார் யார் - சந்நிதியில் நின்றுகொண்டு துதிக்காதவர்கள் எவர்கள்? ஏவல் பணிசெய்யார் யார் - ஏவிய பணிவிடைகளைச் செய்யாதவர்கள் எவர்கள் ? நல்மணம் சார்முற்றம்காத்து இருந்து-நல்ல மங்கலத்தைச் செய்கின்ற அரண்மனை வாயிலில் காத்திருந்து, வாழ் நாண் மகிழார் யார் யார் - தங்களுயிரைக் காப்பாற்றிக் கொள்ளாதவர்கள் எவர்கள் எவர்கள்? எ-று.

கருத்து. இவ்வுலகத்தில் வன்னியர்களை வணங்காதவர்களும், கும்பிடாதவர்களும், சிநேகத்தை விரும்பி இணக்கஞ் செய்யாதவர்களும், துதிக்காதவர்களும், பணிந்து ஏவல் செய்யாதவர்களும், வாயில் காத்திருந்து உயிர் பிழைக்காதவர்களும், இல்லை என்பதாம்.

செல்வாக்கின்சிறப்பு

செல்வாக்கின் சிறப்பென்பது:—செல்வாக்கின் பெருமை. அதுதொழுதன் முதலிய அங்கமுடைமையால் பயன்படுதலின் இங்கே தொழுதன் முதலிய சிறப்புக்குப் பின் வைத்துக் கூறினர்.

கோச்சகம்

பாவசையு நாவலர்பால் பத்திமிக வைத்துதவும்
பூவசையு மணிமார்பர் புகழினுக்கோர் நிகரின்றுன்
மாவசையாப் பெருஞ்செல்வர் மாதிரங்காக் கும்வனியர்
நாவசைய நிரந்தரமும் நாடசையா திருந்திடுமோ. (48)

(இ-ள்.) பா அசையும் பாவலர் பால்மிகப் பத்தி வைத்து உதவும் - பாட்டுகளைச் சொல்லும் (நாவினை யுடைய) வித்வான்களிடத்து மிக்க அன்புவைத்து உதவு கின்ற, பூ அசையும் மணிமார்பர் - மாலைபுரளும் அழகிய மார்பினைக் கொண்டவர்களும், மா அசையாப்பெருஞ் செல்வர் - இலக்ஷுமி நீங்காத எல்லாச் செல்வங்களையு முடையவர்களும், மாதிரம் காக்கும் வனியர்-உலகத்தைக் காவல் செய்கின்றவர்களுமாகிய வன்னியர்களது, புகழி னுக்கு ஓர் நிகர் இன்று - கீர்த்திக்கு வொரு ஒப்புங் கிடையாது (ஆகையா லிவர்களது) நா அசைய - நாவா னது அசைய, நிரந்தரமும் நாடு அசையா திருந்திடுமோ- எப்பொழுதாகிலும் நாடசையா திருக்குமா? (சொல் வீர்களாக.) எ-று.

கருத்து. வன்னியர்கள் நாவசைய நாடசையும் என்ப தாம்.

இதில் பத்திவைத்தற்கு ஆதாரமாகிய இடம் இதய மாதலின் "பூவசையு மணிமார்பர்" என்றார் என்க.

புகழ்ச்சிறப்பு

புகழ்ச்சிறப்பென்பது:—கீர்த்தியின் பெருமை. அது செல்வாக்கினுதலின், இங்கே செல்வாக்கின் சிறப்புக்குப் பின் வைத்து இரண்டு கவிகளாற் கூறினர்.

ஆந்துணையாம் வன்னியர்போ லார்துணைப்பட் டாதரிப்பார்
போந்தரிகள் வணங்குமிவர் புகழ்சிறிதோ யாம்புகழ்தற்
கேந்துகர மிரண்டினும்பொன் னிலக்கமறச் சொரியினுமிவ்
வேந்தர்புகழ்க் கிணைநாவால் வேறுபுகழ் கூறேமால். (49)

(இ-ள்.) ஆம் துணை ஆம் - தகுதியினையுடைய வற் றிற்குத் துணையாகின்ற, வன்னியர்போல் - வன்னியரைப் போல, துணைப்பட்டு ஆதரிப்பார் ஆர்-துணைப்பட்டு ஆத ரிப்பவர்கள் யாவர்? (ஒருவருமில்லை யென்றபடி) யாம் புகழ்தற்கு - எம்மாலே புகழ்ந்து சொல்வதற்கு, அரிகள் போந்து வணங்கும் இவர்கள் புகழ்சிறிதோ - பகைவர் வந்து வணங்கும் இவ்வன்னியர்களது புகழ் கொஞ்சமா

கவா இருக்கிறது? (ஆகையால்) ஏந்து கரம் இரண்டினும் பொன் இலக்கம் அறச் சொரியினும்-ஏந்தா நின்ற எமது கையிரண்டினும் (வழக்கமாகக் கவிக்கு ஆயிரம் பொன்னென்றும் முறையை நீக்கி) பொன்னைக் கணக்கில்லாது (மழைபோலும்) பொழிந்தாலும், இவ்வேந்தர் புகழ்க்கு இணை நாவால் வேறு புகழ் கூறேம் - இவ்வரசர்கள் புகழுக்கு இணையாக எந்நாவினால் வேறு ஒருவர் புகழையும் சொல்லமாட்டேம். எ-று. ஆல்-அசை.

கருத்து. வன்னியர்களைப்போலும் துணைப்பட்டு ஆதரிப்பவர் உலகத்தில் ஒருவருமில்லை யாதலால் எமது கைகளில் கவியொன்றுக்கு ஆயிரம்பொன்னென்னும் வரையின்றிப் பொழிந்தாலும் இவ்வரசர்கள் புகழுக்கிணையாக வேறு ஒருவர் புகழையுங் கூறமாட்டோம் என்பதாம்.

இதுவும் அது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வளமருவு மங்கையர்கோன் சொலத்தகுபல் லவராயன் மரபிற் றோன்றிக், களமருவு கறையுடைய கண்ணுதல்கச் சியின்வாழே கம்பரேசற், குளமருவு மன்பினரா யொளிர்மகுட மணிப்பொற்றே ருதவி மேனாள், தளமருவு தாமரைபோன் முகவனியர் படைத்தபுகழ் சாற்றற் பாற்றே. (50)

(இ - ள்.) மேனாள் - ஆதியில், தளம் மருவி தாமரை போல் முகம் வனியர் - இதழ் பொருந்தியதாமரை மலர் போலுங் குளிர்த்த முகத்தினையுடைய வன்னியர்கள், வளம் மருவு மங்கையர்கோன் சொலத்தகு பல்லவராயன் மரபில் தோன்றி - வளப்பத்தைக்கொண்ட திருமங்கையாழ்வாரால்சொல்லுந் தகுதியினையுடைய பல்லவராஜன் வமிசத்தில் உதித்து, களம் மருவு கறைஉடையகண்ணுதல் கச்சியின்வாழ் ஏகம்பரேசற்கு - கண்டத்தினிடத்து பொருந்திய விஷக்களங்கத்தினையும் நெற்றிக்கண்ணினையுமுடைய கச்சியின் வாழ்வாகிய ஏகாம்பர நாதற்கு, ஒளிர் மகுடம் - விளங்கா நின்ற இரத்தின கிரீடமும், மணிப்

பொற்றேர்-அழகிய இரத்தின இரதமும், உதவி-கொடுத்து, படைத்த புகழ் - அடைந்த புகழை, சாற்றல் பாற்றோ- சொல்லும் பகுதியினை யுடையதா? (சொல்வீர்களாக.) எ-று.

கருத்து. ஆதியில் இவ்வன்னியர்கள் திருமங்கையாழ் வாரால் சொல்லிய பல்லவராஜன் வமிசத்தில் தோன்றின வர்களாகி, ஏகாம்பரநாதற்குக் கிரீடம், தேர் முதலியவை கள் கொடுத்துப் புகழ் பெற்றதை இவ்வளவென அள விடக்கூடாது என்பதாம்.

இதனால், இவ்வன்னியர்கள் விஷ்ணுவாலய சிவாலய தருமங்கள் நிரம்பவும் பிரபலமாக நடத்துகின்றவர்கள் எனக் குறிப்பிட்டார்.

இதில் "வளமருவு மங்கையர்கோன் சொலத்தகு பல்லவராயன் மரபு" என்றதற்கு, திராவிட வேதமாகிய நாலாயிரப் பிரபந்தம் திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய,

"சொல்லுவன் சொற்பொரு டானவையாய்ச் சுவை யூறொலி நாற்றமுந் தோற்றமுமாய், நல்லர னாரணன் னான் முகனுக் கிடந்தான் றடஞ் சூழ்ந்தழகாயகச்சி, பல்லவன் வில்லவனென் றுலகிற் பலராய பலவேந்தர்வணங்கு கழற், பல்லவன் மல்லையர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ண கரமிதுவே"

இதுபோல மற்றைய பாசுரங்களை அந்நூலைக்கொண்டு அறிந்து கொள்க. "ஒளிர் மகுட மணிப்பொற்றேருதவி" என்றதற்கு, ஏகாம்பரச் சம்பன் அல்லது ஏகாம்பரச்செம் பியன் என்னும் பல்லவமகாராஜன் முன்னிலையில் இரட் டைப் புலவர்கள் அரங்கேற்றிய ஏகாம்பரநாதர் உலா "சம்புகுலத் தொருவன் சாற்றுகைக்கா மென்றளித்த - செம்பொன் மணிமகுடம் சேர்வித்து" என்னும் சூக-வது கலிவெண்பாவானும், "வடித்த சுடர்வேற்சம்பன் வாழ் மல்லி நாதன் - கொடுத்த திருத்தேர்மேற்கொண்டு" என்

னும் ௧0௨-வது கலிவெண்பாவானும் உணர்க. ஏகாம்பர நாத ருலாவை ஏகாம்பரச் செம்பியன் காலத்தில் இரட்டைப் புலவர்கள் அவன் முன்னிலையில் அரங்கேற்றிய தென்பதைத் தொண்டைமண்டல சதகம்.

"மேதைப் புலவரெண் ணேகாம்பர சம்பு மெச்சநெடுங்
காதைப் புலவ ரிரட்டையர் பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்ப வாண ருலாவுமந்த
மாதைப் பனுவலும் பாராட் டிடுந்தொண்ட மண்டலமே"

என்னும் ௮௬ - வது கவியாலுணர்க.

மாசகற்றற் சிறப்பு.

மாசகற்றற் சிறப்பென்பது :— குற்றம் நீக்குதலின் பெருமை. அது புகழ்தங்குதற்கு இடமாதலின், இங்கே புகழ்ச்சிறப்புக்குப் பின் வைத்துக் கூறினர்.

வேறு.

மின்னு மிரவி தனிற்றேன்றும் வேந்தர் குலத்தில் வருமாசும், மன்னு மதியந் தனிற்றேன்று மன்னர் குலத்தில் வருமாசுந், துன்னுந் திரைத்தண் கடலுலகிற் றெலைக்குந் தூய்தாங் கனற்றேன்றும், பன்னு புகழ்கொ ளரசர்களே பார்க்கின் மாசு தீர்ந்தாரே. (51)

(இ - ள்.) துன்னும் திரைத் தண் கடலுலகில் - நெருங்கிய அலைகளையுடைய சமுத்திரஞ்சூழ்ந்த இவ்வுலகத்தில், மின்னும் இரவிதனில் தோன்று வேந்தர் குலத்தில் வருமாசும் - பிரகாசிக்கின்ற சூரியனிடத்துத் தோன்றிய அரசர் குலத்தில் உண்டாகுங் குற்றத்தையும், மன்னு மதியம் தனில் தோன்றும் மன்னர் குலத்தில் வரு மாசும்- நிலைபெற்ற சந்திரனிடத்துத் தோன்றிய அரசர் குலத்தில் உண்டாகுங் குற்றத்தையும், தொலைக்கும் - நீக்காநின்ற, தூய்து ஆம் கனல் தோன்று - பரிசுத்தமாகிய அக்கினியிடத்துத் தோன்றியதாகப், பன்னும் புகழ்கொள் அரசர்களே - சொல்றுகின்ற புகழினைக்கொண்ட அரசர்களே, பார்க்கின் மாசுதீர்ந்தார் - ஆராயும்பொழுது குற்றந்தீர்ந்தவர்களாகிறுர்கள். எ-று.

கருத்து சூரியகுலத் தவர்களினும், சந்திரகுலத் தவர்களினும், அக்கினிகுலத் தவர்களே பரிசுத்த முடைய வர்கள் என்பதாம்.

இதில் வன்னியரென எடுத்துக் கொண்டதற்கு விசேடம் சொன்னார் என்க.

பெருந்தன்மையின் சிறப்பு.

பெருந்தன்மையின் சிறப்பென்பது:— பெருந்தன்மையின் பெருமை. இது குற்றத்தை நீக்குதலா லாதலின்; இங்கே மாசகற்றற் சிறப்புக்குப் பின் வைத்து இரண்டு கவிகளால் கூறினார்.

கலையான் மிக்கோ ருலகளிக்குங் கருத்தான் மிக்கோர் கனக மணி, மலையான் மிக்கோர் நிலவுகுடை வளத்தான் மிக்கோ ருடைமாரு, நிலையான் மிக்கோ ரினிதோங்கு நெறியான் மிக்கோ ரிகல்வெல்லுஞ், சிலையான் மிக்கோர் வன்னிமன்னர்க் கெவர்தான் மிக்கோர் தெளிதரினே. (52)

(இ - ள்.) தெளிதரின் - ஆராயுங்கால், கலையால் மிக்கோர் - பதினெண் வித்தைகளாற் சிறந்தவர்களும், உலகு அளிக்கும் கருத்தால் மிக்கோர் - உலகத்தைக் காக்குங் கருத்தினுற் சிறந்தவர்களும், கனகமணி மலையால் மிக்கோர் - அழகிய பொன் மலையினுற் சிறந்தவர்களும், நிலவு குடைவளத்தால் மிக்கோர் - விளங்குகின்ற குடைவளத்தினுல் சிறந்தவர்களும், இனிது ஓங்கு நெறியால் மிக்கோர்- இனிதாக உயரும் ஒழுக்கத்தினுற் சிறந்தவர்களும், இகல் வெல்லும் சிலையால் மிக்கோர் - பகையை வெல்லும் வில்லினுல் சிறந்தவர்களும், (உடையவர்களாதலின்) வன்னிமன்னர்க்கு - இவ்வன்னிய ரென்னும் அரசர்களுக்கு, எவர் தான் மிக்கோர் - யாவர்தான் சிறந்தவர்கள் (சொல்வீர்களாக.) எ-று.

கருத்து. வன்னியர்கள் ஒவ்வொரு விஷயங்களினும் மேலானவர்கள் என்பதாம்.

கலிவிருத்தம்
இதுவும் அது.

ஆக்கமுன் னிடினுய ரறத்தை யாக்குவர்
போக்கமுன் னிடிற்பொருந் தாரைப் போக்குவர்
காக்கமுன் னிடிற்கட னிலத்தைக் காப்பர்நல்
லூக்கமுன் னிடுகுணத் தோர்பண் ணுடரே. (53)

(இ-ள்.) பண்ணுடர் - தமிழ்நாடரென்னுஞ் சேர சோழ பாண்டியராகிய வன்னியர்கள், ஆக்க முன்னிடின் - ஆக்க வேண்டுமென நினைத்தால், உயர் அறத்தை ஆக்குவர் - உயர்வாகிய தருமத்தை உண்டாக்குகிறார்கள், போக்க முன்னிடில் - அழிக்க வேண்டுமென நினைத்தால், பொருந்தாரைப் போக்குவர் - பகைவர்களை அழிக்கிறார்கள், காக்க முன்னிடில் - ரக்ஷித்தல் செய்ய வேண்டுமென நினைத்தால், கடல் நிலத்தைக் காப்பர் - சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தை காக்கிறார்கள், (ஆகையால் எந்த விஷயத்திலும்) ஊக்கம் முன்னிடு குணத்தோர் - மனவெழுச்சியை முன்னிட்ட குணத்தினையுடையவர்களாகிறார்கள். எ-று.

முன்னல் இடின் என்றது முன்னிடின் எனவாயது; நினைத்தல்தரின் எனப்பொருள்.

கருத்து. வன்னியர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் மனவெழுச்சியை முன்னிட்ட குணத்தினையுடையவர்களாகவே யிருக்கிறார்கள் என்பதாம்.

இதயவண்மைச் சிறப்பு.

இதய வண்மைச் சிறப்பென்பது:—இதய வளத்தின் பெருமை. அது பெருந்தன்மைக்கு அவசியம் வேண்டும் ஆதலின், இங்கே பெருந்தன்மையின் சிறப்புக்குப் பின் வைத்துக் கூறினார்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சமய வளமுஞ் சிவனுமைமால் தலத்தின் வளமுங் குலவளமு
மமையு நிலத்தின் வளமுமுழ வாளர் வளநல் லறவளமுந்

தமையொப் பிலர்கற் புறுவளமுஞ் சகல வளமுந் தமிழ்வேந்த
ரிமையப் பொருப்பர் பண்ணுட ரிதய வளத்தின் றிறத்தானே. ()

(இ - ள்.) தமிழ் வேந்தர் இமயப் பொருப்பர் பண்ணுடர் - தமிழ் அரசர்களும் இமய மலையை யுடையவர்களும் தமிழ்நாடர்களுமாகிய சேர சோழ பாண்டிய வன்னியர்களினது, இதயவளத்தின் திறத்தான் - இதய வண்மையின் திறத்தினால், சமயவளமும் (தாங்கள் வணங்குகின்ற) சமயங்களின் வளங்களும், சிவன் உமை மால் தலத்தின் வளமும் - சிவன் பார்வதியாகிய காமாக்ஷி விஷ்ணு இவர்கள் வசிக்கின்ற ஸ்தலமாகிய தங்களுக்குரிய காஞ்சீ நகரத்தினது வளமையுங், குலவளமும் - இவர்களது குலத்தின் வளமையும், அமையும் நிலத்தின் வளமும் - பொருந்திய இவர்கள் அரசுக்குரிய நாட்டினது நிலவளமையும், உழவாளர் வளம் - (அந்த நிலத்தைப் பயிரிடப்பட்ட குடிகளாகிய) வேளாளர்களுடைய வளமையும், நல் அற வளமும் - நல்ல தருமத்தின் வளமையும், தமை ஒப்பிலர் கற்பு உறு வளமும் - தங்களுக் கொப்பில்லாத கற்புடைய ஸ்திரீகளின் வளமையும், சகல வளமும் - (இவை முதலாகிய) சகல வளமைகளையும் (உடைய தாயிருக்கின்றது) இவ்விராஜ்யம் எ-று.

கருத்து. வன்னியர்களது இதயவண்மையால் சகல வளப்பங்களும் நிறைந்திருக்கின்றது என்பதாம்.

இதில், செல்வம், விளைவு, பல்வளம், செங்கோன்மை, கொல்குறும்பின்மை, பிணியின்மை என நன்னாட்டமைதி ஆறையுங்காண்க. "தமிழ் வேந்தர்" என்றதனால் தமிழைச் சங்கமுதலிய வைத்துத் தமிழ் நாட்டுள் பரிபாலிக்கின்றவர்கள் என்க. நாடு என்னை! 'வடவேங்கடந் தென்குமரியா யிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்க,

ஆதலின் சேரசோழ பாண்டியராகிய மூவேந்தருள்ளும் அடங்குமென்க. இம்மூவேந்தரும் வன்னியரென்பார், "தமிழ் வேந்த ரிமயப்பொருப்பர் பண்ணுடர்" என்றாரென்க.

இவ்வேந்தர்களின் பட்டப்பெயர்க ளாவன; சேரனார், சோழனார், பாண்டியனார், உடையார், நாயனார், * கண்டர், பள்ளிகள், சாமந்தர், பல்லவர், அஞ்சாதசிங்கம், கங்கணவுடையார், மழுவர், பொறையர், அரசுபள்ளி, இராயர், படையாட்சியர், நாயகர், கிடாரங்காத்தவர், நீலங்கிரியார், வாளண்டையார், வீரமிண்டர், வல்லமையுடையார், இராஜாளி, சமுகக்ஷியர், தந்திரியார், இரட்டிகள், துரைகள், பண்டாரத்தார், பூபதிகள், பரமேசுவரனார், காளிங்கராயர், சம்புராயர், முதலியவைகள் என்க. இவைபோலும் இன்னும் அநந்தப்பட்டப் பெயர்களை வழக்கிற் கண்டுணர்க.

*இந்த கண்டர் என்னும்பதமே கவுண்டர் என நிற்கின்றது.

இராஜசமுகச் சிறப்பு.

இராஜசமுகச் சிறப்பென்பது :— இராஜசமுகத்தின் பெருமை. அது இதயவளத்தி னாலாதலின், இங்கே இதயவண்மைச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

வானோர் வியக்குஞ் சமுகமுது மறையோர் வாழ்த்துஞ் சமுகமலர்த்
தேனார்ந் திருக்குஞ் சமுகமன்னர் திறைக ளளக்கும் சமுகம்விழி
மானார் நடிக்குஞ் சமுகமதி வல்லோர் துதிக்குஞ் சமுகமொன்னா
ராறு திறைஞ்சுஞ் சமுகம்வன்னி யரசர் சமுக மதுதானே. (55)

(இ - ள்.) வானோர் வியக்கும் சமுகம் - தேவர்கள் சந்தோஷிக்கின்ற சமுகமும், முது மறையோர் வாழ்த்தும் சமுகம் - பழமையாகிய வேதப்பிராமணர்கள் ஆசீர்வாதஞ் சொல்லுகின்ற சமுகமும், மலர்த் தேன் ஆர்ந்திருக்கும் சமுகம் - இலக்ஷுமி நாளு நிறைந்திருக்கின்ற சமுகமும், மன்னர் திறைகள் அளக்கும் சமுகம் - அரசர்கள் கப்பம் என்னும் அரசிறைகளை அளக்கின்ற சமுகமும், விழிமானார் நடிக்கும் சமுகம் - மான்போன்ற விழிகளையுடைய பெண்கள் நடனஞ் செய்கின்ற சமுகமும், மதிவல்லோர் துதிக்கும் சமுசம் - அறிவில் வல்லவர்கள் துதிக்கின்ற சமுகமும், ஒன்னார் ஆறுத இறைஞ்சும் சமுகம் - பகைவர்கள் தமது உயிர் கெடாது நிலை பெறும்படி வணங்குகின்ற

சமுகமும், (ஆகின்றதெதுவோ) அது தான் வன்னி அரசர் சமுகம் - அது தான் வன்னியரென்னும் அரசர்கள் சமுகமாகும். எ-று.

கருத்து. தேவர்கள் வியக்கின்றதும், பிராமணர்கள் வாழ்த்துகின்றதும், இலக்ஷுமி நிறைந்திருக்கின்றதும், அரசர்கள் கப்பங்கள்செலுத்துகின்றதும், பெண்கள் நடிக்கின்றதும், புலவர்கள் துதிக்கின்றதும், பகைவர்கள் வணங்குகின்றதும், ஆகிய சமுகம் எதுவோ அது தான் வன்னியரென்னும் அரசர்கள் சமுகம் என்பதாம்.

பதியிருத்தற் சிறப்பு.

பதியிருத்தற் சிறப்பென்பது:— நகரிற்றங்குதலின் பெருமை. அது சமுகம் கொடுத்தற்குச் சிறத்தலின், இங்கே இராஜ சமுகச்சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

கோச்சகம்.

பண்ணுடர் தமதுபெரும் பதியிருப்ப தாலிமையோர்க்
கெண்ணூர்ந்த சிறப்பிருக்கு மிம்பர்மனு முறையிருக்குங்
கண்ணுமுத் தமிழிருக்குங் கற்றோர்க்குப் புகழிருக்கும்
விண்ணூர்ந்த மழையிருக்கு மிடியிருக்க மாட்டாவே. (56)

(இ-ள்.) பண்ணுடர் - தமிழ்நாடரென்னுஞ் சேர சோழ பாண்டிய வன்னியர்கள், தமது பெரும்பதி இருப்பதால் - தமது பெரிய பதியிருக்குந் தன்மையினால், இமையோர்க்கு எண் ஆர்ந்த சிறப்பு இருக்கும் - தேவவுலகத்தவர்களுக்கு எண்ணிறைந்த சிறப்புகளிருக்கும், இம்பர் மனுமுறை இருக்கும் - பூவுலகத்தவர்களுக்கும் மனுதரும சாஸ்திர முறைமையிருக்கும், முத்தமிழ் கண்ணு இருக்கும் - இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழும் பெருமையாக விருக்கும், கற்றோர்க்குப் புகழ் இருக்கும் - (அம்முத்தமிழையும் படித்த) வித்வான்களுக்கும் கீர்த்தி இருக்கும், விண் ஆர்ந்த மழைஇருக்கும்-ஆகாயத்தில் பரவி உலகு செழிக்கும்படி சொரிகின்ற மழைத்துளிகளும் இருக்கும், (ஆனால்) மிடி இருக்க மாட்டா - தரித்திரமென்பது மாத்திரம் இருக்கா. எ-று. ஏ. அசை.

கருத்து. வன்னியர்கள் பதியிருத்தலால் தரித்திர மென்பது மாத்திரம் இருக்கமாட்டாது என்பதாம்.

மன்னர் சூழ்தற் சிறப்பு.

மன்னர் சூழ்தற் சிறப்பென்பது :— அரசர்கள் சூழ்ந்து கொள்ளுதலின் பெருமை. அது பதியிருத்தலினுலாதலின், இங்கே பதியிருத்தற் சிறப்புக்குப் பின் வைத்துக் கூறினர்.

பொன்னணையு மரதனம்போற் புகழணையும் பெருநிதிபோன்
மன்னணையு நெடும்படைபோன் மலரணையு மளியினம்போற்
றன்னிகரா ரெனத்தழலிற் சகலகலை யுடனுதித்த
மன்னரையே மன்னரெலா மதித்தணைந்து வாழ்வாரே. (57)

(இ - ள்.) பொன் அணையும் அரதனம்போல்-பொன்னைச் சேர்ந்திருக்கின்ற இரத்தினம்போலவும், புகழ் அணையும் பெருநிதிபோல் - புகழைச்சேர்ந் திருக்கின்ற பெரிய திரவியத்தைப் போலவும், மன் அணையும் நெடும்படை போல் - அரசனைச் சேர்ந்திருக்கின்ற நீண்ட படைகளைப் போலவும், மலர் அணையும் அளி இனம்போல் - மலரைச் சேர்ந்திருக்கின்ற வண்டுக் கூட்டங்களைப் போலவும், தன் நிகர் ஆர் என - தனக்கு ஒப்பு ஒருவருமில்லையென்று சொல்லும்படி, தழலில் சகல கலையுடன் உதித்த மன்னரையே - அக்கினியினின்றும் சர்வ கலைகளோடும் பிறந்த அரசர்களையே, மன்னரெல்லாம் மதித்து அணைந்து வாழ்வார் - அரசர்கள் எல்லாம் மதித்துச் சேர்ந்திருந்து வாழ்கின்றார்கள். எ-று.

கருத்து. வன்னியர் என்னும் அரசர்கள் அவ்வரசர்களுக்குள்ளாகவே ஒரு வரையொருவர் மதித்துச் சேர்ந்திருந்து வாழ்கின்றார்கள் என்பதாம்.

மொழிதவருமைச் சிறப்பு.

மொழிதவருமைச் சிறப்பென்பது :— சொற்றவருமையின் பெருமை. அது மன்னர்சூழ்தற்குக் கருவியாதலின், இங்கே மன்னர்சூழ்தற் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

விண்ணொளிர்வெங் கதிரொளியும் விதுவொளியும் விளக்கொளியுந்
தண்ணொளிகான் மணியொளியுந் தகைசான்ற வொளியாமோ
கண்ணொளியா யுறைவனியர் காத்தருள்பொய் யாவொளியே
மண்ணொளியா வொளியெனமா மறையொளியா வழுத்தலினே. (58)

(இ-ள்.) *கண் ஒளி ஆய் உறை வனியர்* - கண்ணின் சிறுமணி ஒளியென எவ்வுயிரையும் நினைத்துக்காத்துறைகின்ற வன்னியர்கள், *காத்து அருள் பொய்யா ஒளியே* - தம்மைக் காத்துச் சொல்லுகின்றமொழி தவறுமையாகிய வொளியே, *மண் ஒளியா ஒளி என* - மண்ணில் மறையாத ஒளியென்று, *மறை ஒளியா வழுத்தலின்* - வேதங்கள் இரகசியமாகச் சொல்லுகின்றதனால், *விண் ஒளிர் வெம் கதிர் ஒளியும்* - ஆகாயத்தின்கண் விளங்குகின்ற வெவ்விய சூரியனுடைய வொளியும், *விது ஒளியும்* - (இரவில் ஒளி கொடுக்கின்ற) சந்திரனுடைய வொளியும், *விளக்கு ஒளியும்* - விளக்கினுடைய வொளியும், *தண் ஒளி கால் மணி ஒளியும்* - குளிர்ந்த கிரணத்தைக் கக்குகின்ற இரத்தினத்தினுடைய வொளியும், *தகை சான்ற ஒளி ஆமோ* - பெருமைதங்கிய வொளியாகுமா? [இவைகள் மண்ணில் மறையுந் தன்மையுடையவை யென்றபடி.] எ-று.

கருத்து. வன்னியர்களது பொய்யாமை என்னும் ஒளியானது சூரியன், சந்திரன், விளக்கு, இரத்தினம் இவைகளி னொளிகளைப்போலன்றி மறையாத் தன்மையுடையதாக விருக்கின்றது என்பதாம்.

நாயனாரும் "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் - பொய்யா விளக்கே விளக்கு" என்றாரென்க.

சாந்த முதலியவற்றின் சிறப்பு.

சாந்த முதலியவற்றின் சிறப்பென்பது:—சாந்த முதலியவற்றின் பெருமை. அது மொழிதவறுமைக்குச் சிறந்த உருவாதலின், இங்கே மொழிதவறுமைச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

சாந்தமிரட் சகத்தாலுந் தகைபெறுவை பவத்தாலும்
ஆர்ந்தபுய பலத்தாலு மழகமைந்த திறத்தாலும்

ஏந்துபுக ழான்மாலிந் திரன்குகன் வேளெனவன்னி
வேந்துசிறந் திருப்பதையிம் மேதினியே விளம்பிடுமால். (59)

(இ - ள்.) வன்னிவேந்து - வன்னியரென்னும் அரசர்கள், சாந்தம் புகழ் ஏந்து அரன் எனவும் - சாந்தத்தால் புகழினைக் கொண்ட சிவபிரான் எனவும், இரக்ஷகத்தால் மால் எனவும் - காத்தலினால் விஷ்ணு எனவும், தகைபெறு வைபவத்தால் இந்திரன் எனவும் - பெருமையையுடைய வைபவத்தினால் இந்திரன் எனவும், ஆர்ந்த புயபலத்தால் குகன் எனவும் - நிறைந்த புயபலத்தினால் சுப்பிரமணியன் எனவும், அழகு அமைந்த திறத்தால்வேள் எனவும் - அழகு பொருந்திய தன்மையினால் மன்மதன் எனவும், சிறந்திருப்பதை - சிறந்திருக்கின்றதை, இம்மேதினியே விளம்பிடும் - இவ்வுலகமே சொல்லும். எ-று ஆல் - அசை.

கருத்து வன்னியர்கள் சாந்தத்தால் சிவபிரானெனவும், காத்தலினால் விஷ்ணுவெனவும், வைபவத்தால் இந்திரனெனவும், புயபலத்தால் சுப்பிரமணியனெனவும், அழகால் மன்மதனெனவும் சிறந்து விளங்குந் தன்மையை இவ்வுலகமே சொல்லுகின்றது என்பதாம்.

கோடைவளத்தின் சிறப்பு.

கொடை வளத்தின் சிறப்பென்பது:— கொடை வளத்தின் பெருமை. அது சாந்தமுதலிய குணங்களோடும் பொருந்திக் கொடுக்கவேண்டிய தாதலின்,இங்கே சாந்தமுதலியவற்றின் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வையந் தழைப்ப மறைதழைப்ப மறையோர் புரியு மகம் தழைப்பச்
செய்ய முனிவர் தவந்தழைப்பச் செங்கோ றழைப்பச் சீர்தழைப்ப
பெய்யு முகில்போற் றுங்கவன்யர் கைமா றுகவா மற்பெறுவோர்
கையுந் தழைப்ப மெய்தழைப்பக் கனகம் பொழிவார் காணீரே. (60)

(இ - ள்.) துங்கவன்யர் - உயர்வினையுடைய வன்னியர்கள், வையம் தழைப்ப - உலகு தழைக்கவும், மறை

தழைப்ப - வேதங்கள் தழைக்கவும், மறையோர் புரியும் மகம் தழைப்ப - பிராமணர்கள் செய்யும்யாகங்கள் தழைக்கவும், முனிவர் செய்யுந் தவம் தழைப்ப - முனிவர்கள் செய்கின்ற தவங்கள் தழைக்கவும், செங்கோல் தழைப்ப - இவர்களது செங்கோல் தழைக்கவும், சீர் தழைப்ப - அதனால் பல சிறப்புகளும் தழைக்கவும், பெய்யும் முகில்போல் - பொழிகின்ற மேகத்தைப்போல், கைம்மாறு உகவாமல் - வரும் பயனை விரும்பாது, பெறுவோர் - வாங்குபவர்களது, கையுந்தழைப்ப மெய்தழைப்பக் கனகம் பொழிவார் - கைதழைக்கவும் சரீரந் தழைக்கவும் பொன்னைப் பொழிகிறார்கள், காணீரே - அறியீர்களா? (சொல்வீர்களாக.) எ-று:

கருத்து. வன்னியர்கள் மேகத்தைப்போல வரும் பயனை விரும்பாது, வாங்குபவர்களது கை தழைக்கவும், மெய்தழைக்கவும், பொன்னைப் பொழிகிறார்கள் என்பதாம்.

வள்ளறன்மைச் சிறப்பு.

வள்ளறன்மைச் சிறப்பென்பது:—வள்ளல்தன்மையின் பெருமை. அது கொடுத்தல் வண்மையினாலாதலின், இங்கே கொடைவளத்தின் சிறப்புக்குப் பின்வைத்துக்கூறினார்.

கோச்சகம்.

புள்ளிபல வாயினும்புன் பூசைபுலி யாகாவே
வெள்ளிபல வாயினும்வான் வெண்மதியொன் றாகாவே
துள்ளல்பல வாயினுமோர் தூய்கருட னாகாவே
வள்ளல்பல ராயினுநல் வன்னியர்க்கொப் பாவாரே. (61)

(இ-ள்.) புன் பூசை புள்ளி பல ஆயினும் (ஓர்) புலி ஒப்பு ஆகா - அற்பத தன்மையையுடைய பூனைகள் புள்ளிகளைக் கொண்டு பலவாகக்கூடி இருப்பினும் (அவைகள்) ஒரு புலிக்கு ஒப்பாகா, வெள்ளி பல ஆயினும் வான் வெண்மதி ஒன்று (ஒப்பு) ஆகா-(ஒளி செய்தலைக்கொண்டு) நக்ஷத்திரங்கள் பலவாகக் கூடியிருப்பினும் பெருமையுடைய ஒரு சந்திரனுக்கு ஒப்பாகா, துள்ளல் பல ஆயி

னும் ஓர் தூய்கருடன் ஒப்பு ஆகா - (பறத்தற்றொழிலைக் கொண்டு) கொசுகுகள் பலவாகக்கூடியிருப்பினும் (அவைகள்) ஒரு பரிசுத்தகருடனுக்கு ஒப்பாகா (எனப்போல்) வள்ளல் பலர் ஆயினும் - வன்னியர்களையன்றி மற்றவர்களும் வள்ளல் தன்மையைக் கொண்டு பலரிருந்தாலும், (அவர்களெல்லாம்) நல் ஒரு வன்னியருக்கு ஒப்பு ஆகார் - நன்மையைக் கொண்டிருக்கின்றவர்களாகிய வன்னியர்களுள் ஒருவருக்குக்கூட ஒப்பாகமாட்டார்கள். எ-று.

கருத்து. வன்னியர்களே வள்ளல் தன்மையிற் சிறந்தவர்கள் என்பதாம்.

அடுத்தவர்க்குத்தாழ்வின்றெனற் சிறப்பு.

அடுத்தவர்க்குத் தாழ்வின்றெனற் சிறப்பென்பது:— தம்மை அடுத்தவர்களுக்குத் தாழ்வில்லையெனலின் பெருமை. அது வள்ளறன்மைச் சிறப்புக்குப்பின் வைத்துக் கூறினர்.

மேருவினைச் சார்ந்தவரை மிடியணுகு மோதேவ
தாருவினைச் சார்ந்தவரைத் தழற்பசிவந் தணுகிடுமோ
நேருரை செயாவனிய நிருபர்நெடுங் கழலிணையைச்
சாருமவர் தமையிறையுந் தாழ்வென்ப தணுகுறுமோ. (62)

(இ-ள்.) மேருவினைச் சார்ந்தவரை மிடி அணுகுமோ - பொன்மலையை அடுத்தவர்களைத் தரித்திரம் அடையுமா? தேவதாருவினைச் சார்ந்தவரை தழல்பசிவந்து அணுகிடுமோ - கற்பகத் தருக்களை யடுத்தவர்களை அக்கினியின் றன்மையையுடைய பசிவந்து அடையுமா? (எனப்போல்) வனியநிருபர்-வன்னியரென்னும் அரசர்களது, நேர் உரை செயா நெடும் கழல் இணையை - ஒப்பு சொல்லக்கூடாத நீண்ட இரண்டு பாதங்களையும், சாரும் அவர் தமை-வந்து அடுத்தவர்களை, தாழ்வு என்பது அணுகுறுமோ - தாழ்வென்று சொல்லப்படுவதானது (எப்போதாயினும்) அடையுமா? எ-று.

கருத்து. வன்னியர்களை அடுத்தவர்களுக்கு எந்தக் காலத்தும் தாழ்வு அணுகாது என்பதாம்.

உமையருள்பெற்றோரெனற் சிறப்பு.

உமையருள் பெற்றோரென்ற சிறப்பென்பது—உமையாளின் அருளைப் பெற்றவர்கள் எனலின் பெருமை. அது அடுத்தவற்குத் தாழ்வு வராதென்னுந் தன்மைக்கு முதற் காரணமாதலின், இங்கே அடுத்தவர்க்குத் தாழ்வின்றெனற் சிறப்புக்குப்பின்வைத்துக் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கலைமகடன் மைந்தரெனக் கலைஞானம் பெறுகையினல் கடல்சூழ் பூமித்
தலைமகடன் மைந்தரெனச் சகமுழுது மரசாளுந் தன்மை யானீ
டலைமகடன் மைந்தரென வாக்கத்தாற் றழலிலவ தரித்த றன்னல்
மலைமகடன் மைந்தரென வரமளிக்க பெறும்வனியர் மகிமை யென்னே.

(இ-ள்.) தழலில் அவதரித்தல் தன்னல் மலைமகள் தன் மைந்தர் என - அக்கினியில் பிறந்ததினுல் பார்வதி தன்புத்திரர்களென, வரம் அளிக்கப் பெறும் வனியர் - வரங்கொடுக்கப் பெறுகின்ற வன்னியர்கள், கலை ஞானம் பெறுகையினல் கலைமகள் தன் மைந்தரென - கலையறிவுகளை அடைகின்ற தன்மையால் சரஸ்வதியின் புத்திரர்கள் எனவும், சகம் முழுதும் அரசு ஆளுந்தன்மையால் பூமித் தலைமகள் தன் மைந்தர் என - உலகமுழுவதையும் அரசாளுகின்ற தன்மையினலே பூமிதேவியின் புத்திரர்கள் எனவும், ஆக்கத்தால் நீடு அலைமகள் தன் மைந்தர் என - செல்வத்தை அடைந்திருக்கின்ற தன்மையினுல் இலக்ஷுமியின் புத்திரர்கள் எனவும் (ஆகிறூர்கள் ஆதலால்) மகிமை என் - இவர்கள் மகிமையை என்ன சொல்லுகிறது! எ-று.

கருத்து. வன்னியர்கள் அக்கினியிற் பிறந்ததால் பார்வதியானவள் தன் புத்திரரென்ன வரங்கொடுக்கப்பெறுகின்ற காரணத்தைக்கொண்டும், கலையறிவுகளை அறிந்திருத்தலால் சரஸ்வதியின் புத்திரர்கள் எனவும், உலகமுழுவதையும் அரசாளுகிறதினுல் பூமிதேவியின் புத்திரர்கள் எனவும், செல்வத்தை அடைந்திருக்கின்றதனுல் இலக்ஷுமியின் புத்திரர்களெனவும் யாவரும் சொல்லுகின்றூர்கள். ஆதலால் இவர்கள் மகிமையை என்ன சொல்லுகிறது என்பதாம்.

அஷ்டஐசுவரியச்சிறப்பு.

அஷ்டஐசுவரியச் சிறப்பென்பது—எட்டு ஐசுவரியத்தின் பெருமை. அது உமையருளைக் கொண்டும் ஆதல் வேண்டியிருத்தலின், இங்கே உமையருள் பெற்றோரெனற் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

வேறு,

சாகரத் துலகி னிட்டைச் சம்புமா முனியி யற்றும்
யாகவுற் பவராம் வன்ய ரியாவையும் புரக்கு மாறு
வாகன மக்கள் சுற்ற மடிமைபொன் மணிநெல் லேகம்
ஆகர சாட்சி யோடெட் டயிச்சுவ ரியம்பெற் றாரே. (64)

(இ-ள்.) சாகரத்து உலகில் - சமுத்திரம் சூழ்ந்த உலகத்தில், நிட்டைசம்பு மாமுனி இயற்றும் யாக உற்பவர் ஆம் வன்யர் - யோக நிஷ்டையைக் கொண்ட சம்புவெனும் மஹா இருடியினாலே செய்த யாகத்திற் பிறந்தவர்களாகிய வன்னியர்கள், யாவையும் புரக்கும் ஆறு-எல்லாவற்றையும் காக்கும் வழியாக, வாகனம் - (தேர் யானை குதிரை முதலிய) வாகனங்கள் என்ன, மக்கள் - புத்திரர்கள் என்ன, சுற்றம் - பந்துக்கள் என்ன, அடிமை - அடிமைகள் என்ன, பொன் - பொன் என்ன, மணி - (மாணிக்கம் வைரம் முதலிய) இரத்தினங்கள் என்ன, நெல் - நெற்கள் என்ன, ஏகம் ஆகு அரசாட்சியோடு - ஏகமாகிய அரசாட்சி [அதாவது ஏகசக்கிராதிபத்தியத்துடன்] (ஆகிய) எட்டு ஐசுவரியங்களையும் பெற்றவர்களாகிறார்கள். எ-று.

கருத்து. வன்னியர்கள்; வாகனம், மக்கள், பந்து, அடிமை, பொன், இரத்தினம், நெல், ஏக சக்கிராதிபத்தியம் ஆகிய இவ்வெட்டு ஐசுவரியங்களையும் உடையவர்கள் ஆகிறார்கள் என்பதாம்.

தசாங்கச்சிறப்பு.

தசாங்கச் சிறப்பென்பது:—பத்துவித அங்கத்தின் பெருமை. அது அஷ்ட ஐசுவரியத்தோடும் இருத்தலே மேலானதாதலின், இங்கே அஷ்ட ஐசுவரியச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

கோச்சகம்

வளங்குலவு பண்ணாடு மதக்களிருண் புலித்துவசம்
விளங்குமக மேருமனோ வேகரத மும்முரசு
களங்கறுகங் காநதிவெங் கனற்பரிவா டாமாலை
துளங்கலிற்பொற் சிலைபெற்றோர் துதிபெற்ற வன்னியரே. (65)

(இ-ள்.) துதி பெற்ற வன்னியர் - யாவரும் துதிக்கப் பெறுகின்ற வன்னியர்கள், வளம் குலவு பண்ணாடு - வளப்பத்தைக் கொண்டு விளங்கா நின்ற தமிழ்நாடும், மதக்களிறு-மதத்தைக்கொண்ட பட்டத்துயானையும், ஆண்புலித்துவசம்-ஆண்புலிக்கொடியும், விளங்கு மகமேரு-விளங்கா நின்ற மஹாமேரு மலையும், மனோவேகரதம் - மனோவேகத்தைக்கொண்ட இரதமும், மும்முரசு-மும்முரசும், களங்கு அறுகங்காநதி - (மூழ்குபவர்களது) குற்றத்தை நீக்கா நின்ற கங்கைநதியும், வெம் கனல் பரி-வெவ்விய அக்கினிக் குதிரையும், வாடாமாலை - பொன்னரிமாலையும், துளங்கல் இல் பொற்சிலை - அசைதலில்லாத அழகிய விற்பெற்ற காஞ்சிநகரும் (ஆகிய) இப்பத்தங்கங்களையும்) பெற்றோர் - பெற்றவர்கள் ஆகிறார்கள்.

கருத்து. வன்னியர்கள் தமிழ்நாடும், யானையும், ஆண் புலிக்கொடியும், மஹாமேரு மலையும், மனோ வேகத்தைக் கொண்ட இரதமும், மும்முரசும், கங்கா நதியும், அக்கினிக் குதிரையும், பொன்னரி மாலையும், காஞ்சி நகரும் ஆகிய பத்தங்கங்களையும் உடையவர்கள் என்பதாம்.

அரசின் சிறப்பு.

அரசின் சிறப்பென்பது :—தலைமையுடைமையின் பெருமை. அது தசாங்கத்தைக் குறித்தே யாதலின், இங்கே தசாங்கச் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

நாடுபல வினுக்கரசு பண்ணாடு நகர்க்கரசு நலஞ்சேர் கச்சி
நீடுவரை களுக்கரசு மாமேரு நதிக்கரசு நிறைநீர்க் கங்கை
பீடுபெறு சிலைக்கரசவ் வுருத்திரன்வெஞ் சிலையகிலம் பெரிது காக்கச்
சூடுமணி முடியரசுக் கரசுவன்னி யரசன்றிச் சொலவே றுண்டோ. ()

(இ-ள்.) நாடு பலவினுக்கு அரசு பண்ணடு - (முற்கூறிய அங்கம் பத்தும் ஆராயுங்கால்) நாடுகள் பலவற்றுள்ளும் தலைமையுடையது தமிழ்நாடும், நகர்க்கு அரசு நலம்சேர் சச்சி - நகரங்கள் எவற்றினுக்குந் தலைமையுடையது நன்மைகள் நிறைந்த காஞ்சி நகரமும், நீடுவரைகளுக்கு அரசு மாமேரு - உயர்ந்து விளங்கும் மலைகள் எவற்றினுக்குந் தலைமையுடையது மஹா மேரு மலையும், நதிக்கு அரசு நிறை நீர்க்கங்கை - நதிகள் எவற்றினுந் தலைமையுடையது நீர் நிறைந்த கங்கா நதியும், சிலைக்கு அரசு பீடு பெறு அ உருத்திரன் வெம்சிலை - விற்கள் எவற்றினுந் தலைமையுடையது பெருமிதங் கொண்ட அவ்வுருத்திரனுடைய வில்லும் ஆதலின், (இவைகளோடு) அகிலம் பெரிதுகாக்க-உலகத்தை மிகவும் காவல் செய்யும்படி, அரசுக்கு-தலைமையுடைமைக்கு, மணி முடிசூடும் வன்னி அரசு அன்றி - இரத்தின கிரீடந்தரிக்கும் வன்னியர்கள் இராஜ்ஜியபாரஞ் செய்தலை யல்லாமற், வேறு சொல உண்டோ - வேறு சொல்வதற்கு இடம் இருக்கிறதா? (சொல்வீர்களாக) எ - று.

கருத்து. வன்னியர்களுடைய இராஜ்ஜியபாரமே தலைமையுடையது என்பதாம்.

இதில். முன்கூறாத நகர் கூறி, வில்லையுங்கூறி யிருப்பதால் விற்பெற்ற நகர் காஞ்சி யென்றும் (66-ல் காஞ்சியைக் குறிக்கத் துளங்களில் பொற்சிலை என்றார்), தலைமையுடைய சிலவற்றைக்கூற மற்றவைகளு மாமெனத் தெரிவித்தலுமறிக.

வில்லின்புகழ் கூறுதற்சிறப்பு.

வில்லின் புகழ்கூறுதற்சிறப்பென்பது - வில்லினது புகழைச் சொல்லுதலின் பெருமை. அது அரசுக்கு உறுதி தருதலின், இங்கே அரசின் சிறப்புக்குப் பின்வைத்துக் கூறினார்.

வேறு.

மேவரு மேரு வொத்த வீரபண் ணுடர் வில்லைத்
தேவரே கூறல் வேண்டுந் திசைமுக னுதி யாய

மூவருங் கூறல் வேண்டு முனியகத் தியன னந்தன்
வாய்வளங் கூறல் வேண்டு மற்றெவர் கூறு வாரே. (67)

(இ - ள்.) வீரபண்ணுடர் - வீரத்தைக்கொண்டிருக்கின்றவர்களாகிய தமிழ்நாடரென்னுஞ் சேர சோழ பாண்டிய வன்னியர்களது, மேவு அரு மேரு ஒத்தவில்லை- பெறுவதற்கு அரிய மகாமேருவைப் போலும் (உயர்ந்து பருத்த)வில்லின் சிறப்பை, (அதன் பெருமை முதலியவை விளங்கத்) தேவரே கூறல் வேண்டும் - தேவர்களே சொல்லல் வேண்டும், திசைமுகன் ஆதி ஆய மூவரும் கூறல் வேண்டும் - பிரம்மா முதலாகத் திரிமூர்த்திகளுஞ் சொல்லல் வேண்டும், முனி அகத்தியன் அனந்தன் வாய் வளங் கூறல்வேண்டும் - இருடியாகிய அகத்தியனாவது ஆதிசேடனாவது தமது வாய் வளத்தினால் சொல்லல் வேண்டும், மற்றும் எவர் கூறுவர் - வேறே யாவர் சொல் லல் வல்லவர்கள்? (அனைய தாதலால் என்னாலே சொல்ல சாத்தியமாமென்பது என்னை) என்றபடி எ-று.

கருத்து. வன்னியர்கள் வில்லின் சிறப்பைத் தேவர்களும், திரிமூர்த்திகளும், அகஸ்தியரும், அதிசேஷனும் சொல்லல் வேண்டுமே யொழிய எம்போலியரால் சொல்லி நிறைவுபெறுவதன்று என்பதாம்.

இதுவரையில் அரசு கூறினவர் இனி வாழ்த்துக் கூறினாராயிற்றென்க.

வாழ்த்து.

வாழ்த்தென்பது - துதித்தல். அது இந்நூலும் இந்நூலுட்கூறும் வம்சமும், இவ்வம்சத்துக்குரிய இராஜ்ஜிய பாரமும், இராஜ்ஜியபாரத்துக்குக் காவலாகிய அரணும், அரணுக்குப் பலத்தைத்தரும் வில் முதலிய படைகளும், ஊழி ஊழியாக அனவரதமும் நிலைத்து விளங்கல் வேண்டும் என எண்ணிக் கடவுளைத் துதித்தல் பரிசு தருபவன் முன்னிலையிலாதலின், இங்கே பரிசுதருந் தகைமையை

யுடைய அரசுக்குப் பின்வைத்துப் பரிசுதரல், வாழ்த்து என இரண்டு சிறப்பாக நான்கு கவிகளால் கூறினர்.

பரிசுதரற் சிறப்பு.

பரிசுதரற் சிறப்பென்பது:—பரிசு கொடுத்தலின் பெருமை. அது துதித்தலைக்கொள்ளும் அரசின தாதலின் இங்கே அரசுறுப்பாகிய வில்லின் புகழ்க் கூறுதற் சிறப்பைத்தழுவி வாழ்த்துறுப்புக்குக் காரணமாக முதலில் வைத்துக் கூறினர்.

வேறு.

அவிக்கா தரங்கூர் புனிதர்மகிழ்ந் தருன்வன் னியரை யாம்புகழச்
செவிக்கா ரமுத மெனக்கேட்டுச் சிந்தை யுவந்து சீர்தூக்கிப்
புவிக்கா யிரம்பொ னிறைநீக்கிப் பொற்றண் டிகைபூ டணத்தோடு
கவிக்கா யிரம்பொன் பரிசளித்தான் கருணு கரத்தொண்ட வன்னி
யனே. (68)

(இ - ள்.) அவிக்கு ஆதரம் கூர் புனிதர் - அவிர்ப்பாகத்துக்கு இச்சை மிகுந்த தேவர்கள், மகிழ்ந்து அருள் வன்னியரை-மகிழ்ந்து கிருபையைச் செய்யாநின்ற வன்னியர்களை, யாம்புகழ - யாம் (அவர்களது குலத்துக்குரிய அரசியில் வில் முதலிய அங்கங்களைக்கொண்டு) புகழ, கருணுகர வன்னியன் - தொண்டமண்டலத்தை ஆளும், கருணுகரச்சோழனென வன்னியன், செவிக்கு ஆர் அமுதம் எனக்கேட்டு - காதுக்கு நிறைந்த தேவ அமிர்தம் எனக் கேட்டு, சீர் தூக்கி - கவியின் உறுப்பு முதலியவைகளை ஆராய்ந்து, சிந்தை உவந்து - மனம்மகிழ்ந்து, புவிக்கு இறை ஆயிரம்பொன் நீக்கி, (எம்மால், அனுபவஞ்செய்து வருகிற) பூமிக்காக (வருஷந்தோறும் கொடுக்கவேண்டிய) பகுதியில் ஆயிரம் பொன்னைத் தள்ளிக்கொடுத்து, பொன்தண்டிகை பூடணத்தோடும் - பொன் பல்லக்கு பலவித ஆபரணங்களோடும், கவிக்கு ஆயிரம் பொன் பரிசு அளித்தான் - கவியொன்றுக்கு ஆயிரம் பொன்னுக (எழுபத்தொன்பதினுயிரம் பொன்னும்) பரிசு கொடுத்தான். எ-று.

கருத்து. யாம் வன்னியர்களை அவர்களது குலத்துக்குரிய அரசியலை வில்முதலிய அங்கங்களைக் கொண்டு புகழத் தொண்டமண்டலத்தை யாளும் கருணாகரச் சோழ வன்னியனானவன் தேவ அமிர்தமெனக்கேட்டு, கவியின் உறுப்பு முதலியவைகளை ஆராய்ந்து மகிழ்ந்து, எம்மால் அனுபவஞ்செய்து வருகிற பூமிக்காக வருஷந்தோறும் செலுத்தும்வரியில் பொன் ஆயிரம்நீக்கி, பல்லக்கு ஆபரணங்களோடும் கவியொன்றுக்குப் பரிசு ஆயிரம் பொன்னாக எழுபத்தொன்பதினாயிரம் பொன்னும் கொடுத்தான் என்பதாம்.

இக்கருணாகரன் தொண்டமண்டலம் ஆண்ட சோழன் என்பதைப் படிக்காசுப் புலவரால் செய்யப்பட்ட தொண்டமண்டல சதகம்,

"பண்டையோர் நாளையி லோரேழ் கலிங்கப் பரணிகொண்டு, செண்டையுமேருவிற் றீட்டுவித் தோன்கழற் செம்பியன்செய், தொண்டைநன் னாடுபுரக்கின்ற கோனந்தித் தோன்றலெங்கள், வண்டையர் கோனங் கருணாகரன்றொண்ட மண்டலமே"

என்னும் 92-வது கவியிற்காண்க. அதுவுமன்றி,

முதலாவது குலோத்துங்க சோழனிடம் மந்திரியாகவும், சேனைத்தலைவனாகவுமிருந்த இக்கருணாகரத்தொண்டமான் கலிங்கத்தின் பேரிற் போருக்குச் சென்று ஜெயம் பெற்றுத் திரும்பியவனாகையால், ஜெயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணி, காளிக்குக் கூளி கூறியது 30-வது கவியில்,

"இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
யெறிவ னென்றுகழ றொழுதன
மறைமொ ழிந்தபடி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ரரசனே".

ஷை 52, 53, 54-வது கவிகளில்

"தண்ணாரின் மலர்த்திர டோளபயன்
  ரூனேவிய சேனே தனக்கடையக்
கண்ணுதிய சோழன் சக்கிரமாங்
  கருணாகரன் வாரண மேற்கொளவே''
''தொண்டையர்க்கரசின் முன்வருஞ்சுரவி
  துங்கவேள்கொடி யுயர்த்தகோன்
வண்டையர்க்கரசு பல்லவர்க்கரசு
  மால்களிற்றின்மிசை கொள்ளவே''
"மறித்தோடி யெவ்வரசுஞ் சரிய வென்று
  வருமனுக்கைப் பல்லவர்கோன் வளவர் வேந்த
னெறித்தோடை யிலங்குநடைக் களிற்றின் மேற்கொண்
  டிரைவேட்ட பெரும்புலிபோ லிகன்மேற் செல்ல''

என்று வருவனவற்றில், குலோத்துங்கனும், கருணாகரனும் பல்லவச்சோழ அரசர்களென்பதும், கருணாகரன் தொண்டைமான் என்னும் பட்டம் பெற்றவனென்பதும், மன்னர்களுடைய வரலாற்றையும் வெற்றித்திறத்தையும் புகழும் பரணிப் பிரபந்தத்தில் காண்க.

வாழ்த்துச்சிறப்பு.

வாழ்த்துச் சிறப்பென்பது:—துதித்தலின் பெருமை. அது பரிசுபெற்ற பிறகு சொல்லுதலாதலின், இங்கே பரிசுதரற் சிறப்புக்குப்பின் ஈற்றில்வைத்து மூன்று கவிகளால் கூறினர்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

**தனுமறை யெனுமிது வளர்கவே தரணியி லறநனி விளைகவே
மனுநெறி வகையுயிர் பெறுகவே மணிமுத லியவள நிறைகவே
கனமுறை மையின்மழை பொழிகவே களையற வுயர்பயிர் தழைகவே
இனமொடு சுரபிகள் பெருகவே யிணையறு புலிவிரு துயர்கவே.(69)**

(இ - ள்.) தனுமறை எனும் இதுவளர்க - தனுர்வேத மென்கிற இந்நூல் நீடூழி நிலைத்திருக்கக்கடவது; தரணியில் அறம் நனி விளைக - இவ்வுலகத்தில் தருமங்கள்

மிகவும் பலிதமாகக் கடவன; மனுநெறிவகை உயிர் பெறுக - மனுதரும சாஸ்திர மார்க்கங்களை உயிர்கள் பெற்று வாழக்கடவன; மணி முதலியவளம் நிறைக - இரத்தின முதலிய வளப்பங்கள் நிறைந்து விளங்கக்கடவன; கனம் முறைமையின் மழை பொழிக - மேகங்கள் முறையோடும் தவறாது மழைபொழியக்கடவன; களை அற உயர் பயிர் தழைக - களைகளில்லாது உயர்ந்து பயிர்கள் செழிக்கக் கடவன; இனமொடு சுரபிகள் பெருக - கூட்டங்களோடும் பசுக்கள் விருத்தியாகக் கடவன; இணை அறு புலி விருது உயர்க - ஒப்பில்லாத புலிக்கொடி உயர்ந்து தோன்றக்கடவது. எ-று. ஏ. பலவும் அசைகள்.

இதுவும் அது.

வேறு.

அவிசொரி வேள்வியைப் பாடினமே யயோநிசம் பவர்தமை வாழ்த்தினமே, யவனிக் கிறைவரைப் பாடினமே யறமெண் ணுன்குற வாழ்த்தினமே, தவளக் கவிகையைப் பாடினமே தழல்வெம் புரவியை வாழ்த்தினமே, தவமிகு வனியரைப் பாடினமே தனிநெடுஞ் சிலையினை வாழ்த்தினமே. (70)

(இ - ள்) அவிசொரி வேள்வியைப் பாடினம் - நெய் சொரியாநின்ற யாகத்தைப்பாடினோம், அயோனி சம்பவர் தமை வாழ்த்தினம் - ஆயோநி உற்பவர்களைத் துதித்தாம்; அவனிக்கு இறைவரைப் பாடினம் - பூவுலகத்துக்கு அரசர்களைப்பாடினம்; அறம் எண்ணான்கு உற வாழ்த்தினம் - தருமங்கள் முப்பத்திரண்டும் பொருந்தும்படி துதித்தாம், தவளக் கவிகையைப் பாடினம் - முத்துக் குடையைப் பாடினம்; வெம்தழல் புரவியை வாழ்த்தினம் - வெவ்விய அக்கினிக்குதிரையைத் துதித்தாம்: தவமிகு வனியரைப்பாடினம் - தவமிகுந்த வன்னியர்களைப் பாடினம்; தனி நெடும் சிலையினை வாழ்த்தினம் - ஒப்பற்ற நீண்ட வில்லைத் துதித்தாம். எ-று.

இதுவும் அது.

கோச்சகம்.

பூவாழி மறைவாழி புகல்செம்பொற் சிலைவாழி
பாவாழி சுடர்வாழி பகர்சம்பு முனிவாழி
மாவாழி யகளங்க வனியர்பெருந் தமர்வாழி
கோவாழி யிவர்தனிச்செங் கோல்வாழி வாழியவே. (71)

(இ - ள்.) பூவாழி - பூமிவாழக்கடவது; மறைவாழி- வேதங்கள் வாழக்கடவன; புகல்செம்பொன் சிலைவாழி - சொல்லுகின்ற மிக்க அழகினையுடைய சிலையெழுபதென்னும் இப்பிரபந்தம் வாழக்கடவது; பாவாழி - இதன் உள்ளூறுப்பாகிய கவிகளும் வாழக்கடவன; சுடர்வாழி -(அக்கினி சூரியன் சந்திரன் என்னும்) மூன்று சுடர்களும் வாழக்கடவன; பகர் சம்பு முனிவாழி - யாவரும் புகழுகின்ற சம்பு இருடியானவர் வாழக்கடவர்; மாவாழி - இலக்ஷ்மி வாழக்கடவள்; அகளங்க வனியர் பெருந் தமர்வாழி - களங்கமில்லாத குணத்தினையுடைய வன்னியர்களது பெரியசுற்றத்தவர்கள் வாழக்கடவர்கள்; கோவாழி-இவர்களது அரசு வாழக்கடவது; தனிச்செங்கோல் வாழி வாழிய - ஒப்பற்ற செங்கோல் வாழக்கடவது வாழக்கடவது. எ-று.

சுபம்! சுபம்!!

சிலை எழுபது மூலமும் உரையும்

முற்றிற்று.

உ

வன்னிமன்னர் சரித்திரம்.

அக்கினிகுல சேரன் சரித்திரம்

சோழ, பாண்டியர்களைப் புராணங்களில் சூரிய குலமென்றும், சந்திர குலமென்றும் கூறுவதைப்போல் சேரனை அக்கினி குலமெனச் சாற்றவில்லையே என்பது சிலரது கருத்து. சேரமான்பெருமாள் நாயனாரது புராணத்திலும் குலசேகரப் பெருமாள் வைபவத்திலும் அக்கினிகுல மென்பது விபரமாய்க் காட்டவில்லை.

சேரர்கள் அங்கி குலாற்பவர் என்பதைப் "பரிதியும் மதியும் வன்னியும் முதலாம் பல்வகைக் குலத்தும் உற்பவித்த நரபதி குழாம்" எனவும், "சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர் சுடர்பாகவப்பேரன் குலத்தோர்" எனவும் வரும் வில்லி பாரதத்தாலும்,

ஜீவகசிந்தாமணி இயற்றப்பெற்ற காலத்தில் பாடிய சூளாமணி என்னும் காவியத்தில் சுயம்வரச் சருக்கத்தில்

"மழைக்கரும்புங் கொடிமுல்லை மருங்கேற
வரம்பணைந்து தடாவி நீண்ட
கழைக்கரும்பு கண்ணீனுங் கரபுரத்தார்
கோமானிக் கதிர்வேற் காளை
யிழைக்கரும்பு மிளமுளையா யெரிகதிரோன்
வழிமருக னிவனி ரீர்ந்தண்
டழைக்கரும்பின் முருகுயிர்க்குந் தாரகலஞ்
சார்ந்தவர்க டவஞ்செய் தாரே"

என்னும் செய்யுளாலும் அறிகின்றோம்.

இதனில் கரபுரம் என்பது சேரர்களின் ராஜதானியான கருவூராகும். எரிகதிரோன் வழி மருகன் என்பது அக்கினிக் கடவுளின் வழித்தோன்றலான சேரன் என்று சங்கநூலும் சாற்றுகின்றது; இதுவுமன்றி, அருணசல புராணம் பாயிரத்தில்,

"அங்கிகுலம் ஓங்கவரு வல்லாள
பூபன்றன் அரிய தொண்டும்"

என்பதில் வல்லாளனை அங்கிகுலம் = அக்கினிகுல மெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அம்மன்னனையே மேற்படி புராணத்தில்.

இத்தகை சிறப்பை வகித்திடு நகருக்
கிறைவனும் வல்லாள பூபன்
சத்திய மொழியா னற்குண முடையான்
றன்னுயிர் மன்னுயி ராகப்
பத்தியாய் நாளும் பாதுகாத் திடுவோன்
பகரருஞ் சேரனற் குலத்தோன்
அத்தன ரடியை நித்தமுந் துதித்தே
யவர்திருப் பணிசெய வந்தோன்.

என வருவனவற்றில் சேரநற்குலமெனவும் மேற்படி புராணம் நாரதர் சென்று தானம் கேட்கையில்

"தலத்தின்மேன் மகிமை யுற்ற தாபதர் புகழு மாவைம்
புலத்தினை வென்ற மோனர் புகலுமூ வகையுள் வன்னி
குலத்தினில் வருமன் னநின் கோதிலாத் தருமங்கேட்டந்
நலத்தினை யறிய வந்தோம் நவின்றிடா யென வுரைப்பான்."

என்ற கவியில் அவ்வரசனையே வன்னிகுல மெனவும் திருவண்ணமலை புராணம் பாடிய சைவ எல்லப்ப நாவலர் அவர்கள் பாடியுள்ளார்கள்.

சிவபெருமானே வல்லாள மகாராஜனுக்கு மகனாய்த் தோன்றி மறைந்தபின் அவர் கூறிய பாடலையும் கவனியுங்கள்.

சுந்தர மன்ன கேண்மோ சுதனுமக் கியாமே யானேம்
அந்தத் தின முனக்கே யறைவிதி முடிப்போ மென்று
சந்த்ரசே கரனுர் வாழ்த்திச் சார்ந்தனர் கயிலை பின்னர்ப்
பந்தமா யுலகை வேந்தன் பண்புட னுண்டு வாழ்ந்தான்.

எனச் சாற்றி மறைந்தனர். இது எட்டளவில் நின்று விட்டதா? அல்லது அன்று அண்ணமலையார் வாக்களித்த

படி அனுபவபூர்வமாய் நடைபெறுகின்றதா? என்பதைச் சிறிது ஆராய்வோம்.

சிவபிரான் வரமளித்துக் கயிலைக்கேகிய பின்பு சில காலம் வல்லாளன் திருவண்ணுமலையை ஆண்டு கொண்டிருந்து பிறகு வடநாட்டில் ஏற்பட்ட யுத்தத்திற்குச் சென்று அங்கு அம்மன்னன் இறந்துவிடுகிறுன். அச் செய்தியைத் திருவண்ணுமலையிலுள்ள அருணுசலேஸ்வரருக்குத் தெரிவிக்கிருர்கள். தைப்பூசத்தன்று ஸ்வாமி ஈசான்யதீர்த்தம்சென்று அங்குள்ள வைசியர் மண்டபத்தில் தங்கி அபிஷேகாதி வைபவங்கள் நிகழ்ந்து ஸ்வாமி புறப்பாடாகிப் போளூர்போகும் சந்திப்பில் வரும் சமயத்தில் கோயிலினின்றும் ஒருவருக்கு வெட்டியான்போல வேடம் தரித்து இழவு ஒலை எடுத்துச்சென்று ஸ்வாமியை வணங்கி அவ்வோலையைத் தருவான்.

கோயில் ஊழியர்களில் ஒருவர் அவ்வோலையை வாசிப்பார். அதில் அந்தந்த வருட மாத தேதி கிழமையை எழுதி வல்லாள மகாராஜன் வடநாட்டில் யுத்தத்திற்குச்சென்று இறந்துவிட்டதை அருணுசலேஸ்வரருக்கு தெரிவிப்பதாய் எழுதியிருப்பார்கள். உடனே ஸ்வாமி மேளதாளமின்றிக் கோயிலை அடைந்து வல்லாளன் கோபுரத்தண்டை ஸ்வாமி முன்னிலையில வல்லாளன் திருவுருவத்திற்கு அபிஷேகம் நிகழ்த்தி, தீபாராதனை முடிந்ததும் சுவாமி ஆஸ்தானம் சென்றுவிடுவார். அன்று முதல் அருணுசலேஸ்வரருக்கு ஒருகால பூஜை நீங்கலாகவும் முடிதரித்தலும் இல்லாமல் இருக்கும்.

கர்மக்கிரியை உற்சவம்.

அடுத்துவரும் மாசிமகத்தன்று திருவண்ணுமலையை அடுத்துள்ள பள்ளிகொண்டாபட்டு என்ற கிராமத்தில் ஜீவ நதியாக ஓடும் நதிக்கரையில் அருணுசலேஸ்வரர் காலையில் எழுந்தருளி வல்லாள மன்னனுக்குச் செய்யவேண்டிய கர்மக்கிரியைகளைப் பச்சைப் பந்தலின்கீழ் முறைப்படி

நிகழ்த்திவிட்டுத் தானதர்மங்கள் அளித்தபின் அண்ணாமலையார் கோயிலுக்கு எழுந்தருளுவார்.

இவ்வுற்சவத்திற் கெனச் சென்னையில் ஸ்ரீமான். பு. ராமசாமி நாயகர் அவர்களால் மூலதனமாக வைத்துள்ள சொத்தின் வரும்படியை மிகவும் விருத்திசெய்து அச்செலவிற்கெனப் பிரதிவருஷமும் சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க உப தலைவரும் மேற்படி மூலதனக் கமிட்டியின் முக்கியஸ்தருமாகிய, இராயபுரம். ஸ்ரீமான் மு. இராஜு நாயகர் அவர்கள் பெருமுயற்சியால் பணம் அனுப்பப்பட்டு வருகிறது. திருவண்ணாமலையில் உள்ள அக்கினிகுல க்ஷத்திரிய சங்கத்தார் முன்னின்று பல கிராமத்தவர்களையும் கொண்டு வெகு சிறப்பாக அவ் உற்சவத்தை நடத்தி வருகிறார்கள். அச்சமயம் சங்கற்பம் முதலியன யாவும் இம்மரபாரே செய்துகொள்ளுவது வழக்கம்.

மாசி மகத்திற்கு மறுநாள் முடிசூட்டு உற்சவம் நடப்பது வழக்கம். மாலையில் அருணாசலேஸ்வரருக்குத் தீபாராதனை யாவும் நிகழ்ந்த பின்பு சுவாமிக்கு சம்பந்தம் கட்டுவதற்கென்று அக்காலத்தில் பெரியோர்கள் ஏற்பாடு செய்திருந்த சம்பந்தனூர் கிராமத்தில் உள்ள வன்னிகுல க்ஷத்திரியர்கள் சுவாமி அம்மனுக்குப் புடவை வேஷ்டி கொண்டுவந்து சம்பந்தம் கட்டிவிட்டுப் போவது தொன்று தொட்டு வழக்கமாக இருந்துவந்ததென மந்திரபுஷ்பம் பிரம்மஸ்ரீ ஈஸ்வர குருக்கள் வன்னிகுல மித்திரனில் எழுதியுள்ளார்; நாமும் நேரில் கண்டிருக்கிறோம். இதில் சில மாறுதல்கள் இருந்தபோதிலும் நாளதும் அருணாசலேஸ்வரர் வல்லாளனுக்கு வாக்களித்தபடி கர்மக்கிரியை நடத்தியே வருகிறார். இச்சிறப்பையே திருக்கைவளத்தில்

"லிங்க உருவகற்றி நின்மலன் சேயாயுதிக்க
யென்கண் மணியேயென் றெடுக்குங்கை"

சோணசலருக்குத் துங்கமணி கோபுரமும்
நாணுமற் செய்வித்த நன்மணிக்கை காணரிய

திருக்கருமஞ் செய்யும் சிவனர் தரிக்கவுயர்ந்
திருக்குமணி வஸ்திரங் கொண்டேகுங்கை.

எனவரும் வாக்கியங்கள் நாம் பொன்னேபோல் போற்றத் தக்க ஆதாரங்களாகும்.

வன்னியரில் ஒரு பிரிவினராகிய பல்லவ அரசர்களில் கோப்பெருஞ்சிங்கன் என்ற திரிபுவன சக்கரவர்த்தி கி. பி. 1242-ல் காஞ்சிமாநகரில் அநேக தர்மங்களை நிலைநாட்டியதைப்போல் திருவண்ணுமலையில் அவன் செய்திருக்கும் அநேக தர்மங்களையும் பின்வரும் சாசனத்தால் அறியவும்.

திருவண்ணுமலை கோயில் முதற்பிராகாரத்து மேலண்டை சுவரில் 136-அடிகளைக் கொண்ட அகவற்பா.

கல்வெட்டு.

(திருவண்ணுமலை வரலாறு.)

"கார் வளர்மேனிக் கமலக் கண்ணன்
பார்வள ருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்
சொன்மறை யாக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணு ரமுதர்
அருண மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்
காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமும்
செங்கதி ரெறிக்கு மங்க சுத்தமும்
பாகு வலயமும் பைம்பொற் பலதொழில்
திருவுடை யாடையும் திருக்கழற் கிழிடும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமும்
இளஞா யிற்றி னெழில்நிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யாளப் பிறந்தான்

திருவாசி கையும் சிங்கா சனமும்
கற்பக விருக்கமும் முத்தின் பந்தலும்
ஓடரி மைக்க ணுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற் பெருமாளுக்
கினமா ணிக்கம் மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமா ளென்னும்
திருவா சிகையின் சிறந்தசெங் கதிரொளி
விளங்கு மாணிக்கமுந் துளங்கும் வைரமும்
கட்டிய பொலன்றரு கூடமஞ் சனமும்
கண்ணு ரமுதர் காமக் கோட்டத்
துண்ணு முலையா முமையவள் தனக்குப்
பருமணி நிரைத்த திருவுடை யாடையும்
வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியும் தேவியர் மேனியும்
மைஞ்ஞிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவும்
மல்லை காவலன் நிச்சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி யிவன்மகன்
வாடா வாகைக் காடவர் குமாரன்
வான்புகழ் மல்லையும் மயிலையும் காஞ்சியும்
தண்டக நாடும் தண்புனற் பாலியும்
பெண்ணையும் கோவலும் மேவுகையு முடையவன்
எண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் விறல்வீ ராசனி
கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவர்
ஆரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்

வில்புக ழுனைத்தும் மேம்படத் தங்கோன்
வாகையும் குரங்கும் விசயமுந் தீட்டிய
அடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்
கடகரி முனைமுகம் கடந்த காங்கயன்
கண்ணு ரமுதர் கனங்குழை யாகத்
தண்ணு மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையு மெடுத்துப் பாவல ருரைப்பில்
நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த
வென்றி புனைதோ ளாட்கொண்ட தேவன்
வேணு வுடையா னென்னும் பெயரான்
நீணுள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்
மருக்கமழ் கனகத் திருப்பளி யறையும்
திருவமு தேற்றும் பெருமண் டபமும்
விரிவுடன் செய்த திருக்காக் கள்ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண் டபமுஞ் செழுமலர் தொடுத்த
கண்ணிவா டாது கண்ணிமை யாது
மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுட ரெறிக்கும்
படித்தள மென்னவும் படிமூன் றுக்கும்
அடித்தள மென்னவு மடையா மன்னவர்
மலைத்தளம் பறித்தும் மன்னவர் சுமந்த
சிலைத்தளங் கொண்டு செய்தசிலைத் தளமும்
எல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும்பண் டாரமும் பிறைமுடிப் பெருமாள
இந்நாள் வந்தி ருந்தமை தோன்றவும்
முன்னு ளளந்த முறைமை காணவும்
வாட்டங் கண்ணியர் மனைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்தே

நான்முகத் தெரு நாயகி தனக்கும்
அப்படி வகுத்த வணிநெடுந் தெருவும்
செப்பிய கதிரவர் திசைவலம் போதும்
சோதி நன்மணி வீதிக ளிலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க
மலைவகுத் தனைய காங்கயன் மடமும்
கானிற் பயிலும் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
இருமருங் கிரட்ட யிமையவர் துதிக்கவும்
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்
திருநெடுந் தோப்புந் தீர்த்த மாகிய
அமுத நன்னதி யனைத்திலும் தூய
தமிழ்நாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசம்
கொண்ட காடவர் குமாரன் தோப்பும்
கவின் வெம்பரிக் கதிர்வழி தடுத்த
அவனி யாளப் பிறந்தான் தோப்பும்
தலநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்
வெம்மை நாளில் வெஞ்சுரம் நடந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயும்
அம்மை மடமு மைய னேரியும்
வெற்பகந் துளைத்தெனக் கற்புடைய ராகி
அடல்நெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்ல பெருமாள் கிணறும்
அளிமுரல் கமலமு மாம்பலும் மலர்ந்த
குளிர்புனற் காடவ குமாரன் றடாகமும்
குன்று கரையன்ன கோடியர் நெடுங்கரை
வென்றுமலை கொண்ட பெருமா ளேரியும்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்
வளஞ்சிமி ருர்க்கும் மடலிளம் பாளை
விரைகமழ் வீர ராயன் தோப்பும்
தவநெறிச் சுந்தரர் தம்பெருங் குலத்திற்

த.................ற்குச் செய்து கொடுத்த
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்
விச்............சை நிச்சங்க மல்ல னேரியும்
காங்கயன் தடாகமும் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
இவ்வகை யாவையும் செய்தன னதனாற்
பாவை பாகன் சேவடித் தாமரை
யணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணினர்
அணிந்த நீற்றின ராகம நன்னெறிப்
படிந்த நெஞ்சினர் பரசம யங்கடனை
கடிந்த வாணையர் கண்ணுதற் பெருமான்
ஆதி நாதனாய் வேடங் கொண்டு
பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்
டார்த்தெழு மன்னு ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதரர்
ஆதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவரும்
திருவரு ளிவன்மேல் வைத்தனர்
இருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே.

இதுவுமன்றி வல்லாளனைக் குறிக்கும் சாசன சுருக்கத்தைத் திருவண்ணாமலை வரலாற்றில்,

“இக்கோயிலில் ஹொய்சளவமிசத்தைச் சார்ந்த மூன்றாம் வீரவல்லாள தேவர் காலத்தில் அவருடைய தண்டநாயகர் (சேனைத்தலைவர்) சாலிவாகன சகாப்தம் 1262-ல் (கி. பி. 1340) செய்த தானங்கள் குறிக்கப்படுகின்றன. இச்சாஸனங்கள் இப்போது வல்லாளகோபுரம் என்று வழங்கப்பெறும் கோபுர வாயிற் சுவர்களில் காணப்படாமையானும் சகாப்தம் 1299 (கி. பி. 1377) ஏற்பட்ட சாஸனமே மிகப் பழையதாய் இக் கோபுர வாயிலில் காணப்படுகின்ற காரணத்தானும் கி. பி. 1340-ம் வருஷத்திற்குப் பின்னும் கி. பி. 1377-ம் வருஷத்திற்கு முன்னும் இக்கோபுர வாயில் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்கூறின வீரவல்லாள தேவரோ அல்லது அவருக்குப்பின்

வந்தவர்களோ அவரது நினைவுக் குறியாக இதைக் கட்டியிருக்க வேண்டும். மேற்கூறிய இந்த வாயில் வீரவல்லாளன் திருவாசல் என்றே சகாப்தம் 1299-ல் எழுந்த சாஸனத்தே அழைக்கப்படுகின்றது" என்று வெளியிடப்பட்டு இருக்கிறது.

அக்கினி குலோற்பவராகிய குலசேகரப் பெருமாள் தாம்பாடிய பெருமாள் திருமொழியில் "கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்று கூறுவனவற்ருல் மூவேந்தர் ஆண்ட தேசங்களுக்கும் முதன்மை பெற்று விளங்கிஞரெனத் தெரிகிறது. அதற்கேற்ப கோயம்புத்தூருக்கடுத்த பேரூர்ப் புராணத்தில்,

பரிதியொடு வெண்மதி பரிக்கவொளி நல்கும்
உருகெழு அனற்புதல்வன் ஆண்டவொரு சீரால்
இருசுட ருதித்தவர்கள் ஆண்டவிரு நாட்டின்
குருவென விளங்கியது கொங்குவள நாடு.

என்ற செய்யுளில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஒளியைத் தரும் அக்கினியில் உற்பவித்த சேர அரசர்கள் ஆண்ட சிறப்பானது சூரிய குல சோழனும், சந்திர குல பாண்டியனும் ஆண்ட தேசங்களுக்குக் குருவைப்போலும் தலைமைபெற்று விளங்கியது அக்னிகுல சேரன் ஆண்ட கொங்கு நாடு என்பதாகும்.

சேரனது இராஜ்ஜியம் சேலம், கோயம்புத்தூர், திருவனந்தபுரம், மலையாளம் முதலிய பிரதேசங்களைச் சேர்ந்ததாகும். குலசேகரப்பெருமாள் வழிவந்தவர்களே தற்காலமும் திருவனந்தபுர ராஜ்ஜியத்தை ஆட்சிபுரிந்து வருகிருர்கள். ஆகையால் அம்மன்னர்களுக்குப் பரம்பரையாக உள்ள பட்டப் பெயராவது "வஞ்சி பாலவர்ம குல சேகர கிரீடாதிபதி வன்னிய சுல்தான் ராம் ராஜ் பஹதூர் ஸிங்" என்ற அடைமொழிப் பெயருடன் அவ்வப்போது ஆண்டுவரும் அரசர்களின் பெயர்களையும் சேர்த்து வழங்குவது வழக்கமாகும்.

வன்னிய சுல்தான் எனவரும் பிரயோகம் மகமதியர் ஆட்சிகாலத்தில் ஏற்பட்டதாய் அறிகிறோம். விஜய நகரத்து அரசர்களும் அக்கினிகுலம் என்பதற்கு இராஜஸ்தான் சரித்திரச் சுருக்கம் முதல்வால்யம் 86, 87-பக்கங்களில் கூறுவனவற்றை வருண தருப்பணம் 203-ம் பக்கத்தில் விபரமாய் அறியவும். சுமார் 450 ஆண்டுகளுக்குமுன் அரசாண்ட அச்சுததேவமகாராயர், கிருஷ்ணதேவ மகாராயர் காலத்தில் புதுச்சேரிக் கடுத்த வில்லவநல்லூர் அக்னிவம்ச க்ஷத்திரியராகிய வன்னியர் மடாலயபூர்வோதிர செப்பேட்டில் அம்மன்னர்களின் பிரதாபங்களில் "வீர தீர வன்னிய பிரதாபன்" என்ற பட்டமும் சூட்டப்பட்டிருக்கிறது.

சேரன் வம்சத்தில் உற்பவித்த அரசர்களின் சரிதங்களையும் சேரன் செங்குட்டுவனாதிய பெருமக்களின் வரலாறுகளையும் இங்கு விரிக்கிற் பெருகும். கலியுகத்தில் ஆண்ட சேர அரசர்களின் பெயர்யாவும் வருணதருப்பணம் 280-ம் பக்கம் பார்க்கவும். தற்காலமுள்ள சில அனுபவ நிகழ்ச்சிகளை எடுத்தெழுதிச் சேரமன்னர் வரலாற்றினை முடித்துக் கொள்ளுவோம்.

சென்னை வன்னியகுல க்ஷத்திரிய மகாசங்கம் தோன்றிய 60-ஆண்டுகளாக ஜாதீய நூற்கள் வெளிவந்த பின்பு நம்மனோர் சேரமான்பெருமாள் நாயனாரையும், குலசேகரப் பெருமானையும் கொண்டாடத் தலைப்பட்டனர். அவற்றுள் சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில் அங்குக் குலாபிமானப் பெரியார்களாய் வாழ்ந்திருந்த ஆதிமூலராய், மகாசங்க இன்ஸ்பெக்டர் கா. ஆறுமுக நாயகர் அவர்கள் பெருமுயற்சியால் குலசேகரப் பெருமாளின் சாத்துமுறை உற்சவம் மாசிமாதப் புனர்பூசத்தில் மிகப் பிரபலமாக வன்னிகுல உத்தாரணர் கா. கோபால் நாயகர், பல்லவகுலசேகர கா. கோ. பலபத்திர நாயகர் அவர்களால் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்தது. உற்சவ மறுநாள் தேவாலய குடை,

கொடி முதலிய விருதுகளுடன் மரியாதை நிகழ்த்தி வருவது வழக்கம். அதைப்போல் ஸ்ரீமான் பலபத்திர நாயகரின் செல்வக் குமாரர் C. G. B. உலகநாத நாயகர் அவர்களால் நடந்தேறிவருகிறது. சென்னை, திருவல்லிக்கேணி, கோமளீஸ்வரன்பேட்டை, புரசை, குயப்பேட்டை, சூளை, இராயபுரம், காலடிப்பேட்டை, சின்ன காஞ்சீபுரம், முதலிய பல்வேறு இடங்களிலுள்ள விஷ்ணு ஆலயங்களில் குலசேகரப் பெருமாள் உற்சவங்கள் நம்மனோரால் நாளதும் நடத்தப்பட்டு வருகின்றன.

சேரமான் பெருமாள் நாயனுர் திருநட்சத்திரம் பல சிவஸ்தலங்களில் ஆடிமாத சுவாதி நட்சத்திரத்தில் நடந்தேறி வருகிறதெனினும் அவற்றையெல்லாம் விட மிகச் சிறந்த முறையில் காஞ்சிமாநகரில் நடந்தேறி வந்ததுதான் போற்றத்தக்கதாகும்.

காஞ்சீபுரம் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திலின்றும் ஆடிமாதம் சுவாதி நட்சத்திரத்தன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கையிலைக்கு எழுந்தருளும் காட்சியாய் வெள்ளை யானையின்மீது அமர்ந்து திருவீதியுலா வருவதும் கீழண்டை ராஜ வீதியில் உள்ள வன்னி குலோபகாரி பு. தியாகராய நாயகர் அவர்கள் சத்திரத்தை சுந்தரமூர்த்தி சுவாமிகள் அணுகியதும் தீபாராதனை நிகழ்த்திப் புறப்படும் சமயம் பின் தொடர்ந்து வெள்ளைக் குதிரையின்மீது சேரமான் பெருமாள் நாயனுர் கைலைக்குச் செல்லும் காட்சி மிக்க மாட்சியாக காண்போர் களித்துப் பக்திப் பரவசம் ஆகும் வண்ணம் நிகழ்ந்துவந்தது.

அன்று நம்மவர் சத்திரத்தில் மகாபிஷேகம் மகேஸ்வர பூஜை ஆகியவைபவங்களுடன் 20-ஆண்டுகளாக மௌலிவாக்கம் சம்புகுல வள்ளல் ஸ்ரீமான், பா. ல. முருகேச நாயகரவர்கள் நடத்திவந்தார்கள். அவர் சிவபதம் அடைந்தபின்பு அதைக் கவனியாமல் விட்டிருப்பதால்

சம்புகுலவள்ளல்

ஸ்ரீமான். பா. ல. முருகேச நாயகர் அவர்கள்

"தன்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வரலும்"

என்ற வாக்கியத்தைப் பின்பற்றி நடத்துவதே நமது கடமையாகும்.

ஆங்காங்குள்ள சைவ வைணவ ஆலயங்களில் சேரமான்பெருமானுக்கும், குலசேகராழ்வாருக்கும் அபிஷேகாதி உற்சவங்கள் நிகழ்த்துவதே சிறந்ததென நமது பெரியோர்கள் நமக்கு வழிகாட்டிப் போயிருக்கிறார்கள். அவ்வாறே நாமும் நடத்திப் புகழடையப் பிரார்த்தித்துச் சோழ மன்னர் சரித்திரத்தை ஆரம்பிப்போம்.

சூரியகுல சோழ மன்னர் சரித்திரம்.

மண்டலாதிபதிகளாய் நீதிசெலுத்திப் புகழ்பூண்டு சோழ தேசத்தை யாண்டவர்கள் சூரிய வம்ஸத் தோன்றல்களாகிய சோழர்களேயாகும். அவர்களே காவிரி யிருமருங்கும் கரை யேற்படுத்தி இந்நாடு வளம்பெறச் செய்தவர்களாவார்கள். அதனால் கரிகாற் சோழனுக்குக் காவிரி கரைகண்ட சோழனெனவும் பெயருளது. எனவே அப்பர் சுவாமிகளும் தனது தேவாரத்தில்,

"கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே"

என்று சோணாடு முழுவதும் பல கோயில்களைக் கட்டிய கோச்செங்கண்ணனது பிறப்பைக் கூறிப்போந்தனர். இக் கருத்தையே வன்னியர்புராணத் திருத்தலச் சருக்கத்தில்,

"வன்னி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர் தந்
துன்னு நல்லருடோய்ந்திட்டுத் தூய்மையோர்
மன்னு காவிரி வீறுற்ற மன்னர்வாழ்
பன்னு சோழநன் னாட்டின்கண் பல்கிற்றே"

எனவரும் பாடலால் அறிக.

இவ்வாறு தெய்வத் திருநதிகளையும், நந்தவனங்களையும், தேவாலய மடாலயங்களையும் நமது மரபுதித்த

சோழமன்னர்கள் ஏற்படுத்தியதால் தற்போது சோழ தேசம் எப்படி விளங்குகிறதெனில், விளத்தொட்டி புராணம் கூறுவதுபோல்,

“புண்ணிய மூர்த்தியெங்கும் புண்ணிய தானமெங்கும்
புண்ணிய தீர்த்தமெங்கும் புண்ணிய சாலையெங்கும்
புண்ணிய மறைகளெங்கும் புண்ணிய விருப்பரெங்கும்
புண்ணிய போகமெங்கும் பொலிவது சோழநாடு.”

என்ற தன்மையில் புலவர் வாக்கிற்கு இலக்காய்ப் பிரகாசிக்கிறது.

இத்தகைய தெய்வீகம் பொருந்திய சோழ நன்னாட்டில் மூவரால் பாடப்பெற்ற தலங்கள் 190-ஆகும். வடநாடு, தென்னாடு யாவும் சேர்ந்து தேவாரம் பெற்ற தலங்கள் 274-ல் சோழ தேசத்தில் 190-போக மிகுதி 84-இதர தேசங்களிலிருக்கின்றன. அருமையும் பெருமையும் வாய்ந்த மேற்படி தலங்களில் தலைமைபெற்று விளங்குவது சிதம்பரம் மகா க்ஷேத்திரமேயாகும். அதற்குக் கோயில் எனவும் ஒரு பெயருண்டு. அத்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள நடராஜப் பெருமானே சோழவம்சத்தினருக்குக் குலதெய்வமாய் விளங்குகிறார். வன்னியர்புராணம் திருத்தலச் சருக்கத்தில்,

“இத்துணை நலன தார்ந்த வெழிலுறுஞ் சோழ நாட்டிற்
பத்திசால் புலிக்கா லோனும் பதஞ்சலி மெய்யன் றானுஞ்
சித்தம துருக நித்தஞ் சிவகாம வல்லி காண
நித்தனார் நடிக்குந் தூய சிதம்பரம் நின்ற தன்றே.”

எனக் கூறப்பட்டுள்ளது.

சோழர் தம் குடிக்கே தொன்மைப் பதியாய் விளங்கும் சிதம்பரத்தல வரலாற்றினையும், அக் கோயிலை ஸ்தாபித்த சிங்கவர்மன் என்னும் இரணியவர்மச் சோழனது பக்தியையும் கீர்த்தியையும் கோயிற் புராணத்திற் உள்ளதை இங்குச் சுருக்கிக் கூறுவோம்.

சூரிய வம்சமாகிய
இரண்ய வர்மச்சோழ சரித்திரச் சுருக்கம்.

ஆதியிலிந்தப்பூமி காடுகொண்டிருந்தகாலங்களில் கவுடதேசத்து ராஜகுமாரனாகிய சிங்கவர்மனானவன் தபசு மார்க்கமாய் தென்றேயத்தை நாடிவந்து முதல் ஸ்ரீசைலம் காளஸ்திரியில் நின்று பூசித்துப் பிற்பாடு காஞ்சிபுரஞ் சேர்ந்து ஏகாம்பரநாதரைப் பூசித்துத் தில்லைவனமான சிதம்பரம் போய் வியாக்கிரபாதருடைய தரிசனம் பெற்றுப் பின்பு அவரால் பதஞ்சலிமாமுனிவரையுந் தரிசித்து அவர்களால் நடேசர் கடாக்ஷம்பெற்றுச் சிவகங்கையில் மூழ்கித் தனது வெளுப்பாகிய சிங்கவர்னம்போய்ப் பொன்னிறமான தேகத்தையடைந்து இரணியவர்மனென்று மறுபெயர்பெற்று அவ்விடத்தில் வசிக்கும்போது தன் கவுடதேசத்தரசனான தகப்பனிறந்த பிற்பாடு தன் குலகுருவான வசிஷ்டராற் றன்தேசம்போய்ச் சேர்ந்து தனக்குண்டான நூதனகாட்சிகளை யவர்களுக்குச் சொல்லித் தம்பிமாருடனும், அனந்தராஜ குடும்பங்களுடனும், அனந்தமூழியக்காரருடனும், இரத-கஜ-துரக-பதாதிகளான நால்வகைச் சேனைகளுடனும், யாகம் பண்ணிக்கொண்டிருந்த தில்லைமூவாயிரரிஷிகளுடனும் மேற்படி சிதம்பரம்வந்து சேர்ந்து அந்தக் காட்டைச் சீர்திருத்தி நாடாக்கிச் சபாநாதருக்காலயமும், தில்லைமூவாயிரவர்களுக்கு மூவாயிரம் வீடுங்கட்டினதுமல்லாமல் திருவிழாவும், அனந்திருப்பணிகளுஞ் செய்து தனக்கிருப்பிடமாகத் தலத்துக்குச சமீபத்தில் கீழ்புறம் பித்தர் புரத்தில் படைவீடுகட்டி அதிற்றானிருந்து மேற்படி சபாநாயருக்கு விக்கிரக முதலானதுஞ் செய்வித்துத் தன் தம்பிமாரைப் பூர்வீக கவுடதேசத்துக்குப்பட்டங்கட்டி அரசனாக்கியனுப்பிவைத்துத் தனக்கு மேற்படி வியாக்கிரமர் - பதஞ்சலி - தில்லைமூவாயிரவர்களால் மேற்படிச் சபாநாயகர் வீற்றிருக்கும் பஞ்சாக்ஷரப் படியின்மேல் வைத்துச் சிதம்பரம் நடராஜப்பெருமானுக்குச்செய்வதுபோல் அபிஷேக

முதலானதுஞ் செய்து இத்தேசத்துக் கதிபதியென்று கிரீடமுந்தரித்து-வாள்-முதலான ராஜசின்னங்களும் பழைய படி பெற்று மேற்படிச் சபாநாதராகிய பரமசிவத்துக் குரிய - ஆத்திமாலை - சங்கு - திருச்சின்னங் காவிக்கொடி முதலானதும் பெற்றுப் புலிப்பதியாகிய சிதம்பரத் துக் கரசனென்று தோன்றும்படி புலிக்கொடி யுரிய தென்று ஷெயாரால் கொடுக்கத் தான்பெற்றுப் பஞ்சா க்ஷரமாகிய திருநீற்றைத் தரித்துத் திருநீற்றுச் சோழ னென்கிற மூன்றுவதுபெயரைக் கொடுக்கப்பெற்று கடவு ளுக்குச்செய்யும் சர்வமரியாதையும் செய்யப்பெற்று ஆணை யின்பேரில் அமர்த்தி நகரபிரதக்ஷணம் வருங்காலையில் கர்ப்பூர ஆலாத்தி - தூபகலசம் - ஆலவட்ட முதலான மரி யாதைகளும் ஷெயாரால் செய்யப்பெற்றுத் தன்னரசுக் குரிய ஸ்தானத்திருந்து அரசுசெய்தது மல்லாமல் தன் வம்ஸத்தார் என்னகுற்றஞ் செய்தபோதிலும் பொறுத் துத் தங்கள் பரம்பரை வழியாய் அடிமைகொண்டு திருப் பணி வேலையை நடத்திக் கொள்ளும்படி மேற்படி சபா நாயக ரிடத்தில் பெற்ற வரத்தைப்போல் நாளது வரையி லும் இச் சோழன் சந்ததியாருக்குச் சிதம்பரத்தில் பஞ் சாக்ஷரப் படியின் பேரில் வைத்து முடி தரித்து ஆதிகாலத் திற்செய்த சர்வ மரியாதைகளும் பிசகாமல் சீராய் நடத்தி வருகின்றார்கள். ஆதியில் சிதம்பரத்துக்குக் கீழ்புரம் பித் தர்புரத்தில் கட்டப்பட்ட அரண்மனையில் அந்தச் சந்ததி யார் பேரரசு போய் விட்டும் சிற்றரசராயிருந்து வருகிறார் கள். தங்கள்கோத்திரம் பாஸ்கரகோத்திரமென்றும்,சூர்ய வம்ச மென்றும், வன்னியரென்றும், செம்பியரென்றும், சோழனென்றும், வழங்கி வருகிறார்கள். தில்லைமூவாயிர வர்களுடைய சந்ததியாரும் இரணியவர்மச் சோழனால் தங்களை யழைப்பித்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

இச் சரித்திர ஆதாரங்களைக் கோயிற் புராணம் திரு விழாச் சருக்கத்தில் விபரமாய் அறியவும். இரணியவர்மச் சோழன் நடராஜப் பெருமானை வேண்டிப் பிரார்த்தனை புரிந்த பாடலை மட்டும் விளக்கி மேலே செல்வோம்.

திருவிழாச்சருக்கம்-கவி.

"ஈறில்பெருந்தனமென்னவை நின்னவையிப்பார்மே
லாறினிலொன்று கொளஞ்சினிலொன்று கொளத்தா
பேறுபிறந்தடியேன் மரபார்கள் பிழைத்தாலும் [விப்
கூறருமன்புகொடுத்தடிமைப் பணிகொள் கென்றான்."

என்றது:—என்னுடைய பூர்வார்ச்சிதமான முடிவில்லாத சகல ஐசுவரியமும் தேவரீருக்காகக்கடவன; இந்தப் பூமியிலே நீதியோடு ஆறிலொருகடமை கொள்கிறதை விட்டு ஐந்திலொருகடமை கொண்டு அடியேனுக்குப் பின்னால் வரப்பட்ட என்சந்ததியார் என்னகுற்றஞ் செய்தாலும் பொறுத்தருளிச் சொல்லுதற் கரிதாகிய பத்தியை யுண்டாக்கி அடிமைத்தொழில் கொண்டருள்வீரென்று இரணியவர்மன் வேண்டிக் கொண்டா னென்பதாம்.

இது காறும் கூறியது புராணக் கருத்தாகும், இனி சரித்திர சாஸனங்களைக் கவனிப்போம்.

சூரிய வம்சமாகிய இட்சுவாகு வம்சத்தில் வந்த 55 அரசர்கள் வரிசைக் கிரமமாக ஆண்டதை வருண தருப்பணம் 202-ம் பக்கம் பார்க்க. அதன்பிறகு சோழ வம்சத்திற்கு மூலபுருடனாகிய விஜயாலயன் வம்ச வழியில் 28-சோழர்கள் வந்த வரலாற்றினையும் அவரவர்கள் ஆண்ட காலத்தையும் வருண தருப்பணம் 230-ம் பக்கம் காணவும். அவையாவும் இங்கு விரிக்கிற் பெருகும்.

அவர்களில் 2-வது பராந்தகன் மகளாகிய குந்தா தேவியைப் பல்லவ அரசனாகிய வாண்டையதேவன் மணம் புரிந்து கொண்டானென சரித்திரம் கூறுகிறது. இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியவிஷயம் கி. பி. 985-ல் பல்லவர்களும் சோழர்களும் கலப்புற்றுப் பல்லவச் சோழர்களென்றும், சோழ பல்லவர் எனவும் வழங்கி வந்ததைப் பின்வரும் சாஸனத்தால் அறிந்து கொள்ளவும்.

காஞ்சீபுரத்திற்கு வடக்கே 30-மைல் தூரத்திலுள்ள திருவாலங்காடு நடராஜர் ஆலய இரண்டாவது பிராகாரத்தின் கீழண்டை மதிலிலுள்ள கல்வெட்டு.

[கி. பி. 1066-ல் ஏற்பட்டது.]

× × × கோவிராஜகேசரி வர்மரான உடையார் ஸ்ரீ. ராஜேந்திர சோழதேவற்கு யாண்டு இரண்டாவது ஜயங் கொண்ட சோழ மண்டலத்து மணவூர் கோட்டத்து புரசை நாட்டுச் சிவபுரத்துப் பக்கலிருக்கையில் திரு வமுது செய்தருளாயிருந்து மென்மலே பழையனூர் திரு வாலங் காடுடைய மகாதேவர்க்கு இவ்வூர் நிலத்திலே ராஜேந்திரசோழபாடி என்னும் பெயரால் இருபத்தைஞ்சு சங்கரபாடி குடியேற்றி பதினஞ்சு திருநந்தா விளக் குக்கு வேண்டும் எண்ணெயாட்டி எரிக்கப் பண்ணவேண் டுமென்று நங்கன்மிகளில் வீரசோழ பல்லவரையன் நமக் குச் சொன்னமையில் இருபத்தஞ்சு சங்கரபாடி குடியும் இத்தேவர்க்கு திருவிளக்கு எண்ணெ யாட்டக் கடவார்க ளாக நாமே குடுத்தோமென்று திருமந்திரவோலே அரு மொழி விழுப்பாளர் எழுத்தினுற் புகுந்த திருவாய்க் கேழ் விப்படி இத்தருமத்துக்கு அழிவு செய்வார் திருவாணை மரத்தாரென்று கல்வெட்டுகவென் அதிகாரிகளே நாங் கொற்றக் கடம்பன் ஏவ இரங்க நாரான வீரசோழ பல்லவ ரையர் × × × என்பதாம்.

இத்தகைய சோழ வம்சத்தில் மிகப் பிரபலமான வனும் பெரிய புராணத்திலும் சிதம்பர புராணத்திலும் கோயில் புராணத்திலும் போற்றப்படுபவனும் சைவ உல கம் குருமணியாய் உச்சிமேற் கைகூப்பித் தொழக்கூடியவ னுமாகிய முதலாவது குலோத்துங்கன் சரித்திரமே நமது குலத்தவரனைவரும் பொன்னேபோல் விரும்பிப் படிக்கத் தக்கதாகும்.

இம்மன்னன் கி. பி. 1070 முதல் கி. பி. 1118-வரை யில் திரிபுவன சக்ரவர்த்தியாய் எங்கும் தனியரசு செலுத்

தியவன் என சரித்திர ஆராய்ச்சி வல்லோர் பலர் முடிவு கட்டி யிருக்கிறார்கள். இவன் ஒருகாலத்துக் காஞ்சிமா நகரில் வீற்றிருக்கும் சமயத்தே பலதேச மன்னர்களும் கப்பம் கட்ட, வடகலிங்க மன்னன் மட்டும் கப்பம் செலுத் தாதிருப்பதை அறிந்த குலோத்துங்கன் சீறிஎழுந்து கலிங் கத்தின்மீது போருக்குப் புறப்பட அருகில் மந்திரியாக வும், சேனைத்தலைவனாகவு மிருந்த கருணாகரத்தொண்ட வன்னியன் சோழனை அடக்கிவிட்டுத் தானே பலவித சேனைகளோடும் கலிங்கத்தின்மீது போருக்குச் சென்று ஜெயம்பெற்றுத் திரும்பினான்.

அக்காலத்தில் ஆயிரம் யானைப் படைகளை வென்ற வன்மீது பரணிபாடுவது வழக்கமாகையால் ஜெயங் கொண்டாரென்னும் புலவர்பெருமான் கலிங்கத்துப்பரணி என்னும் பிரபந்தத்தைப் பாடியுள்ளார். ஜெயம் பெற்ற வன் கருணாகரச் சோழன் ஆனாலும் அவன் தலைவனாகிய குலோத்துங்கனுக்கே அச்சிறப்பு அனைத்தும் உரியதாகை யால் அவ்வாறே பாடி இடையிடையே கருணாகரன் வீரத் தையும் அவன் மரபு வன்னியர் பல்லவர் சோழர் என்ப தையும் குறிப்பிட்டுள்ளார். அதனை சிலை எழுபது 68-வது பாடலில் விளக்கியுள்ளோம்.

கலிங்கத்துப்பரணி கடைத்திறப்பு 43, 44-வது செய் யுட்களில்

"காஞ்சியிருக்கக் கலிங்கங் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ" என்றும்,
"கலிங்க மெறிந்த கருணாகரன்றன்
களப்போர் பாடத் திறமினோ" என்றும்

வருவனவற்றால் காண்க.

முதலாவது குலோத்துங்கசோழன் மகா சிவபக்தன். அவனிடத்தில்தான் தெய்வச்சேக்கிழார் மந்திரியாக இருந் தது. அவரது சிவபக்தியைப் பெரிதும் அறிந்த அம்மன் னன் அவரை மந்திரித்தொழிலினின்றும் விலக்கிப் பெரிய புராணத்தைப் பாடும்படி ஏற்பாடு செய்தார். அக்குலோத்

துங்க சோழனுக்கு அநபாயன், அபயன், ஜெயதரன், கோவிராஜ கேசரிவர்மன், திருநீற்றுச் சோழன் முதலிய அனந்தம் பட்டப் பெயர்களுண்டு. இவ்வரசன் சிதம்பரம் நடராஜர் சந்நதியில் பொன் ஓடு போட்டதை அக்கோயில் உள் பிராகாரத்து வடசுவரில் கண்ட சாசனமாவது:-

சாசனப் பாடல்.

“நானிலத்தை முழுதாண்ட ஜயதரர்க்கு
நாற்பத்து நாலாண்டில்
மீனணிகழ் நாயற்று வெள்ளிபெற்ற
உரோசனி நாளிடபம் போதல்
தேனிலவு பொழிற்றில்லை நாயகர் தங்
கோயிலெலாம் செம்பொன் மேய்ந்தான்”

எனவரும் பாடலைச் சோழவம்ச சரித்திரத்தில் பார்க்க.

பெரிய புராணத்தில் போற்றப்படும் அநபாயச் சோழன், வேளாளர் மரபுதித்த சேக்கிழார் சுவாமிகளுக்கு உத்தமச் சோழப் பல்லவன் என்ற உயர்பட்டம் கொடுத்தான் என்பதைச் சேக்கிழார் புராணம் 8-வது செய்யுளில்

அத்தகைய புகழ்வேளாண் மரபிற் சேக்கிழார்
குடியில்வந்த அருண் மொழித் தேவர்க்குத்
தத்துபரி வளவனுந்தன் செங்கோ லோச்சுந்
தலைமையளித் தவர்தமக்குத் தனது பேரும்
உத்தமச்சோ ழப்பல்லவன்றானென் றுமுயர்பட்டங்
கொடுத்திட வாங்கவர் நீர் நாட்டு
நித்தனுறை திருநாகேச் சுரத்தி லன்பு
நிறைதலினுன் மறவாத நிலைமை மிக்கார்

என்பதனுலறிக.

மேலே கூறியபடி சோழவம்சமும் பல்லவர் மரபும் கலந்து சோழ பல்லவர் என வழங்கப்பட்டதற்கு இதுவே சான்றாகும். இல்லையெனில் உத்தமச் சோழன் என்றாவது அல்லது உத்தமப் பல்லவன் என்றாவது பட்டம் வழங்கியிருத்தல் வேண்டும்.

சேக்கிழார் புராணம் கூறுவதுபோல் பெரிய புராணம் பாடிமுடித்ததும் தில்லைச் சிற்றம்பலத்தில் பல புலவர் பெருமக்களையும் சிவனேசச் செல்வர்களையும் பெருஞ் சபை கூட்டி அதனை அரங்கேற்றம் செய்ததுமன்றி அப் புராணத்தையும் தெய்வச் சேக்கிழாரையும் ஆனைமீது ஆரோகணிக்கச் செய்து அநபாயச் சோழன் உடனிருந்து ஊர்வலம் செய்வித்தான்.

அம்மன்னனால்தான் சிவ பக்தியும் சைவ சமயமும் மிகவும் பிரபலமாய் ஓங்கி வளர்ந்தது. அதனால்தான் சிதம்பர புராணத்தில் பாயிரம் 11-வது கவியில்

"பரிதிகுலந் தனிலுதித்துப் பரசமைய
விருளகற்றிப் பரம ணடும்
பொருவருபே ரம்பலமுங் கோபுரமு
மாலயமும் பொன்வேய்ந் துண்மைச்
சுருதியுடன் சைவநெறி தழைந்தோங்கத்
திருநீற்றுச் சோழ னென்னுங்
குருமணியா முடிபுனைந்த குலோத்துங்க
வளவனருள் குறித்து வாழ்வாம்"

இக்கருத்தை அனுசரித்தே உமாபதி சிவாச்சாரியார் கோயிற் புராணத்தும் கூறியுள்ளார். முதலாவது குலோத்துங்கன் மெய்க்கீர்த்தியைக் கூறும் சோழவம்ச சரித்திர சாசனப் பாடலாவது:—

மெய்க்கீர்த்தி

புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
விக்கலன் சிங்கணன் மேல்கடல் பாயத்
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி
விஜயஹிஷேம் பண்ணி வீரசிம்மா சனத்து
புவன முழுதுடையாளோடும் வீற்றிருந் தருளிய
கோவிராஜகேசரி பன்மரான சக்ரவர்த்திகள்
ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு:-

பூந்தமல்லிக் கடுத்த குன்றத்தூரில் சேக்கிழார் பெருமானுக்கு வைகாசி மாதத்தில் நிகழும் 10-நாள் உற்சவத்தில் 9-வது நாளில் சோழ மன்னருடன் சேக்கிழார் வீதி வலம்வரும சிறந்த உற்சவத்தை மௌலிவாக்கம் சம்புகுல வள்ளல் ஸ்ரீமான் பா. ல. முருகேச நாயகர் அவர்கள் நடத்தி வந்ததும் இங்குக் குறிப்பிடத் தக்கவிஷயமாகும்.

சிதம்பா மகாக்ஷேத்திரத்தில் நடைபெறும் மார்கழி மாதம் திருவாதிரை உற்சவத்தின் 9-வது நாளிலும் ஆனித் திருமஞ்சன உற்சவத்தின் 9-வது தினத்திலும் பொன்னம்பலத்தில் ஸ்தாபித்துள்ள குலோத்துங்க சோழனது திருவுருவத்திற்குமுன் மண்டகப்படி தீபாராதனையாவும் சிதம்பரம் தாலுக்காவிலுள்ள படையாட்சியார்களால் நாளதும் நடைபெற்று வருகிறது.

கோயிற்புராணம் இரணியவர்மச் சோழனது சரித்திரத்தில் அம்மன்னன் கேட்டுக்கொண்டபடி நாளதும் சோழ வம்சத்தினருக்கு நடைபெற்றுவரும் முடிசூட்டி வைபவத்தைச் சுருக்கிக் கூறுவோம்.

இற்றைக்கு 75-வருடங்களுக்குமுன் ஜாதி சங்கிரகச் சாரம் என்னும் கிரந்தம் வெளிவந்த காலத்தில் பித்தர் புரத்தில் ஜமீன்தாரராக வாழ்ந்தவர் இராம பத்திர சூரப்ப சோழனர் எனவும் அவருக்கே பஞ்சாட்சரப்படி அபிஷேகமும் ஆயிரக்கால் மண்டபத்தில் முடிசூட்டு விழாவும் நிகழ்ந்ததாக மேற்படி நூல் 214-ம் பக்கத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது.

அதன்பிறகு அம்மரபுதித்த பித்தர்புரம் ஜமீன்தார் ராஜராஜ ஸ்ரீமான் சாமிதுரை சூரப்ப சோழனருக்கு நடந்த மகுடாபிஷேக வைபவமே மிகச் சிறந்ததாகும். அதற்கு மகா சங்கத்தாருடன் யானும் சென்றிருந்து தரிசிக்கும் பேறுபெற்றேன். அக்காலத்தில் தென்னாற்காடு ஜில்லா வன்னிகுல க்ஷத்திரிய சங்கம் பிரபலமாக நடந்து வந்ததால் அச்சங்க காரியதரிசி ஸ்ரீமான் A. வைத்திய லிங்கராஜா அவர்களது அரிய பெரிய முயற்சியினல்

சிதம்பரம் நடராஜப் பெருமான் பஞ்சாக்ஷரப்படியில்
அபிஷேகமும், ஆயிரக்கால் மண்டபத்தில் முடி சூட்டப்
பெற்றவருமான பித்தர்புரம் ஜமீன்தார் ராஜராஜ ஸ்ரீமான்

சாமிதுரை சூரப்ப சோழனுர் அவர்கள்

பலரும்கூடி அதை மிக்க விசேஷமாக நடத்திவைத்தார்கள். 1908-ம் ஞூ செப்டம்பர் மாதம் 5-ந் தேதி வெளியான அக்னிகுலாதித்தன் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதை இங்குச் சுருக்கி எழுதுவோம்.

பித்தர்புரம் ஜமீன்தார் ராஜராஜ ஸ்ரீமான்

சாமிதுரை சூரப்ப சோழனர் அவர்களுக்கு நிகழ்ந்த மகுடாபிஷேக வைபவச் சிறப்பு.

விருத்தம்

பார்பரவத் தில்லையாலய மியற்றிப்
பருத்தமணி முடிபூண்டு செங்கோலேந்தி
பேர்பரவக் காக்குமிர ணியவன்மப்பேர்
பெறுசோழன் சந்ததியி லினிதுபோந்த
சீர்பரவப் பித்தபுரத் துரைசூரப்பன்
சிற்சபையைந் தக்கரமாம் படியின்மீதே
ஏர்பரவ மகுடாபி டேகங்கொண்டு
இணையிலாப் பவனிவந்த தியம்பக்கேண்மின்.

கீலகஞூ ஆவணிமீ 15உ ஆதிவாரங்காலையில் சிதம்பர தேவஸ்தான தென்னண்டை மாடவீதிக்குச் சமீபமாக வீதியில் பந்தல்களிடப்பட்டு விருதுக்கொடி முதலியவைகள் கட்டப்பட்டு அலங்காரமாயுள்ள மேற்கூறிய துரையவர்களின் சொந்தமாளிகைகளிரண்டிலும் ஷ துரையவர்களும் அவருடைய திருத்தம்பியார் முதலியவர்களும் பித்தர்புரத் தமது அரண்மனையினின்றும், இன்னும் பிரபல பிரகிருதிகளாகிய வன்னிய அன்னிய சீமான்களும் சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மஹா சங்கத்தினரும் தென்னாற்காடு ஜில்லா சங்கத்தினரும் மற்றக்கிளைச் சங்கத்தினரும் தத்தம நகர்களினின்றும் வந்திறங்கியிருந்தனர். அன்றியுமிவர் போஜனாதி யுபசாரங்கள் நடப்பதற்காகவும் இவர்களின் உடை முதலியவைகளை வைப்பதற்காகவும் அடுத்தாப்போலுள்ள ஒரு பங்களாவில் விசாலமான பந்தலிடப்பட்டிருந்தது.

இஃதிங்ஙனமிருக்க அன்று காலை 9-மணிக்கு, இனியித்துரையவர்களுக்குப் பட்டமகிஷியாகப் போகிற பரூர் ஜமீன்தார் பாவாசா வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராயதுரை அவர்களின் பரம்பரையில் உதித்த கன்னிகையை யழைத்துக்கொண்டு அக்கன்னிகையின் தமயன் முதலாயினோர் தில்லைமாகாளியம்மன் கோவிலுக் கருகாமையிலொரு மாளிகையில் வந்திறங்கியிருப்பதாகக் கேள்வியுற்று அவர்களை யுபசரித்தழைத்து வருவதற்காக, யானை ஒட்டகம் குதிரை முதலியவாகனங்களோடும் பலவிருதுக் கொடிகள் குடைகள் மகரதோரண முதலியவற்றோடும் பலவாத்தியக் கோஷங்களோடும் ஷெ துரையவர்களின் திருத்தம்பியார் ஒரு சிவிகையிலேறிக்கொண்டு மற்றொரு சிவிகையில் அக்கன்னிகையை ஏற்றிக்கொண்டு வருவதற்காகத் தங்கூடவரச்செய்து சகல ஜனங்களுஞ் சூழ்ந்துவர அப்பெண்வீட்டார் இறங்கியிருந்த விடஞ்சென்று அவர்களுக்குச் சகலோபசாரங்களுஞ் செய்து அக்கன்னிகையைச் சிவிகையிலேற்றிக்கொண்டு வந்து தமது மாளிகையின் வாசறபடியண்டை அக்கன்னிகையின் சிவிகையை வைத்துத் திரையிட்டு உள்ளே யழைத்துக்கொண்டனர்.

சுமார் 10-மணிக்கு, மகுடாபிஷேகத்தினிமித்தம் ஷெ துரையவர்கள் சிதம்பர தேவஸ்தானத்திறகுப் போவதற்காக, இரத்தின குண்டல கேயூர அஸ்தகடக மகர கண்டியாதி ஆபரணாலங்கிருத பீதாம்பர தாரியாய் ஜெயவிஜயீபவா வென்றேத்த பல அதிர்வெடிகள் சப்திக்க வீதியில்வந்து அழகிய சிவிகையிலேறினர். உடனே புதிதாய் இந்திரபட்டம் பெறப்போகிற தேவேந்திரனை தேவசபைக்கு அழைத்துக்கொண்டு போகவந்த தேவ பெண்களைப் போல சிலகணிகைமாதர்கள் சிவிகையின் பக்கலிலே வந்தனர். உடனே இரண்டு பஞ்சவர்ண பூசக்ர குடைகள் பிடிக்கப்பட்டன. இருபுறமும் வெண்சாமரைகளும் ஆலவட்ட தாலவட்டங்களும் வீசப்பட்டன. இருபுறமும் அருகு தீவட்டிகள் பிடிக்கப்பட்டன. அதற்கப்பால், கத்திகேடகம் கட்டாரி துப்பாக்கி முதலிய ஆயுதங்

கள் பிடிக்கப்பட்டன. புலிக்கொடி, விற்கொடி, மச்சக் கொடி, சிம்பக்கொடி, அக்கினிக்கொடி, பஞ்சவர்ணக் கொடி, ரிஷபக்கொடி, கருடக்கொடி, அனுமக்கொடிமுத லிய விருதுக்கொடிகளும் மகரதோரணாதிகளும் தேவஸ் தான வெண்பட்டுக்குடைகளும் பிடிக்கப்பட்டன. அதற் கப்பால் தங்க நாகசுரங்களும் தவளச்சங்கம் டவுல் முத லியவைகளும் வாசிக்கப்பட்டன. அதற்கப்பால் பாண்டு வாத்தியங்களும் அதற்கப்பால் டிரம் வாத்தியங்களும் வாசிக்கப்பட்டன. அதற்கப்பால் எக்காளம், திருச்சின் னம், கோணத்தாரை நீளத்தாரை முதலியவைகள் வாசிக் கப்பட்டன. அதற்கப்பால் அஸ்வங்கள்மீதில் டங்காக்க ளடிக்கப்பட்டன. அதற்கப்பால் ஒட்டகங்கள்மீதில் பேரி கைகளடிக்கப்பட்டன. அதற்கப்பால் கடைசியாக முக படா முதலிய அலங்காரத்தோடும் மேலே யேறிய மாவுத் தர்களோடும் இரண்டு யானைகள் சென்றன. இத்தியாதி வைபவத்துடன் தாம் தாமென்று தேவஸ்தான தென் னண்டை கோபுர வாயிலுக்கருகாமையிற் சென்று சிவி கையைவிட்டிறங்கி அச்சிவிகையை மாத்திரம் அவ்விடம் நிறுத்திவிட்டு மற்றக் குடை கொடி சாமரம் அருகுதீ வட்டி முதலிய சகல விருதுகளோடும் அத்தேவாலயத்திற் குள்ளே பிரவேசித்தனர்.

உடனே புதிய இந்திரப்பட்டம் பெற வருகிற தேவேந்திரனைத் தும்புரு நாரதாதி தேவரிஷிகள் எதிர் கொண்டழைப்பது போல அத்தில்லைவாழ்ந்தணர்கள், பல புஷ்ப கந்தாதிகளுடன் எதிர் கொண்டழைத்து (அவ் விந்திரனுக்குத் தேவகணநாதருடைய தரிசனஞ் செய்விப் பது போல) அத்தேவஸ்தானத்திலுள்ள முக்குறுணிப் பிள்ளையாரென்கிற கணநாதரது சேவைசெய்வித்து அங்கு மாலை மரியாதைகள் செய்வித்தனர். பிறகு கிழக்கு உள் கோபுரவாயிலாகச் சென்று அவ்வாலயத்திலுள்ள சிற் சபை பொற்சபை முதலிய பஞ்ச சபைகளுக்குள் தேவ சபைக்கேகி (புதிய பட்டம்பெறப் போகிற இந்திரன் அத் தேவர்களோடு ஆலோசித்து அவர்களனுமதிபெற்று அத்

தேவர்களுக்குத் தான் சன்மானஞ் செய்ய, அத்தேவர்கள் அவ்விந்திரனுக்குப் பழைய இந்திரனணிந்து கொண்டிருந்த ஆபரணாதிகளைக் கொடுக்கத் தான்பெறுவது போல) இத்துரையவர்கள் அத் தில்லைவாழந்தணர்களுடன் ஆலோசித்து அவர்களனுமதி பெற்றபின் அவ்வந்தணர்களுக்குப் பட்டுவேஷ்டி உத்தரீயங்களும் சொர்ணதக்ஷிணை தாம்பூலாதிகளுங் கொடுத்து உபசரித்தபின் அவ்வந்தணர்களா லெடுத்துக் கொடுக்கப்பெற்ற மகரகண்டி உத்திரஜெஞ்ச முதலிய ஆபரணங்களையு மணிந்துகொண்டு அவ்வாலய இரண்டாவது பிராகாரத்தைப் பிரதக்ஷணமாக வந்து நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற சிற்சபை முதலியவைகளுள்ள மூன்றாவது பிராகாரத்திற்குள் நுழையு மார்க்கத்தினின்றும் பொற்சபை வரையிலிடப்பட்டுள்ள புஷ்பப் பந்தரின் கீழே செல்லும்போது தன்னைப் பகைவர்களினின்றும் பாதுகாப்பதற்காக உபேந்திரனாக அவதரித்திருக்கின்ற ஸ்ரீ விஷ்ணு மூர்த்தியை நமஸ்கரிப்பதுபோல இத்துரையவர்களும் அங்கு சயனத் திருக்கோலமாகத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற தில்லை ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாளையும் நமஸ்கரித்துக்கொண்டு பிறகு (அவ்விந்திரன் ஞானோபதேசமாதிகளைப் பெறுவதற்காகத் தேவகுரு முதலியவர்கள் வீற்றிருக்கின்ற ஞான சபைக்குப் போவதுபோல) அத்துரையவர்கள் ஸ்ரீ வியாக்கிரபாத பதஞ்சலி முனிவராதியர் சமேதராக ஸ்ரீ நடராஜப் பெருமான் எழுந்தருளியிருக்கும் பொற்சபையைக் கடந்து சிற்சபைக்கேகினர்.

உடனே அந்த நடராஜப் பெருமானுக்குத் திருப்பாவாடமாதி சகல ஆராதனைகளுஞ் செய்யப்பட்டன. அன்றியும் ஷெ துரையவர்களால் செய்வித்த தங்க வில்வமாலையையும், பொற்கவசமிட்ட சங்கையும் சுவாமிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்பின் அத்துரையவர்களைச் சிற்சபையின் பஞ்சாக்ஷரப் படியின் மீது இருக்கச் செய்து அச்சபையில் சுவாமிக்கருகாமையில் பாதவட்டில்களில் பூரித்து வைத்திருந்த தீர்த்தங்களை இத்துரையவர்

கள் சுவாமிக்குச் சமர்ப்பித்த பொற்கவசமிட்டுள்ள சங்கிஞல் முகந்து தில்லைவாழந்தணர்களிலொருவர், அத்துரையவர்களின் சிரசில் அபிஷேகஞ் செய்தனர். பிறகு மேனியுலர்த்தி வேறு ஆடையுடுத்திக்கொண்டதும் ஸ்ரீநடராஜப் பெருமான் திருவடிகளிலுள்ள புஷ்பத்தை அத்துரையவர்களின் சிரசில் வைத்து அப்பெருமான் திருமேனியில் சாத்திய மாலையை இத்துரையின் கழுத்திலிட்டு விபூதி முதலிய பிரசாதங்களுங் கொடுத்தனர். உடையார் பாளைய சமஸ்தாஞதிபதி அவர்கள் அநுப்பியிருந்த வரிசைகளை வழங்கினர். இவற்றைப்பெற்றுக்கொண்டு (முடி சூட்டிக்கொள்வதற்காகத் தனது கொலுமண்டபத்திற்குச் செல்லுகின்ற இந்திரனைப் போல) அந்தச் சிற்சபையினின்றும் புறப்பட்டு ஆதியில் இத்துரையின் முன்ஞேராகிய இரண்யவர்மச்சோழஞர் கொலு செய்த காரணத்திஞல் இராஜசபையென்று வழங்குகிற ஆயிரக்கால் மண்டபத்திற் சென்று அவ்விடமிட்டுள்ள உன்னதமான ஆசனத்தில் வீற்றிருந்தனர்.

தில்லைவாழந்தணர்களால் ஹோமாதி சடங்குகளுஞ் செய்யப்பட்டன. பிறகு தங்கமயமான மகுடத்தை ஓரந்தணரால் பொற்றட்டில் ஏந்தப்பட்டுத் தில்லைவாழந்தணர் முதலிய பெரியோர்களின் ஆசீர்வாதம் பெற்றபின் தோற்கருவி துளைக்கருவிகளாகிய பலவித வாத்தியங்களுங் கோஷிக்க அந்தணர்முதலிய பெரியோர்கள் புஷ்பமாரி பொழிய தில்லை வாழந்தணர்களிற் பெருந்தகை வாய்ந்த ஓர் தீக்ஷதாமுனிவரால் நமது சாமிதுரை சூரப்ப சோழஞருக்கு அன்றுபகல் 21 நாழிகைக்குமேல் தனுர் லக்கினத்தில்முடி சூட்டப்பட்டன.

பிறகு அந்தணர் முதலிய யாவர்க்கும் தக்ஷிணை தாம்பூலாதி யுபசாரங்களும் நடந்தன. உடனே சிரசில் கலிக்கித்துராபதித்து அழகிய இமாம் பக்ஷியிறகு சொருகப்பட்ட கிரீடம் விளங்க, இடையில் பீதகவாடை துலங்க, கழுத்திலிருந்து கணுக்காலளவும் பீதாம்பர நிறையங்கி தொங்க

சர்வாபரணலங்கிருதராய் கத்திகேடகம் முதலிய ஆயுத பாணியாய் மேற்சொன்ன பலவாத்தியங்களும் குடை சூாமரம் முதலிய பல விருதுக்களும் யானை குதிரை ஒட்டக முதலிய வாகனங்களும் முன்சொன்ன முறைப் படியே முன்னே செல்ல அதிர்வெடிகள் சப்திக்க கீழ்க் கோபுர வாயிலின் வழியாக வந்து சிவிகையிலேறி, தாம் முன்பு இறங்கியிருந்த மாளிகையைச் சேர்ந்தனர்.

உடனே அனைவர்க்கும் போஜனுதி சகலோபசாரங் களும் நடந்தன.

இஃதிங்ஙனமிருக்க அன்று இராத்திரி 7 மணிக்கு ஷெ தேவஸ்தான ஆயிரக்கால் மண்டபத்தில் பண்டித பட்ட ஸ்ரீ பாலசரஸ்வதி சுதர்சன நாராயண சாஸ்திரியா ரவர்கள் தில்லையாலயத்தினுடையவும், அங்கு ஆனந்த நிருத்தமிடும் ஸ்ரீ நடராஜப் பெருமானுடையவும், தில்லை வாழந்தணர்களுடையவும், அவ்வாலயத்தைக் கட்டுவித்த இரணியவர்மச் சோழ சந்ததியாருடையவும் பிரபாவங் களைப் பற்றி அதிசாதுர்யமாகப் பிரசங்கித்தனர். பிறகு இவர் பிரசங்கத்தைப் பற்றி வித்வான் காஞ்சீபுரம் ஆலா லஞ் சுந்தரம் பிள்ளையவர்களும் புராணிகர் சின்னையநாயக ரவர்களும் வியந்து பேசினுர்கள்.

9-மணிக்கு (புதிதாய் தேவேந்திரப் பட்டம்பெற்ற தேவேந்திரன் புஷ்பகவிமானத்தில் பவனி வரப்போகின்ருரென்றறிந்த வருணபகவான் மேகங்களையேவி வீதிகளில் தண்ணீர் தெளிக்கச் சொன்னது போல) மழையும் பெய்து நின்றது. அன்று இராத்திரி சிதம்பர தேவா லய மாடவீதி முழுமைக்கும் ஆங்காங்கு வாஷிங்டன் லயிட்டுகளென்கிற ஸ்தம்ப தீபங்கள் பிரகாசித்தன. ஆங் காங்கு கம்ப பாணங்களும் புதைக்கப்பட்டிருந்தன. சுமார் 10 மணிக்குக் காலையில் ஆலயத்திற்குச் சென்ற போது வந்த சகல வாத்தியங்களோடும் ரதகஜதுரக பதாதிகளோடும் சென்று, பின் புஷ்பப் பல்லக்கிலேறி ஆகாயவெடி பாணங்கள் தம்தம் என ஒலிக்க அதிர்வெடி

படீல்படீலென்று ஒலிக்க அனேகந் தீவட்டி மத்தாப்பு புருஸ், சைனப் பெட்டி முதலிய பாண வேடிக்கைகளோடும் அச்சிதம்பர ஆலயமாட வீதியில் நமது சாமிதுரை சூரப்ப சோழனர் பவனி வந்த காட்சி முதலியவைகள் யாவர்க்கும் வியப்பையும் பேரானந்தத்தையுங் கொடுத்தன. அன்றியும் இத்துரையவர்கட்கு நாளதுமீ 19௳ தமது நகரத்தின் அரண்மனையில் நடந்த திருமணத்தின் சிறப்பு இதிலும் பதின் மடங்கு அதிகமாகும்.

விஷ்ணுபாதசேகரர்

வித்துவான். ஜா. பசுபதி நாயகர்.

இந்த ஆதிக்கத்தைத் திருக்கைவளத்தில் கூத்தாடும்
அம்பலவர் முன்னே அபிஷேகம் பெற்றணியச்
சம்புதருனீற்றை யணிசலசக்கை உம்பர்பிரான்

அஞ்சக் கரப்படிமே லார்ந்து பட்டம் தான் புனைந்து
செஞ்சரணப் பூப் பணிக்கே சேருங்கை

சித்திர கூடத்தில் வளர் செங்கன்மாலுக்கு நவ
ரத்தினப் பணிபூணும் நாணயக்கை

என்று பாடப் பட்டுள்ளது.

சோழர்கள் சிவபக்தி அன்றி வைணவ பக்தியிலும் சிறந்து விளங்கினர். முதலாவது குலோத்துங்க சோழனது குமாரனே விக்கிரம சோழனவன். அவன் மகா விஷ்ணு பக்தனெனவும் ஸ்ரீரங்கம், ராஜமன்னார்குடி முதலிய தலங்களில் ஆலயத்திருப்பணிகள் பல செய்தானெனவும் வைணவப் பிரபந்தங்களில் போற்றப்பட்டவனெனவும் தெரிகிறது.

நான் மேலே கூறிய ராஜ ராஜ ஸ்ரீமான் சாமிதுரை சூரப்ப சோழனர் அவர்கள் தென்னற்காடு ஜில்லா வன்னிகுல க்ஷத்திரிய சங்கத்திற்குத் தலைவராய் இருந்து வந்தார். சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க 19-வது ஆண்டு விழா சென்னை தண்டையார்ப்பேட்டையில்

29-12-1907ல் கூடிய காலத்தும், மகா சங்க 22-வது ஆண்டு விழா காஞ்சி மகாநாட்டில் 27-12-1911ல் நிகழ்ந்த போதும் மேற்படி சோழனர் அவர்களே அக்ராசனத் தமர்ந்து யாவரும் களிக்க அம்மகா சபையை நடத்தி வைத்தார்கள்.

அவருக்குப் பின் அவர் சகோதரர் ராஜ ராஜ ஸ்ரீமான் தில்லைக்கண்ணு சூரப்ப சோழனர் அவர்கள் 25-12-21ல் சிதம்பர மகா க்ஷேத்திரத்தில் கூடிய சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகா சங்க 33-வது ஆண்டு விழாவிற்கு அக்ராசனம் வகித்தார். அதுகாலை அவருக்களித்த வந்தனோபசார வாழ்த்துப் பத்திரமாவது,

சென்னை வன்னிகுல க்ஷத்திரிய மகாசங்க 33-வது வருஷ மஹோற்சவத் தலைவரும், பித்தர்புரம் ஜமீன்தாரரும், தென்னாற்காடு ஜில்லா சங்க அக்ராசனதிபதியுமாகிய
ராஜராஜ ஸ்ரீமான்
தில்லைக்கண்ணு சூரப்ப சோழனர் அவர்களுக்கு
வரவேற்புச் சபையார் சமர்ப்பித்த

வந்தனோபசாரப் பத்திரம்.

(சேலம் ராஜரிஷி சு. அர்த்தநாரீச வர்மா அவர்கள் பாடியது.)

மாமறையும மறைநெறியும் வானும்வாழ
மன்றிலின்ப நடங்குனிக்கும் வள்ளல்தம்மைத்
தூமறையோ ருடன்போந்து தொழுதுவாழ்த்தித்
துயருடலப் பிணிதொலைத்துச் சுடரோனகி
நேமமிகு மந்தணர்க ளென்றும்வாழ
நிலைநகர நிருமித்து நிருத்தம்போற்றி
யேமமிகு தில்லைநக ராண்டவெங்கள்
இரணியவன் மன்மதலா யிதனைக்கேண்மோ.

காடவர்கின் முன்னோர்கள் நிருத்தமாடுங்
கடவுளுக்கே வழிவழியிற் றெண்டுபூண்டிங்
காடிபஞ்சாக் கரப்படியி லபிடேகத்தை
யாயிரக்கான் மண்டபத்தின் முடியுஞ்சூடிப்
பாடுமறை விதிபோற்றிப் பனுவல்போற்றிப்
பாரறியச் சோழர்களாய் வாழ்ந்ததொல்லை
நீடுபுகழ்ப் பரம்பரையி லினிதுவந்தாய்
நீயெனினே மகிமையெலா நினதேயையா.

வளவர்பிரான் குலோத்துங்கன் மன்றுளாடும்
மணிமகிழ்பே ரம்பலத்தை மாழைவேய்ந்தும்
உளமகிழத் திருத்தொண்டர் புராணந்தன்னை
யுலகுதனில் வெளிதந்துஞ் சேக்கிழார்க்கே
புளகமுடன் பெயர்சூட்டிப் பெருமைகாட்டிப்
புனிதமிகு மம்பலச்சா சனமுந்தீட்டி
யளவரிய புகழ்நீட்டி யாடுமீசன்
அடியடைந்த பெருமைநினக் காகுமன்றோ.

பின்னோர்நாள் பராந்தகப்பேர் பெருமான்றில்லைப்
பெம்மானார் சிற்சபையைப் பொன்னாலாக்கி
முன்னோர்கள் வழித்தொண்டை முற்றியிங்கே
முடிசூட்டித் தமிழகத்தை முழுதுமாண்டான்
மன்னாதி மன்னர்களாய்ப் பலபேருங்கள்
மரபார்கள் வாழ்ந்தகதை மறக்கற்பாற்றோ
சின்னாள்முன் சாமிதுரை சோழர்க்குற்ற
தில்லைநகர் முடிசூட்டுச் சிறப்புந்தானே.

சிறப்பறிந்தார் கிலகவாண் டைந்தாமாதஞ்
சிற்சபையி லஞ்செழுத்துப் படியிலீசன்
நிறப்படிவச் சங்கதனு னிருத்தற்காட்டு
நீள்பெருமை மஞ்சனத்தை கினதுமுன்னோன்

பெறப்பருவம் வாய்ந்துமுடி சூடித்தில்லைப்
பெருமானைப் மன்றலுற்ற பெருமையெல்லா
மறப்பதுவோ மனவெளியின் மாறுங்கொல்லோ
வளவர்மரு மானுங்கள் மகிமைதானே.

சாமிதுரை சூரப்பச் சோழனுநின்
றமயனிந்த சங்கவிழாத் தலைவனாகத்
தேமருவு கச்சிதனிற் சென்னை தன்னிற்
றிகழ்ந்ததுவுங் கூடனகர் ஜில்லாசங்க
மாமருவு மதிபதியாய் வாழவாழ்ந்த
மதிதனையு நீயுணர்ந்தாய் மதித்தாயெங்கள்
கோமகனே குலச்சபையின் றலைமையின்று
குறிகொண்டாய் மரபொழுக்க நெறிகொண்டாயே.

கொண்டாடு நினதுசெய லறிந்தபின்னுங்
குடிப்பெருமை யரியலூர் மழவர்கோவுந்
தண்டாத கீர்த்தியுடை யாருமிந்தச்
சங்கவிழாத் தனிலொருநாள் தலைமையேற்றுப்
பண்டாகுந் தமிழரசர் மான்மியத்தைப்
பாரறியச் செயலுனது பாரமன்றோ
திண்டோளி லார்மிடைந்து வாழ்கவாழி
சிவகாம சுந்தரிசேர் சிவத்தைப்போன்றே.

இவருக்குப் பிறகு இவரது குமாரர் ராஜ ராஜ ஸ்ரீமான் ஆண்டியப்ப சூரப்ப சோழனுருக்கு 19-8-43ல் பரம்பரை வழக்கப்படி பஞ்சாட்சரப்படி அபிஷேகமும், முடிசூட்டு விழாவும், திருமணமும் நிகழப்பெறறன. இதைக் குறித்து ஆங்கில தமிழ் பத்திரிகைகளில் வெளியான விஷயமாவன:-

மகுடாபிஷேகத் திருமணம்.

24-8-43ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்ததின் மொழிபெயர்ப்பு:-

சிதம்பரம் ஆகஸ்ட் 21.

சோழமன்னர் மரபினரும், இரணியவர்மச் சக்ரவர்த்தியின் பரம்பரையினருமாகிய பித்தர்புரம் (ஜமீன்தார்) ஸ்ரீ தில்லைக்கண்ணு சூரப்பசோழனார் அவர்களின் திருக்குமாரர் பித்தர்புரம் ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்கு உடையார் பாளையம் சமஸ்தானம், கச்சிப் பள்ளிகொண்ட ரங்கப்ப காளாக்க தோழ உடையார் என்னும் மகாராஜா சாமிதுரை அவர்களின் திருக்குமாரத்தி ஜகஜகாந்தி ஆயாள் என்னும் ராஜகுமாரி அவர்களுக்கும் திருமணம் மிகச் சிறப்பாகச் சிதம்பரத்தில் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு மாபெருங் குழுவினர் கூடியிருந்தனர். தில்லை நடராஜர் ஆலய பொது தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீ ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்குத் தில்லைகோயில் மரியாதைகளுடன் சங்காபிஷேகமும், பட்டாபிஷேகமும் நிறைவேறின. மன்னர் அவர்களுக்குச் சரசகவி பிரமஸ்ரீ, N. S. சிதம்பரேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார். அன்றியும் சிதம்பரம் வன்னிகுல க்ஷத்திரிய சங்கத்தாராலும், தில்லைக் கருணை கழகத்தாலும் மன்னர் அவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

பித்தர்புரம் ஜமீன்தார் ராஜ ராஜ ஸ்ரீமான்
ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களுக்குப்

பாராட்டுக் கூட்டம்

(16-10-43-ல் சுதேசமித்திரனில் பிரசுரமானது.)

பித்தர்புரம் ஜமீன்தார் ஸ்ரீமான் தி. ஆண்டியப்ப சூரப்பசோழனார் 19-8-43-ல் முடிசூடித் திருமணம்செய்து கொண்டதைப் பாராட்டுவதற்கு வன்னியகுல மன்னர் மரபினரால் நேற்று மாலை சிதம்பரம் தில்லை அம்மன் நாடக

மண்டபத்தில் சிதம்பரம் ஜில்லா முன்சீப் ஸ்ரீ ஏ. கெஜபதி நாயகர் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடை பெற்றது. ஸ்ரீ ஜமீன்தாருக்கு ஒரு வாழ்த்துப் பாட்டு படித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு மேற்படி மரபினர் சார்பாக ஜமீன்தாருக்கு ஓர் தங்கச் சங்கிலி (ரூ. 1500 மதிப்புள்ளது) காணிக்கையாகக் கொடுக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமான்கள் அட்வகேட் வி. வி. சீனுவாசாச் சாரியார், ராவ்பகதூர், வி. எஸ். ஸ்ரீநிவாசாச்சாரியார், சென்னை, டெபுடி மேயர் வி. பார்த்தசாரதி நாயகர், திருவேங்கட நாயனார், முனிசிபல் கமிஷனர், கே. ராம லிங்க முதலியார், சிதம்பரம் ஜில்லா ரெஜிஸ்டிரார் கே. குமாரசாமி நாயகர் முதலியவர்கள் ஜமீன்தாரைப் பாராட்டியும், வன்னிகுல க்ஷத்திரிய மரபினர்கள் படிப் பில் பின்னணியில் நிற்கிறார்கள் என்றும், அவர்கள் படிப் பில் முன்னேற்றமடைந்தால்தான் சோழ மன்னரின் பரம் பரைஎன்று சொல்லிக் கொள்வது பொருந்துமென்றும், ஜமீன்தார் தலைமையின்கீழ் மேற்படி வகுப்பினரின் படிப் பின்மையைப் போக்கப் பாடுபடவேண்டுமென்றும் பேசி னார்கள். மேலும் மேற்படி மரபினர்களைச்சார்ந்த மாணவர் களுக்கென்று ஒரு ஹாஸ்டலும் பிரத்தியேகமான தங்கும் விடுதி ஒன்றும் சிதம்பரத்தில் அமைக்கவேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசப்பட்டது. மேற்படி கூட்டத்திலேயே மாணவர் ஹாஸ்டலுக்காக ரூ. 2500-க்கு கையெழுத்திடப் பட்டது. கடைசியாக ஜமீன்தார் மேற்படி பாராட்டுதலுக் குத் தக்க பதிலளித்தார். கூட்டத்திற்குப் பின் ஜமீன் தார் ஊர்வலமாக அன்னார் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

1943-வருஷம் நவம்பர் மாதம் 14-ந்தேதி திருவண் ணாமலையில் நிகழ்ந்த வடஆற்காடு ஜில்லா வன்னிகுல க்ஷத்திரிய சங்க வெள்ளிவிழாவிற்கு மேற்படி சோழனார் அவர்கள் தலைமை வகித்து மிக்க கம்பீரமாய் நடத்தி வைத்தார். அவை யனைத்தும் அச்சங்கத்தார் வெளியிட் டுள்ள வெள்ளிவிழா வெற்றி மலரில் காண்க.

சிதம்பரம் நடராஜப் பெருமான் பஞ்சாக்ஷரப்படியில்
அபிஷேகமும், ஆயிரக்கால் மண்டபத்தில் முடி சூட்டப்
பெற்றவருமான பித்தர்புரம் ஜமீன்தார் ராஜராஜ ஸ்ரீமான்
தி. ஆண்டியப்ப சூரப்ப சோழனர் அவர்கள்.

அதன்பிறகு பிரஞ்சிந்தியா புதுவை வன்னியர் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் வெள்ளிவிழா புதுவை மாநகரில் 6-2-44-ல் வெகு ஆடம்பரத்துடன் நிகழ்ந்த காலையும் நமது மதிப்பிற்குரிய மாட்சிமை மிக்க ராஜராஜ ஸ்ரீமான் தி. ஆண்டியப்ப சூரப்ப சோழனார் அவர்களே அக்ராசனராக அமர்ந்து கண்ணுக்கினிய காட்சியாக யாவருங் கண்டு களிபேருவகை எய்தும்வண்ணம் நடந்தேறியது. அச்சிறப்பும் அங்கு அவருக்களித்த வரவேற்புப் பத்திரங்களும் புதுவை வன்னியர் கல்வி அபிவிருத்தி சங்கத்தார் வெளியிட்டுள்ளார்கள். மேற்படி சங்கங்களில் நிகழ்ந்தவைகள் அனைத்தையும் இங்கு வெளியிடுவதாயின் அதுவோர் பாரதமாக விரியும்.

1947ஸு செப்டம்பர்மீ 28உ ஆதிவாரம் சென்னை திருமயிலை மகாக்ஷேத்திரத்தில் கூடிய சென்னை வன்னி குல க்ஷத்திரிய மகா சங்க 59-வது ஆண்டு விழாவிலும் மேற்படி சோழனார் அவர்களே அக்ராசனம் வகித்து மிகச் சிறப்புடன் நடத்திவைத்தார்.

தமிழ் மன்னர் சந்ததியார்.

"அரியலூ ராட்சிபெறு மழவர்கோவு
மளகைபுரிப் பாண்டியரு முடையார்தாமும்
பெருமைமிகு பித்தர்புரப் பிரானார்பாரூர்
பிறங்குகச்சி ராயர்சிவ கிரிவாழிந்து
விரிமரபில் வழுதிகுல வேந்தர்தாமும்
வென்றிவணங் காமுடியா ரூற்றங்காலிற்
பரமவிச்சுரவன்னி மன்னர் முன்னோர்
பகர்நமது குலவுறவிற் பவித்தாரன்றே."

என வர்மா அவர்கள் பாடியுள்ளார்.

வன்னிமன்னர் சரித்திரத்தில் சேர்க்கவேண்டிய விஷயங்கள் இன்னும் பல உள்ளன. பாண்டியர் மரபைச்

சேர்ந்த சிவகிரி, ஏழாயிரம் பண்ணை, அளகாபுரி ஜமீன்தார்களுடையவும், சோழமன்னர் கால்வழியில் வந்த நல்ல நாயகபுரம், கடலங்குடி, அரியலூர், ஊத்தங்கால் முதலிய அரண்மனைச் சரிதங்களும், பல்லவப் பார்த்திபர்களாகிய உடையார் பாளையம், முகாசா பரூர் முதலிய ஜமீன் சமஸ்தானதிபதிகள் சரிதங்களையும் இத்துடன் சேர்க்க முடியவில்லை. எல்லாம் வல்ல இறைவன் அருள்கூட்டி வைக்குமானல் மேற்படி சமஸ்தான மன்னர்களின் உதவியைப் பெற்று மற்றோர் முறை வெளியிடுவோம்.

தில்லை நடராஜப் பெருமான் பஞ்சாட்சரப்படியில் அபிஷேகமும், பட்டாபிஷேகமும்பெற்ற இரு சோழமன்னர் திருவுருவப்படங்களை இத்துடன் சேர்த்திருக்கிறோம்.

திருமாவளவன் சேயேவாழ்க.
குலோத்துங்கசோழர் குலமணிவாழ்க.
திருமுறைகண்ட செம்பியர்வாழ்க.
திருத்தொண்டர்புராணம் தெரிந்தோய்வாழ்க.
ஆண்டியப்பப்பேர் அண்ணலே! வாழ்க.

என்ற வாழ்த்துதலுடன் சோழ மன்னர் சரித்திரத்தை ஒருவாறு முடித்துக் கொள்ளுவோம்.

முடிவுரை.

"குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்"

என்ற முதியோர் வாக்கின்படி தற்காலம் பரிதாப நிலையை யடைந்திருக்கும் வன்னியர்களுக்கு நூற்பிரமாணங்களும், செப்பேடு சிலாஸாஸன ஆதாரங்கள் பல விருந்தும் கல்வியில்லாக் குறையே பெருங் குறையாக இருக்கிறது. அநேக ஆதிக்கங்களைக்கொண்டு பண்டைக் காலந்தொடங்கி அரசாண்ட ராஜ சந்ததியார்களின் செல்வம் வேற்றரசர் படையெழுச்சியால் கொள்ளை போய்விட்டமையால் கல்வியிழந்தனர்; கல்வி யிழக்கவே பக்தி நாகரிகம் குறைந்தது; பக்தி நாகரிகம் குறையவே வறுமை மேலிட்டது; இதனால் மேற்காட்டிய பல நூற்களிலும், செப்பேடு சிலாசாசனங்களிலும் குறித்துள்ள வன்னிகுல க்ஷத்திரியர்கள் இவர்கள் தானோ? அல்லது வேறு யாவரோவென்று அன்னியர் நினைக்க அவ்வளவு பரிதாபநிலையை யடைந்தனர். இதையெல்லாம் கவனித்தே சென்னைமா நகரிலும், இதர ஜில்லாக்களிலும் வன்னிகுல க்ஷத்திரிய சங்கங்களை ஆங்காங்கு ஏற்படுத்தி அவர்களின் சீர்திருத்தத்தின் பொருட்டுப் பல குலாபிமானிகள் பாடுபட்டு வருகின்றனர். சங்க நோக்கம் எங்கும் பரவி கல்வி, ஒழுக்கம், ஒற்றுமை, கைத்தொழில், விவசாயம், அரசியல் முதலிய துறைகளில் முன்னேற்றமடைந்து, குலதர்மப்படி ஒழுக்கசீலராய்வாழ்ந்து, வன்னிய உலகமெங்கும் புண்ணியம் பெருகி மங்களம் உண்டாக எல்லாம் வல்ல நம் குல தெய்வமாகிய ஸ்ரீ சொர்ணகாமாட்சியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஏ:2

சிலை எழுப

மூலமும் உரையும்,

வன்னிமன்னர் சரித்திரமும்.

கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பர் வன்னிகுல க்ஷத்திரியர்கள் பேரில் பாடிய இந்நூலுக்குப் பேழைக்குடி வித்துவான் ம. துரைசாமி நாயகர் அவர்கள் எழுதிய தெளிபொருள் விளக்க வுரையுடனும் தமிழ் நாட்டிற் புகழ்பெற்ற பல வித்வமணிகளின் சாற்றுக் கவிகளுடனும் வெளியிடப் பட்டது.

வன்னிமன்னர் சரித்திரத்தில் சேர அரசர்களுடையவும், சோழ மன்னர்களுடையவும் சரித்திர, சாஸன, அனுபவக்குறிப்புகளுடனும், சோழ மன்னர் திருவுருவப் படங்களுடனும் பிரசுரிக்கப் பட்டது.

இப்புத்தக விலை ரூ. 2.

புத்தகம் கிடைக்குமிடம்.—

1. ஸ்ரீ பாரதி பிரஸ்,
   சூளை, சென்னை.
2. வன்னிகுல மித்திரன்
   ஆ. சுப்பிரமணிய நாயகர்,
   பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

தபாலில் பெறவிரும்புவோர் மேற்கண்ட விலாசத்திற்கு ரூ. 2-6-0 அனுப்பினுல் ரிஜிஸ்டர் புக் போஸ்டில் அனுப்பப்படும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டு அனுப்பவேண்டும்.